(198)




இ
விவர மூல
நன்கு விளக்
களைச் சேர்த்து
மென்பதை இந்நூல் நன்ற
வும் தோழன்' என்று அவ
மிகப் பெரிதும் உடைய ஒருவ
களுக்குத் தாங்களே கூடியவ
கொள்ளவும் இந்நூல் மிகவும் உ

காதலருக்கு இன்பந்தரும் நூதன நூல்

அன்பர்கள் ஆவலுடன் எதிர்பார்த்த ஆனந்த சாஸ்திரம் வெளியாயிற்று!

# இன்பவாழ்க்கையின் இரகசியங்கள் -

(மூன்றும் பதிப்பு)

அழகிய நிலைமை கவிகோ கொடையுடன் செய்யப்பட்டு கண்

ணைக் கவரத்தக்க அநேக ஆகிடங்காளப் படங்களுடன்



400-பக்கங்களுக்குமேல் அழகிய பெருக்கையிட்

டு சுத்தமான எழுத்தில் அச்சிட்டப்பட்டுள்ளது.

## இதன் விலை ரூபா 2.

ஆனந்தபோதினி சந்தாதாரர்களுக்கு விலை ரூபா 1-8-0

இது காதலர்க்கு இன்பந்தரும் நூதன நூல்; போகானந்தத்தை விரும்பும் சீமான்கள் ஆவலுடன் எதிர்பார்த்திருந்த ஆனந்த இரகசிய சாஸ்திரம்.

இது காதல் இன்பத்தை உள்ளவாறுணர்ந்து அனுபவித்து, இல்வாழ்க்கையை நல்வாழ்க்கையாக நடத்திப் பேரானந்தக் கடலில் மூழ்கி, சந்ததிகளைப் பெற்று, மறுமைப் பயனையும் அடைதற் கேதுவாயிருக்கும்படி பற்பல இன்பமார்க்கங்கள் நிறைந்த இந்நூல் இப்போது இனிய தமிழ்நடையில் வெளி

யிடப்பெற்றிருக்கிறது. இதில் நமது பூர்வீக கொக்கோக சாஸ்திரத்தின் சாராம்சங்களும், அகப்பொருள் நூல்களின் கருத்துகளும், தேகதத்துவ சாஸ்திரங்கள், வைத்திய சாஸ்திரங்கள் முதலியவற்றிற் கூறப்பட்டிருக்கும் பல அரிய விஷயங்களும், நாகரம், தெலுங்கு, கன்னடம், மராட்டி, அராபி, இந்துஸ்தானி, பார்ஸி, இங்கிலீஷ், பிரெஞ்ச் முதலிய பாஷைகளிலுள்ள இன்பரச நூல்களின் கொள்கைகளும், இன்பவாழ்க்கையின் இரகசிய முறைகளும், அவற்றிற்குப் பொருத்தமான மனத்தையும் கண்ணையும் கவரும் ஆப்டோன் படங்களும், லயன்பிளாக்குகளும், இன்னும் இல்வாழ்க்கைக்கு இன்றியமையாதனவாகிய அநேகம் விஷயங்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இதனை வாங்கிப் படிப்போர் உண்மைக் காதல் என்பது இன்னதென்பதையும், இன்னவிதமானவர்களை மணம் புரிந்தால்தான் இன்பம் ஏற்படுமென்பதையும், இல்வாழ்க்கையில் இன்னவித மணக்கிரமங்களை அனுசரித்தால்தான் அளவற்ற ஆனந்தமுற்று அழகிய சந்ததிகளைப் பெற்று ஜீவித்திருக்கலா மென்பதையும் உணர்ந்து இவ்வுலகத்தில் அடையவேண்டிய இன்பத்தையும், மறுமை யின்பத்தையும் அடைவார்கள். இதனை ஒவ்வொரு குடும்பத்தினரும் வாங்கி வாசிக்கலாம்.

ஷை தெலுங்கு பதிப்பு விலை ரூபா 2.

## இந்திராபாய் அல்லது இந்திரஜாலக்கள்ளன்

இதில் சம்பந்தப்பட்ட குற்றவாளியாகிய முஷ்டிக்கரம் என்ற கள்ளன் கல்வி சாஸ்திர ஆராய்ச்சி, தந்திரம், சாமர்த்தியம் முதலிய யாவும் உடையவனாதலின், அவன் தன் கூட இருக்கும் ஆட்களுக்குக்கூட தன் சுய உருவத்தைக் காட்டாமலே கேட்போர் நெஞ்சம் கலங்கும்படியாகச் செய்யும் பல கொலைகளவுகள் அதிசயமானவைகளே. இந்திராபாய் பன் முறைகளில் அக்கள்ளனிடம் சிக்கிக்கொண்டு சற்றும் எதிர்பாராத ஆச்சரியமான விதமாய்ப் பிராணாபத்துக்களி லிருந்து தப்புவதும் அவனைக் காப்பாற்றவும், முஷ்டிக்கரத்தைக் கண்டு பிடிக்கவும் துப்பறியும் கிருஷ்ணராவ் செய்யும் அற்புத சாமார்த்தியங்களும் வாசிப்போர்க்கு மிக்க பிரமையை யுண்டாக்கும்.

இதன் விலை ரூபா 2—8—0

18751C

## தமிழ் மெட்டீரியா மெடிக்கா

என்னும் அருமையான வைத்திய நூல். 18751C

# MATERIA MEDICA

இவ்வரிய பெரிய வைத்திய புஸ்தகமானது ஆங்கில மருந்துக் கலப்பு விவர முறைகளைத் தமிழில் விளக்கமாக உள்ளங்கை நெல்லிக்கனிபோல் நன்கு விளக்குவது. இன்னின்ன நோய்க்கு இன்னின்ன விதமாக மருந்துகளைச் சேர்த்து மிக்சர் (Mixture) முதலானவை செய்து சாப்பிடவேண்டுமென்பதை இந்நூல் நன்றாகக் கூறுகின்றமையால் இதை ஓர் 'ஆபத்துக் குதவும் தோழன்' என்று அனைவரும் நம்பலாம். இது வைத்திய அனுபவம் மிகப் பெரிதும் உடைய ஒருவரால் எழுதப்பட்டது. ஒவ்வொருவரும் தங்களுக்குத் தாங்களே கூடியவரையில் நோய்களுக்குப் பரிகாரம் செய்து கொள்ளவும் இந்நூல் மிகவும் உபயோகப்படும். இதன் விலை ரூபா 3.

---

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

18751C

# தத்வசங்க்ரஹ ராமாயணம்

## இரண்டாம் பதிப்பு.

இது ஸமஸ்கிருதத்திலிருந்து மொழிபெயர்க்கப்பட்ட அருமையான நூல். இதனை ஒருமுறை படிப்பவர்கள் இம்மை மறுமை யென்னும் இருவகை வாழ்விற்குரிய சாதனங்களை யுணர்ந்து மக்களாய்ப்பிறந்த தாம் அனுஷ்டிக்க வேண்டிய ஒழுக்கங்களைக் கைக்கொண்டு பகவானுடைய திருவருட்குரியவராக விளங்குவர் என்பதில் ஐயமில்லை. இந்த கிரந்தம் துஷ்டநிக்ரஹ சிஷ்டபரிபாலன நிமித்தம் உலகத்தில் ஸத்யவந்தனாக விளங்கிய தசரத பூபதிக்கு ஸ்ரீராமனாக அவதரித்த ஜகத் பிரபுவின் குணாதிசயங்களைப்பற்றிப் பேசுவது.



ஸ்ரீ ராமாவதாரத்தின் உண்மை இதனை படிப்பவர்க்கு உள்ளங்கை நெல்லிக்கனி போல் விளங்கும். இதனைப்படித்தால் அநேக ஞான நூற்களைப் படித்த பயனை ஒருங்கே யடைதல் கூடும். ஸ்ரீராம பூஜா விதிகளும் அர்ச்சனைகளும் இதன்கண் விவரிக்கப்பட்டுள்ளன. இதுவரையில் வெளியான ராமாயணங்களை விட மும்மடங்கு மேலான தத்வ உபதேசங்கள் இதன்கண் காணலாம்.

உபந்யாசகர்களுக்கு வேண்டிய பல அரிய விஷயங்களுடன் கூடியது. ஸ்ரீராமசரிதையை வாசிப்பதே இகபர நன்மை யளிக்கு மென்பர் பெரியோர். இதில் எண்ணிறந்த மிக்க அருமையான விஷயங்கள் அடங்கியிருக்கின்றன.

புஸ்தகம் சுமார் 520 பக்கங்கள் கொண்டது. இங்கிலீஷ் கிலேஸ் காகிதத்தில் டபுள்க்ரௌன் 4 பக்க அளவில் அச்சிடப்பட்டு முழுகாலிகோ பைண்டு செய்யப்பட்டது. இதன் விலை ரூபா 4—0—0.

# ஸ்ரீமத் கம்பராமாயண வசன சங்கிரகம்

## (சப்தகாண்டங்கள் அடங்கியது.)

(மூன்றாம் பதிப்பு)    இதன் விலை ரூபா 2.

ஸ்ரீ இராமர் பட்டாபிஷேகம் ஆப்டோன் படம் சேர்க்கப்பட்டது. மிக்க திருத்தங்களோடு கிளேஸ் கடிதத்தில் அச்சிடப்பட்டுள்ளது.

☞ சொற்பக் காப்பிகளே அச்சிடப்பட் டிருக்கின்றன. ஆதலின் புஸ்தகம் வேண்டியவர்கள் முன்னரே எழுதிப் பெற்றுக்கொள்க.

ஸ்ரீ இராமபிரான் சரிதையை விரித்துக்கூறும் இந்த இராமாயணமானது மிக்க புண்ணிய கதை யென்பது உலகறிந்த விஷயம். இதனைப் பாராயணஞ் செய்வதாலுண்டாம் பயன்கள் அளவிடற்கரியனவாம். இதனைப் பக்தி சிரத்தையுடன் படிப்பவர்க்கு உலகத்தில் விரும்பக்கூடிய பொருள்களெல்லாம் கைக்கூடும்; உயர்ந்த அறிவுண்டாகும்; கீர்த்தி அதிகரிக்கும்; மோக்ஷத்தை அடையும் மார்க்கம் ஏற்படும்; இலக்குமி கடாக்ஷ முண்டாகும்.

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

## எமது சொந்தப் பிரசுரங்கள்.

# கைவல்ய நவநீத வசனம்.

## (இரண்டாம் பதிப்பு.)

ஸ்ரீமான் ஆரணி-குப்புசாமி முதலியார் அவர்கள் எழுதியது.

ஆன்மாக்கள், மாயையினின்றும் விடுபட்டு மோக்ஷசாதனத்தை அடையும் பொருட்டுக் கருணாநிதியாகிய கடவுள் அருளிய வேதத்தின் உட்பொருள்களைத் தழுவிப் பல மகான்கள் பல நூல்களை இயற்றி யிருக்கின்றனர். அவற்றுள் தாண்டவராய சுவாமிகள் இயற்றிய கைவல்ய நவநீதமும் ஒன்று. இது எவரும் எளிதில் வாசித்துணரும்படி வசனமாக எழுதி வெளியிடப்பட்டிருக்கிறது. இதனால் முத்தி மார்க்கத்தை எவரும் நன்குணரலாம்.

இதன் விலை ரூபா 1—8—0

# இராஜாமணி அல்லது ஓர் அபூர்வ மர்மம்.

கற்புக்கரசியாகிய ஓர் உத்தமியின் சரித்திரத்தை மெத்தத் தெளிவாக விளக்கிக் காட்டக்கூடியது. இராஜாமணி யென்னும் பெண்மணி பெருந்திருட்டும் மிகுந்த கொலைத்தொழிலுமுடைய ஒருவனுக்கு மகளாயிருந்தும், அவனைப்போலவே பெரும் பாதகச் செயல்களையுடைய ஒரு முரடனுக்குச் சகோதரியாயிருந்தும் அவர்களிடம் அகப்பட்டுப் பெரிய ஆபத்திற் சிக்கிய பூபாலம் பிள்ளை யென்பவரைக் காப்பாற்றி அவருடன் தானும் வெளியேறி அவரை மணந்துகொள்வது, அதிசயம், பொருந்திய செயல்களாயுய படிப்போர் மனதைக் கவரக்கூடியதாயும் இருக்கும். இதன் விலை ரூபா 2.

**ஞானசெல்வம்பாள் (5-பாகங்கள்)    9 10 0**

நம்மிடம் இதுவரை வெளியாகியிருக்கும் அநேகம் நாவல்களில் இது தான் மிகப் பெரியது. "இரும்பைக் காந்தம் இழுக்கின்றவாறுபோல்" படிப்போர் மனத்தை இழுத்துக்கொள்ளத் தக்கது. கதை மிகப் பெரியதாயினும், வாசகர்களின் மனம் சிறிதும் அயர்ச்சியடையாமல் மேலும் ஆனந்தமாக முடிவுவரை யிருக்கும். சில பெண்கள் தங்களுக்கு மேலதிகாரிகளின்றித் தங்கள் இஷ்டம்போல் எங்கு முலவிச் சகல ஆடவர்களுடன் பழகிக்கொண்டிருப்பதால் நேரும் துன்பங்கள் இத்தன்மையன வென்பது நன்குவிளங்கும்.

| | | | |
|---|---|---|---|
| நான்கு பாகம் வரை ஒவ்வொன்றுக்கு விலை ரூபா | 2 | 0 | 0 |
| ஐந்தாவது பாகம் மாத்திரம் ,, ,, | 1 | 10 | 0 |
| ஆனந்தபோதினிச் சந்தாதாரர்களுக்கு ஐந்து பாகமும் சேர்ந்து வாங்கினால் ,, ,, | 8 | 0 | 0 |

**பவளத்தீவு 2 பாகம்    3 0 0**

இக்கதையில் ஒரு செல்வச் சீமான் பேராசையால் செய்யும் குற்றத்திற்காக அவன் சந்ததியார் கொடிய சாபத்தை யனுபவிப்பது யாவர்க்கும் மேலான படிப்பினையைக் கற்பிக்கும். இதில் வரும் ஒவ்வொரு ஆசாமியின் சரித்திரமும் அவரவர் தத்தமது நடக்கைகளுக்குத் தக்க பலனை முடிவில் அடைவதும் ஒவ்வொரு நேர்த்தியான நீதியைப் போதிக்கும். இக்கதை ஆரம்பமுதல் முடிவுவரை வாசிப்போர் மனதைப் பூரணமாய்க் கவர்ந்து கொண்டு மிக்க களிப்பை யளிக்கும்.

# சந்திராபாய்

அல்லது

## சங்கரதாஸின் வெற்றி.

ரஸாயன ஆராய்ச்சி, மின்சாரம், டெலிபோன், ஆகாயக்கப்பல், வெடிகுண்டு, டார்படோப்படகு முதலானவைகள் தோன்றியிருக்கும் நவீனநாகரீகப்போக்கின் சாதகபாதகங்களை இந்நாவல் வெள்ளிடைமலைபோல் ஆங்காங்கு வெளிப்படுத்துகிறது. இதன் விலை ரூபா 2—0—0.

# கனகபூஷணம் 2-பாகம்.

இதிலுள்ள கதாநாயகிக்கு நேரிடும் ஆபத்துகளை நினைக்கப் படிப்போர் கண்களில் நீர் வடியும். இக்கதையில் சோகரச மொன்றேயன்றி ஏனைய ரசங்களும் பொருந்தியிருக்கின்றன. இதிலுள்ள கதாநாயகி பயங்கரமும் பிராணாபத்துமாகிய இக்கட்டுகளில் சிக்கியபோதும், தன் கற்புக்கு அழிவு நேரிடாது அதனைக் காப்பாற்றிக்கொள்வது மிக்க அதிசயமாயிருக்கும். இதில் இலௌகீகத்தில் சம்பவிக்கும் சகல நடவடிக்கைகளும் ஆசாரவொழுக்கங்களும் நமது நாட்டுமாதருக்கு அமைந்திருக்க வேண்டியவண்ணமாகச் செவ்வனே விளக்கிக் காட்டப்பட்டிருக்கின்றன. விலை ரூபா 3-8-0.

# மதனாம்பாள் 2-பாகம்.

இதில், காளிங்கனாகிய லோகநாதன் என்னும் ஓர் நயவஞ்சகன், சகோதரத் துரோகியாய் அவனை அடுத்துக் கெடுதலும், பட்டாபிராமன் என்னும் ஓர் உத்தமனைக் காதலித்திருந்த மதனாம்பாள் என்னும் உத்தமியைத் தான் மணஞ்செய்துகொள்ள விரும்பி, வேலாயுதன் என்பவனைத் தன் மோசச் செய்கைகளுக்குத் துணைக்கருவியாகக்கொண்டு பல வஞ்சனைகளைச் செய்து, மதனாம்பாளை ஆதரித்துவந்த பாங்கிக்காரர் மனைவியாகிய விமலாபாயைப் பயமுறுத்தி, மதனாம்பாளைத் தன் விருப்பத்திற் கிணங்கச் செய்வதும், பாங்கியில் மகாமாயக் களவு நடத்தி அக்குற்றத்தை நிரபராதியாகிய பட்டாபிராமன் மேல் சுமத்துவதும் படிப்போர்க்கு ஆச்சரியத்தை விளைவிக்கும்.

2 பாகமும் விலை ரூபா 3.

**காமவல்லி** இன்பரசம் பொருந்தியது, பெண்களின் மாயஜாலத்தை விளக்குவது, நீதியைப் போதிப்பது. இதன் விலை அணா 8

அற்புதமர்மங்கள் அல்லது

**ஆனந்தஸிங்கின் அஷ்டஜெயங்கள் 1 12 0**

இது, மகா அற்புத மர்மங்களடங்கிய துப்பறியும் நாவல். இதில் எட்டு விதமான கதைகள் அடங்கியிருக்கின்றன. எந்த நாட்டிலும் எப்பேர்ப்பட்ட யூகமுடைவர்களாலும், எவ்வித காரணத்தைக் கொண்டும், கண்டுபிடிக்க முடியாத அதியாச்சரியமான இரகசிய சம்பவங்கள் நிகழ்வதும், அவற்றை ஆனந்தஸிங்கு அதிகப் பிரயாசையுடனும், வெகு சாமர்த்தியத்துடனும் கண்டுபிடித்து உண்மையை வெளியாக்கிக் குற்றவாளிகளைத் தண்டனைக்குள்ளாக்குவதும், நிரபராதிகளுக்குத் துணைபுரிவதும், சத்தியத்தை நிலைநிறுத்துவதும், படிப்பவர்க்கு மிக்க மனோற்சாகத்தையும், ஆனந்தத்தையும், அறிவு விளக்கத்தையும் உண்டாக்கி, உலகத்திலுள்ள மனிதவர்க்கத்தவரின் இயற்கைகளையும் நன்கு விளக்கிக்காட்டும்.

**அமராவதி 2 பாகம் 4 0 0**

இது மிக்க பிரமையை யுண்டாக்கும் அற்புத சம்பவங்கள் நிறைந்த நாவல். ஒரு மனிதன் சுய நம்பிக்கையையும், நேர்மையான நடக்கையும், ஊக்கமுமுடையவனாயிருந்தால் அவன் தான் கோரிய காரியத்தில் கட்டாயம் ஜெயம் பெறுவான் என்பதும், எத்தகைய ஆபத்துக்களிலும் தப்பித்துக் கொண்டு கீர்த்தியும் மேலான பதவியும் அடைவானென்பதும் இதில் நன்றாய் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. அசம்பாவிதமெனத் தோன்றும் அநேக சம்பவங்கள் இதில் உண்மையாகவே நடைபெறுவது வாசிப்போர்க்கு அளவற்ற மனமகிழ்ச்சியையளிக்கும்.

**இரத்தினபுரி இரகசியம் 4 பாகம் 8 4 0**

இதில் மிக்க ஆச்சரியமுள்ளனவும், நெஞ்சு திடுக்கிடக்கூடியவையும், ஆதி முதல் அந்தம் வரையில் மனதைக் கவரக்கூடியவைகளுமான சம்பவங்கள் நிறைந்துள்ளன. பலவித நடவடிக்கைகளையுடைய பாத்திரங்களுமிருப்பதால், அநேக நீதிகளும், புத்திமதிகளும் தக்க திருஷ்டாந்த பூர்வகமாக நிரூபிக்கப்படுகின்றன.

# நெட்டாஜி சரித்திரம்.

துஷ்ட நிக்ரஹ சிஷ்ட பரிபாலனார்த்தமாக அவனியில் தோன்றி அவதார புருஷராய் விளங்கிய சிவாஜிக்குப் பக்கத் துணையாய் இந் நெட்டாஜி எப்பொழுதும் நின்று மொகலாயக் கொடுங்கோன்மையினின்றும் தேசத்தை விடுதலை செய்து சிவாஜிக்கு நேரிடவிருந்த பல விபத்துக்களையும் தடுத்து, அவருக்குச் சதிசெய்த பாவிகளின் உயிரைப் போக்கி, அஞ்சா நெஞ்சனாய் அநேக ஆபத்துக்களினின்றும் தப்பி, ஜனங்களின் அன்பையும் ஆதரவையும் பெற்று விளங்கினன். இதில் யுத்த சம்பந்தமான தந்திரங்களும் வீரர்களின் சாமர்த்தியங்களும் வெகுவாக எழுதப்பட்டு தேசபக்தியைப் புகட்டும் விஷயங்கள் நிறைந்திருக்கின்றது. இதன் விலை அணா 10.

## கிராமபோன் சங்கீத கீர்த்தனாம்ருதம்

தற்காலம் கிராமபோன் என்னும் ஸங்கீதக் கருவியில் பாடிவரும் திருச்செந்தூர் ஷண்முக வடிவு, எஸ். வி. சுப்பைய பாகவதர், டி. எம். காதர்பாஷா, எஸ். ஆர். கமலம், மிஸ் கே. ரங்கநாயகி, மதுரை மிஸ் அ. சுந்தரம், திருநெல்வேலி டி. எஸ். ரங்கம்மாள், சேலம் அம்மாகண்ணு, திருவிடைமருதூர் பவானி, சேலம் கோதாவரி, மிஸ் லோகாம்பாள் இன்னும் பல வித்வத் ரத்னங்கள் பாடிய 300 கீர்த்தனைகளை ஒருங்கு சேர்த்து ராகதாளங்களுடன் அச்சிட்டு நேர்த்தியாக பயிண்டு செய்யப்பட்டிருக்கிறது. சங்கீதாபிமானிகளுக்கு இது ஓர் பொக்கிஷம் என்பது நாம் சொல்லாமலே விளங்கும்.

**301 கீர்த்தனைகள் கொண்ட 1-ம் பாகம் விலை ரூபா 1.**
**246 கீர்த்தனைகள் கொண்ட 2-ம் பாகம் விலை ரூபா 1.**
**211 பெரிய கீர்த்தனைகளுள்ள 3-ம் பாகம் விலை ரூபா 1.**
**226 பெரிய கீர்த்தனைகளுள்ள 4-ம் பாகம் விலை ரூபா 1.**
**210 கீர்த்தனைகள் கொண்ட 5-ம் பாகம் விலை ரூபா 1.**
**195 பெரிய கீர்த்தனைகளுள்ள 6-ம் பாகம் விலை ரூபா 1.**
**ஆறு பாகமும் சேர்ந்தது ஒரே கட்டடம் விலை ரூபா 5—4—0**

---

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நெ. 16?, மதராஸ்.

# அறிக்கை.

பாடசாலைத் தலைமை உபாத்தியாயர்களுக்குத் தெரிவிப்பது யாதெனில்:—

இதனடியில் குறிக்கப்பட்டிருக்கும் பாடப் புத்தகங்களை அந்தந்த வகுப்புகளுக்கு பாடப் புத்தகமாக வைத்து நடத்திவைக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறோம். எளிய இனிய தமிழ் நடையில் பெரிய எழுத்தில் அச்சிடப்பட்டு மாணவர்கள் அபிவிருத்திக்கான பல விஷயங்கள் அடங்கியவை. எல்லாப் புத்தகங்களும் துரைத்தனத்தாரால் அங்கீகரிக்கப்பட்டன:

மாதிரிக்காப்பி இனாமாய் அனுப்பப்படும்.

## புஸ்தகங்களின் விவரம்.

சென்னை பச்சையப்பன் ஹைஸ்கூல் தமிழ்ப் பண்டிதர்
ஆ. வீ. கன்னைய நாயுடு அவர்கள் எழுதியது.

| | | ரூ. | அ. |
|---|---|---|---|
| 2-ம் வகுப்பு மாணவர் தமிழ் வாசகம் | (2-ம் புத்தகம்) | 0 | 8 |
| 3-ம் வகுப்பு டை | (3-ம் புத்தகம்) | 0 | 4 |
| 4-ம் வகுப்பு டை | (4-ம் புத்தகம்) | 0 | 5 |

## உப பாடமாக வைப்பதற்குரிய புத்தகங்கள்.

வரகவி-திரு-அ. சுப்பிரமணிய பாரதியார் எழுதியது. ரூ. அ.

| | ரூ. | அ. |
|---|---|---|
| நாலுமந்திரி கதை | 0 | 4 |
| பரசுராமன் அல்லது நல்ல பிள்ளையின் நடவடிக்கை | 0 | 3 |

தமிழ்ப் பண்டிதர் நாகை-சொ. தண்டபாணிப் பிள்ளை அவர்கள் இயற்றியது.

| | ரூ. | அ. |
|---|---|---|
| மணவாளன் என்னும் பேராசைப் பித்தன் | 0 | 3 |

தமிழ்ப்புலவர் மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை, மங்கலம். குப்புசாமி முதலியார் அவர்கள் இயற்றியது

| | ரூ. | அ. |
|---|---|---|
| கண்ணபிரான் | 0 | 4 |
| விமலன் அல்லது விதியின் வெற்றி | 0 | 4 |

கோமளேச்வரன் பேட்டை, வித்வான். ம. இராஜகோபால பிள்ளை அவர்கள் எழுதியது.

| | ரூ. | அ. |
|---|---|---|
| நான்கு கோடி அல்லது நான்கு கடமைகள் | 0 | 4 |
| அங்கதன் | 0 | 4 |

சென்னைத் தொண்டைமண்டலம் ஹைஸ்கூல் தமிழ்ப் பண்டிதராயிருந்த மே. சக்கரவர்த்தி நயினார் அவர்கள் இயற்றியது.

| | ரூ. | அ. |
|---|---|---|
| சத்தியவஞ்சனன் | 0 | 4 |

**ஆனந்தபோதினி புஸ்தகசாலை,**
தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

உ

# ஆனந்தபோதினி

ஒரு சிறந்த மாதாந்தத்
தமிழ்ச் சஞ்சிகை.

“ எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு”—திருவள்ளுவர்.

(தொகுதி 16.)

பிரமோதூத௵ ஆடி௴ முதல் பிரஜோற்பத்தி௵
ஆனி௴ வரையில்
**1930௵ ஜூலை௴ முதல் 1931 ஜூன்௴ வரையில்**

**நா. முனிசாமி முதலியார்,**
“ ஆனந்தபோதினி ” ஆபீஸ்,
நெ. 6, லாயர் சின்னதம்பி முதலி தெரு,
சௌகார்பேட்டை, மதராஸ்.

*All Rights Reserved.*

காலிகோ பைண்ட் விலை தபா 1—6—0 } 1931. { தபாற் கூலி வேறு.

# ANANDA BODHINI

## GOLDEN OPINIONS

From Rao Saheb Late T. Ramakrishna Pillai Avl., B.A., F.M.U., F.R.H.S., Chairman, Board of Examiners in Dravidian Languages, Madras University.

I am a regular reader of "Ananda Bodhini" the Tamil monthly published in George Town and I am glad to take this opportunity of expressing my appreciation of the way the Journal is conducted. It is just the kind of magazine we want for the Indian women in their houses and the conductors of the Journal have my best wishes for the success of their undertaking.

*Madras, 28th Nov. 1915.*
THOTTAKADU HOUSE. } (Sd.) T. RAMAKKISHNA PILLAY.

---

From Rao Bahadur A. C. Pranatartihara Iyer Esq., B.A., I.S.O., Retired Inspector of Schools, now Registrar of Books, Nungambakkam.

I have read several numbers of "**Ananda Bodhini**." It is conducted on right lines. The matter is suitable and the diction is unobjectionable. I can unhesitatingly say that the journal deserves public encouragement and support.

NUNGAMBAKKAM,
*Madras, 5th Dec. 1915.* } (Sd,) A. C. PRANATARTIHARA IYER.

---

We have received the current number of the Tamil monthly "**Ananda Bodhini**," containing a variety of information on several subjects of every day importance. The special feature of the monthly is that a separate section is set apart for giving advice to women either in the form of abstract statements, or small stories containing moral lessons.—*Hindu 22-9-15.*

---

Dear Sir,

Your Tamil monthly entitled "**ANANDA BODHINI**"..........................is written in *easy*, *clear* and *readable* style, *well-suited*, *particularly*, to *ladies* who take a liking to it on account of the varied subjects of interest dealt therein, calculated to mould their characters. That such a monthly should be in existence, side by side with the Anglo-Indian contemporaries, is very much to be appreciated. The subjects dealt within the short compass of the monthly are such that they deserve to be *read* and *re-read* from the view point to quality in contradistinction from style and rhetoric, with a select few of our readers seem to yearn for, as is evident from the pages of the current number *i.e.* pages **288** and **289**. A majority of the subscribers now on the rolls will be at one with me when I say that the style now adopted would conduce to the well-being and uninterrupted continuances of the monthly, since it is being and has to be read by both sexes. ... ... ... ... ... It is very much to be envied that there should be over **10000*** subscribers, on the rolls which no other monthly of the kind is able to secure, or has ever before secured since inception. I wish the monthly all success.

Trivandrum, 21-1-17. } A. V. SUBRAMANIA AIYAR, F.N. S.A. (Lon.), F.C.I. (Birm.)

* Now more than **20** Thousands,

# ஆனந்தபோதினி

## 16-ம் வருடத்திய விஷய அட்டவணை.


| விஷயங்கள் | பக்கங்கள் |
|---|---|
| கடவுள் வணக்கம் ... | 1, 81, 161, 241, 321, 401, 481, 561, 641, 721, 801, 881 |
| அரும்பொருள் விளக்கம் ... | 2, 82, 162, 242, 322, 402, 482, 562, 642, 722, 802, 882 |
| "ஆனந்த போதினி" யின் 16-ம் ஆண்டு ... | 3 |
| உலகம் எவர் வசத்தது? ... | 6 |
| "ஆனந்த போதினி" யின் 16-ம் ஆண்டு வாழ்த்து ... | 9 |
| தமிழ் மொழியின் பெருமை ... | 10, 126, 181, 280, 337 |
| மூக்கூடற் பள் ... | 14, 97, 177, 275 |
| பரம்பொருளின் அழைப்பு ... | 17 |
| சாத்தனார் நூற்சிறப்பு ... | 21, 146 |
| மஹாபலிபுர மாண்பு ... | 25 |
| ஆசிரியர் பொறுப்பும் கடமையும் ... | 30 |
| பிரகிருதி சாஸ்திரம் ... | 32 |
| சிறுமாமனிசர் ... | 36 |
| விக்கிரகாராதனை ... | 41, 119 |
| சட்டமும் ஏழைகளும் ... | 45 |
| ஆரியசித்தாந்தம் ... | 49, 122, 194, 251, 332, 460, 495, 575, 732 |
| விசித்திர விநோதம் ... | 58, 152, 302, 390, 629, 709, 868, 952 |
| வீரதாரை ... | 53 |
| ஔவையும் கல்வியும் ... | 60 |
| மாதர் உலகம் ... | 66, 137, 230, 313, |
| பெண்மைக் கிழைத்துள்ள பெருங் கேடு ... | 140 |
| குமாரி கிருஷ்ணவேணி ... | 263 |
| கம்பர் கவி நலமும் மாதர் மன நிலையும் ... | 341 |
| தேவீ சந்திரகுப்தம் ... | 360 |
| தேவி இந்து மதி ... | 379 |

| விஷயங்கள் | பக்கங்கள் |
|---|---|
| பெண்கள் நிலை | ...403 |
| குடும்ப இன்பம் | ...410 |
| நகைப் பித்து | ...500 |
| சீதையின் சீலம் | ...514 |
| கௌரி அல்லது கற்பின் மாண்பு | ...586 |
| ஓர் வீரப் பெண்மணி சரிதை | ...591 |
| தேவதாசி முறை | ...643 |
| மண்டோதரியின் மாண்பு | ...677 |
| தாலாட்டு | ...708 |
| பத்தினிப் பெண்டிர் மாண்பு | ...742 |
| திலகவதியார் | ...774 |
| மங்கையர்க்கரசியார் | ...915 |
| வெண்ணெய் அண்ணல் | ...67 |
| கம்பர் கவி நயம் | ...71, 91, 172, 254, 417, 546 |
| நாவல் | ...76, 156, 237, 317, 394, 476, 555, 636, 714, 795, 875, 954 |
| பிரபஞ்ச விநோதம் | ...79, 159, 239, 319, 399, 479, 559, 639, 718, 798, 879, 958 |
| பஞ்சாங்கம் | ...80, 160, 240, 320, 400, 480, 560, 640, 720, 800, 880, 960 |
| வறுமை நிலை | ...83 |
| ஆனந்த சந்திரோதயம் | ...88, 169, 249, 571, 835, 897 |
| லைப் (ஜீவிய) இன்ஷியூரன்ஸ் | ...95 |
| ஜீவிய ஊர்ஜிதம் | ...663, 790, 858, 931 |
| சிவத்தியானம் | ...101 |
| பிரணவ சக்தி | ...612 |
| காஞ்சீபுர உற்சவ விநோதம் | ...105 |
| ஸ்ரீ பார்த்தசாரதி பிரமோற்சவம் | ...927 |
| குடும்பக் கலகம் | ...112 |
| குரு நானக் | ...131 |
| கண்ணபிரானும் காந்தி மகானும் | ...214 |
| திருநீலகண்ட நாயனார் | ...385 |
| முருகன் திருவருட் பெருமை | ...451 |
| இளையான் குடி மாறனார் | ...505 |
| உமர்கயாம் | ...604 |
| உடற் பயிற்சி | ...149 |





| விஷயங்கள் | பக்கங்கள் |
|---|---|
| தேகப் பயிற்சி | ...184 |
| சொற் பிதிர் எண் 2 | ...155 |
| உண்மைத் தருமம் | ...163 |
| மணித்திரட்டு | ...168, 267 |
| அறிவு விளக்கம் | ...175 |
| அபிசாரிகா வஞ்சிதகம் | ...187 |
| மதுரைமா நகர் | ...192, 330 |
| வீரமா நகர் | ...414, 488, 593 |
| வேதாந்த சூடாமணி மௌனம் | ...167, 288, 369, 441, 519 |
| பழவினையும் பகுத்தறிவும் | ...201 |
| காகுத்தன் கன்னிப்போர் | ...207 |
| மேனாட்டுத் தத்துவம் | ...211, 285, 356, 462, 530, 827, 907 |
| மத வேற்றுமையும் சாதி ஒற்றுமையும் | ...217 |
| கனவின் பலன் | ...220, 349, 511, 589, 665, 782, 840, 933 |
| நோன்பென்பது கொன்று தின்னாமை | ...223 |
| நாவலர் பெருமை | ...225 |
| குஷ்டரோகம் | ...234 |
| சுய நலம் | ...243 |
| பரதன் பண்பு | ...257 |
| கர்ணன் மாண்பு | ...447, 577, 750, 822 |
| மனோ சக்தி | ...269, 382 |
| சாக்கிரட்டீஸின் சத்திய நெறி | ...271 |
| சிறுகதை :— | |
| வெளி அழகு | ...293 |
| அபாயகரமான உபாயம் | ...466 |
| குஷால் | ...614 |
| பழிக்குப் பழி | ...921 |
| எவருக்காகப் பரிவதோ ? | ...759 |
| பரத நாட்டின் ரத்தினச் சுரங்கங்கள் | ...299 |
| பழையன புதியன | ...307 |
| சங்கங்கள் | ...323 |
| கல்விச் செய்திகள் | ...329 |
| செக்கும் அதன் நன்மைகளும் | ...347 |
| தொண்டர் தம் பெருமை | ...353 |
| ஞானக் காட்சி | ...366 |
| பரோபகாரம் | ...374 |
| மேனாட்டு விழுச் செல்வம் | ...425, 525, 582, 673, 848, 911 |

| விஷயங்கள் | பக்கங்கள் |
|---|---|
| அஞ்சுவது அறம் | ...431 |
| தயாதன் தண்ணளி | ...436 |
| தேச விசாரம் | ...455 |
| பொருளாதார நிலை | ...483 |
| ஓரிரவு | ...491 |
| சங்காராந்திப் பண்டிகை | ...540 |
| காலத்தினருமை | ...544 |
| வீர மொழிகள் | ...550 |
| தேச நலப்பகுதி | |
| மௌலானா மகமதலி | ...552 |
| பண்டித மோதிலால் நேரு | ...633 |
| “ எல்லைப்புற காந்தி ” | ...946 |
| ஜீவகாருண்யம் | ...563 |
| காசினி எங்கும் குடியேற்றம் | ...597 |
| சத்தத்தின் தத்துவம் | ...607 |
| வெற்றிலையின் பயன் | ...627 |
| நற்றமிழ் நந்தி | ...649, 729 |
| பாரதியாரும் அவர் பாடலும் | ...657 |
| நாகரிகத்தின் நோக்கம் | ...668 |
| சுவாமி ராமதீர்த்தரும் மதங்களின் சமரஸமும் | ...681 |
| புத்திர பாக்கியம் | ...686 |
| வீட்டுரிமை | ...689 |
| பிரபஞ்ச உற்பத்தி | ...695, 745 |
| விளம்பரம் செய்தல் | ...698 |
| தமிழபிமானிகள் கடமை | ...701 |
| காந்தி–இர்வின் சமரஸம் | ...705 |
| கராச்சி காங்கிரஸ் | ...723 |
| மூன்றாவது வகுப்புப் பிரயாணம் | ...734 |
| உலகத்தினியல்பு | ...769, 850 |
| நான்கு தருமங்கள் | ...778 |
| கராச்சி காங்கிரஸ் முடிவு | ...785 |
| யசுர்வேதத்திலுள்ள சாரீரகோபநிஷத் | ...788 |
| நேயர்களுக்கு ஒரு வேண்டுகோள் | ...792, 809 |
| நமது கடமை | ...803 |
| “ ஆனந்தபோதினி ” வாழ்த்து | ...812 |
| குடியே குடியைக் கெடுக்கும் | ...814 |
| இராவணன் வீர வாழ்க்கை | ...817 |
| பொருளாதார சுதந்தர அவசியம் | ...831 |
| ஆசாரக் கோவை | ...847 |





| விஷயங்கள். | பக்கங்கள். |
|---|---|
| வடமலையின் பெருமை | ...855, 889 |
| பெற்றோர் கடமை | ...861 |
| தமாஷ் | ...863 |
| இந்து சமுதாய அஸ்திவாரம் | ...866 |
| கிராம முன்னேற்றம் | ...883 |
| தேவாலயமும் திருவிழாவும் | ...892 |
| முன்னவன் முன்னம் முடி | ...902 |
| நாம் என்றும் மாணவர்களே | ...935 |
| புலவர்களைப் பற்றிய பொய்ம்மைகள் | ...938 |
| ஜமீன்தார் வாழ்வு | ...943 |
| கைத்தறியைக் காப்பாற்றுக | ...949 |



## ஸ்ரீ ராமகிருஷ்ண பரம ஹம்சருடைய சரித்திரமும், உபதேசங்களும்.

(நான்காம் பதிப்பு.)

(ஸ்ரீ ராமகிருஷ்ணர், அவர் மனைவியாராகிய சாரதாமணி தேவியார், ஸ்ரீ விவேகானந்தர் ஆகிய மூவரின் உருவப் படங்களோடு கூடியது; உயர்ந்த கிளேஸ் கடிதத்தில் அச்சிடப்பட்டது.)

*சாரதாமணி தேவியார் சரித்திரமும் சேர்க்கப்பட்டது; உயர்ந்த சிமை காலிகோ பைண்டுள்ளது;* **இதன் விலை ரூபா 1 12 0**

*சில வருஷங்களுக்கு முன்னர் கல்கத்தாவிலே ஞானமே திரண்டு ஓர் உருவெடுத்தாற்போன்று தோன்றி, சகல வேதாந்த சாஸ்திரக் கருத்துக்களையும் ஓதாதுணர்ந்து, அறியாப் பருவத்திலேயே உலகப் பற்றுக்களைத் துறந்து, அரிய அற்புதங்களை யெல்லாம் செய்து பேரின்பத்தை யடைந்த மகாத்மாவாகிய ஸ்ரீ ராமகிருஷ்ண பரம ஹம்சரை உலகத்தில் பெரும்பான்மையும் எல்லோரு மறிவர். அமெரிக்கா, ஐரோப்பா முதலிய அன்னிய நாடுகளுக்கும் சென்று, ஆங்காங்கே, ‘இந்து மதமே அழிவற்ற மதம்’ என்று அனைவரும் பிரமிக்கப் பிரசங்கங்கள் புரிந்து, இந்துமதக் கொள்கைகளை யெல்லாம் ஆங்காங்குள்ள பலர் மனதிலும் புகுவித்து, அவர்களிற் பலரை இந்து மதத்தில் சேர்த்து, திக்குவிஜயஞ் செய்துவந்த ஞான சிம்ஹமாகிய ஸ்ரீ விவேகானந்த ஸ்வாமிகளுக்கு இந்த இராமகிருஷ்ணரே ஞானாசிரியர். இவர் உலகப்பற்றைத் துறந்த உத்தமஞானி. இவர் உயர்ந்த ஞானமார்க்கத்தை யுணர்ந்து தாம் அனுஷ்டித்ததோடு தம் சிஷ்யர்களுக்கும் எளிதில் விளங்கும்படி தக்க உதாரணங்களோடு அதனைப் பற்பல விதமாக உபதேசித்திருக்கின்றார். அவையெல்லாம் பக்தி, ஞானம், மோக்ஷம் முதலிய பெரிய விஷயங்களை யெல்லாம் சுலபமாக விளக்கிக் காட்டக் கூடியவைகள்.*

**ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நே. 167, மதராஸ்.**

குறைந்த சந்தா! நிறைநத விஷயம்!!

# "ஆனந்தபோதினி"

## ஓர் செந்தமிழ் வாரப்பத்திரிகை

"ஆனந்தபோதினி" மாதசஞ்சிகையின் ஊழியம் உலகம் அறியும். அவ்வூழியத்தை அதிகப்படுத்தும் நோக்கத்துடன், பலருடைய வேண்டுகோளின்மேல் மாதசஞ்சிகையோடு "ஆனந்தபோதினி" வாரப்பத்திரிகையும் வெளிவருகின்றது. தமிழ்ப் பெரும்புலவர்களும் ஆங்கிலமறிந்த பேரறிஞர்களும் பிறரும் மதசமூக தேசீய முன்னேற்றத்தைப்பற்றிய தங்கள் தங்கள் ஆராய்ச்சி முடிவுகளைக் கொட்டிக் குவிக்கக் கங்கணங்கட்டி யிருக்கின்றனர்.

## உங்களுக்கு என்ன வேண்டும்?

மத உண்மைகளா?
தத்துவ ஆராய்ச்சிகளா?
கைத்தொழில் விளக்கங்களா?
வியாபார ரகசியங்களா?
விஞ்ஞான (Science) விநோதங்களா?
கிராமச் சீர்திருத்தங்களா?
சமூக இயல்களா?
வைத்திய விசேஷங்களா?
தேசீய தத்துவங்களா?
சிறுகதைப் பகுதிகளா?
இன்னிசைப் பாட்டுக்களா?

எல்லாவற்றிற்கும் "ஆனந்தபோதினி" வாரப் பத்திரிகை பூலோக கற்பகமாக விளங்குகிறது.

உள்நாடு வருடசந்தா ரூ. 3, 6 மாத சந்தா ரூ. 1-12-0.
பினங்கு, சிங்கப்பூர், முதலிய வெளிநாடுகட்கு வருட சந்தா ரூபா 4.

"ஆனந்தபோதினி" ஆபீஸ்,
தபாற்பெட்டி நெ. 167, மதராஸ்.

வெளிநாடுகளுக்கு 6-மாத சந்தா கிடையாது.

ஓம்
பரப்பிரஹ்மணே நம:

# ஆனந்தபோதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"—திருவள்ளுவர்.

(ALL RIGHTS RESERVED.)

தொகுதி 16 | பிரஜோற்பத்தி௵ ஆனி௴ ௧௳ | பகுதி 12
1931௵ ஜூன்௴ 15௳

## கடவுள் வணக்கம்.

தாராத வருளெலாந் தந்தருள மௌனியாய்த்
தாயனைய கருணைகாட்டித்
தாளிணையென் முடிசூட்டி யறிவிற் சமாதியே
சாசுவத சம்ப்ரதாயம்
ஓராமன் மந்திரமு முன்னுமன் முத்திநிலை
ஒன்றோ டிரண்டெனுமல்
ஒளியெனவும் வெளியெனவு முருவெனவு நாதமா
மொலியெனவு முணர்வுறமல்
பாராது பார்ப்பதே யேதுசா தனமற்ற
பரமவநு பூதிவாய்க்கும்
பண்பென் றுணர்த்தியது பாராம லங்கிலை
பதிந்தநின் பழவடியர்தம்
சீரா யிருக்கநின தருள்வேண்டு மையனே
சித்தாந்த முத்திமுதலே
சிரகிரி விளங்கவரு தக்ஷிணாமூர்த்தியே
சின்மயா னந்தகுருவே. (1)

போனநாட் கிரங்குவதே தொழிலா யிங்ஙன்
பொருந்துநா ளத்தனையும் போக்கி னேனென்
ஞானநா யகனேநின் மோன ஞான
நாட்டமுற்று வாழ்ந்திருக்கு நாளெந் நாளோ. (2)

விரும்புஞ் சரியை முதன் மெய்ஞ்ஞான நான்கும்
அரும்புமலர் காய்கனிபோ லன்றோ பராபரமே. (3)

## அரும்பொருள் விளக்கம்

(1) இதனால் அடியார்கள் அடைந்த சிறப்பைத் தாமும் அடைய விரும்புகின்றார்.

(இ-ள்.) இறைவனே! முடிவுசெய்யப்பட்ட மோக்ஷப் பிரதானமான முதற் பொருளே! திருச்சிரகிரி விளங்குமாறு எழுந்தருளிய தக்ஷிணாமூர்த்தியே! ஞானானந்தங்களைக் கொடுக்கின்ற சதாசாரியனே! தாக்கடாத உனது திருவருள் முழுதும் தந்தருளும்படி மௌனகுருவாய்த் தாயை யொத்த கிருபை செய்து, இரண்டு திருவடிகளையும் அடியேனது சிரசில் தரித்துச் சில உண்மைகளை விளக்கி யருளினாய். அறிவினிடத்துக் கூடும் நிஷ்டையே நிலையாகிய சம்பிரதாயம் என்றும், பகுத் துணராமலும், மந்திரத்தை நினைக்காமலும், மோக்ஷ நிலையானது ஒன்று இரண்டு என்று சொல்லாமலும், ஒளி என்றும், வெளி யென்றும், உரு என்றும், நாதமாகிய ஒலி என்றும் அறியாமல், காணாமற் காண்பதே-எவ்வகைப்பட்ட சாதனங்களும் இல்லாத மேலான அநுபூதி கிடைத்தற்குரிய உபாயமென்றும் நீ அறிவுறுத்தினை. இவைகளை யெல்லாம் பகுத்தறியாமல்—அந்த நிலையில் தங்கிய உன் பழவடியார்களின் சிறப்பை அடைந்திருக்க நின் திருவருள் வேண்டும் என்க.

இறைவன் ஆன்மாக்களின் பக்குவ நிலையைத் தெரிந்து, பூமியின்கண் ஆசாரியரை அதிட்டித்துக்கொண்டு தாயைப்போல் கருணைகாட்டி அருள் புரிவாராகலின் "தாராத வருளெலாந் தந்தருள மௌனியாய்த் தாயனைய கருணை காட்டி" என்றனர். திருவடி தீக்ஷை செய்த பின்னரே அநுக்கிரகிக்க வேண்டுமாகலின் "தாளிணையென் முடிசூட்டி" என்றனர். போதமுளையாது பதைப்பு நீக்கி வறிதேயிருந்து அறிவிடத்துக் கூடுஞ் சாமாதியே நிஷ்டைமுறை யாகலின் "அறிவிற் சமாதியே சாசுவத சம்ப்ரதாயம்" என்றனர். தற்போதத்தை முன்னிட்டுப் பாராமல் திருவருளை முன்னிட்டுப் பார்ப்பதே பரம்பொருளைச் சார்தற்கு ஏதுவாகலின் "பாராமல் பார்ப்பதே ஏது" என்றனர்.

(2) இதனால் மோன ஞான நாட்டமுற்று வாழ்ந்திருக்கும் நாள் என்று வரும் என்று ஏங்குகின்றார்.

(இ-ள்.) ஞானத் தலைவனே! சென்ற நாட்களைக் குறித்துக் கழிவிரக்கங் கொள்ளுவதே தொழிலாக, எனக்குப் பொருந்திய நாட்கள் அவ்வளவையும் வீணிற் கழித்துவிட்டேன். தேவரீரது மௌனமான ஞான நோக்கத்தை அடைந்து வாழ்ந்திருக்கும் நாள் எந்நாளோ? என்க.

சென்ற காலத்தைப்பற்றி எண்ணி எண்ணி இரங்கலிற் சிறிதும் பயனில்லை என்பார் "போனநாட்..............போக்கினேன்" என்றார். இனி, திருவருள் எப்பொழுது கைகூடுமோ வென்று எண்ணி எண்ணி இரங்க வேண்டும் என்பார் "ஞான நாட்டமுற்று வாழ்ந்திருக்கும் நா ளெந்நாளோ" என்றார்.

(3) இதனால் நால்வகைச் சாதனத்தின் தன்மையைக் கூறுகின்றார்.

(இ-ள்.) பராபரமே! நல்லவர்களாலே விரும்பப்பட்ட சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நான்கும் முறையே அரும்பு, மலர், காய், கனிகளைப் போல் ஒன்றற்கு ஒன்று ஏதுவாக விளங்கும் அல்லவா? என்படி.

# ஆனந்தபோதினி

பிரஜோற்பத்தி
வரு' ஆனிமீ 1உ

## கிராம முன்னேற்றம்

நமது பாரதநாட்டில் ஏழுலக்ஷம் கிராமங்கள் இருக்கின்றன. ஏறக்குறைய நூற்றுக்குத் தொண்ணூறுபேர் கிராமங்களிலேயே வசிக்கின்றனர். பாரத அன்னையின் ஜீவசக்தி கிராமங்களில்தான் மிளிர்ந்து கொண்டிருக்கிறது. நகரமக்களின் நாகரிக ஆடம்பர வாழ்க்கையானது நாட்டுப்புற மக்களின் உழைப்பையும் தியாகத்தையும் அடிப்படை யாகக்கொண்டு நிற்கிறது. கிராமங்கள் இன்றேல் நகர வாழ்க்கையும் இன்று. முன்னாளில் நம் கிராமங்கள் மிகுந்த செழுமையான நிலையில் விளங்கின. இந்நாளில் எல்லாரும் எள்ளி நகையாடும் ஈனநிலையில் புழுங்குகின்றன. முற்காலத்தில் கிராம மக்களெல்லோரும் கல்வி, அறிவு, ஒழுக்கங்களிற் சிறந்து நோயற்ற வாழ்வும் குறைவற்ற செல்வமும் பெற்று வாழ்ந்து வந்தனர். இக்கால கிராமமக்களை நோக்கின் உள்ளம் உருகுகின்றது. கல்வி இல்லை, அறிவில்லை, ஒழுக்கம் இல்லை. பலவிதமான பிணிகளும் வறுமையும் அவர்களை வாட்டி வருகின்றன. கிராமமக்கட்கு உழவே உயிர்த் தொழில். இப்பொழுது அவ்வுழவுத்தொழில் போதிய பயன் தருவதில்லை என்பது கண்கூடு. பெரும்பான்மையான விவசாயிகள் கடன் தொல்லைகளில் மூழ்கிக்கிடக்கின்றனர். நவீன நாகரிகப்பேய் கிராமங்களிலும் தலைவிரித்தாடுகின்றது. ஆடம்பர மோகம் அளவு கடந்து நிற்கிறது. கட்சிப்பிணக்குகளும் கோர்ட்டு வழக்குகளும் கணக்கின்றி மலிந்து கிடக்கின்றன.

---

பிறரிடம் தாக்ஷண்யம் காட்டு-உன்னிடம் மட்டும் தாக்ஷண்யம் காட்டாதே.

காந்தியடிகள் காங்கிரஸில் ஆதிக்கம் பெறுமுன்—அது ஒரு சில படித்த வகுப்பாரின் ஆதிக்கத்திலிருந்து வந்தது. அவர்கள் தங்கள் உத்தியோகவேட்டைக்குக் காங்கிரஸை ஒரு கருவியாக உபயோகித்து வந்தார்கள். காந்தியடிகளின் நுழைவுக்குப் பின்னரே அது அகில இந்திய தேசிய மகாசபையாகத் திகழ்கிறது. கிராமமக்களும் காங்கிரஸின் பெருமையை உணரத் தொடங்கினர். சென்ற ஆண்டில் நடைபெற்ற சத்தியாக்கிரக அறப்போரில் ஆயிரக்கணக்கான கிராமமக்கள் முன்னணியில் நின்றனர். உடல் பொருள் ஆவி மூன்றையும் வழங்கினர். எல்லாம் வல்ல பிரிட்டிஷ் சர்க்கார் காந்தியடிகளோடு சமரஸம் பேச முற்பட்டமைக்குக் காரணம் என்ன என்று எண்ணுகிறீர்கள்? காங்கிரஸிற்குக் கிராமமக்களின் முழு ஆதரவும் இருந்தமைதான் என்பதை யாரே மறுக்கத் துணிவர்?

சுமார் நாற்பது ஐம்பது ஆண்டுகளாக நமது நாட்டில் தேசிய சம்பந்தமாகவும், சமூக சீர்திருத்த சம்பந்தமாகவும் கிளர்ச்சிகளும் பேச்சுக்களும் நடைபெற்று வருகின்றன. ஆனால் ஒத்துழையாமை இயக்கம் தோன்றுமுன் கிராமமக்கட்கு அவற்றைப்பற்றி ஒன்றுமே தெரியாது. எல்லாம் நகரங்களில்—பிரசங்கமேடைகளில் வெறும் ஆர்ப்பாட்டங்களாகவே கழிந்தன. இப்பொழுது கிராமமக்கள் காந்தியடிகளின் அற்புத சக்தியால் காங்கிரஸ் என்றால் என்ன? சுயராஜ்யம் என்றால் என்ன? என்று ஓரளவு உணர்ந்து கொண்டிருக்கின்றனர். பொதுவாக நாட்டின் ஒவ்வொரு மூலை முடக்கிலும் ஒரு புது விழிப்பு ஏற்பட்டிருக்கிறது என்று கூறுவது மிகையாகாது. கிராமங்களில் உள்ள குழந்தைகட்கும் பெண்கட்குங்கூட தேசிய உணர்ச்சி ஏற்பட்டுவிட்டது. இவ்வுண்மையைப் பிரிட்டிஷ் சர்க்காரும் நன்கு தெரிந்து கொண்டிருக்கிறது என்பதில் ஐயம் இல்லை.

சட்டமறுப்புப் போர் இப்பொழுது நிறுத்தப்பட்டிருக்கிறது. ஒரு சில தலைவர்களும் பிறரும் இரண்டாவது வட்டமேஜை மகாநாட்டின் முடிவை ஓரளவு எதிர் நோக்கியிருக்கின்றனர். "வட்டமேஜை மகாநாட்டின் முடிவு எவ்வாறாயினும் ஆகுக. அதைப்பற்றி யாரும் கவலைகொள்ள வேண்டுவதில்லை. நாம் நமது ஆக்க வேலையைக் கவனிப்போம்" என்றே தியாகமூர்த்திகளான உண்மைக் காங்கிரஸ் தலைவர்கள் உபதேசித்து வருகின்றனர். அதற்கேற்ப ஆங்காங்கு அந்நிய ஆடை விலக்கு—மதுவிலக்கு மறியல்கள் சாந்தமான முறையில் நடைபெற்று வருகின்றன. இந்நிலை பெரிதும் போற்றத்தக்கதே. இவ்வருந்தொண்டைச் செய்வோர் விடாமுயற்சியுடன் ஊக்கத்தோடு செய்து வருவாராக.

---

நல்ல மனைவியிலும் உயர்ந்த வரமில்லை. பொல்லா மனைவியிலும் தாழ்ந்த சாபம் இல்லை.



கிராமங்களில் ஒரு புத்துணர்ச்சியும் விழிப்பும் ஏற்பட்டுள்ள இவ்வேளையில், தலைவர்கள், தாங்கள் கவனத்தைக் கிராமச் சீர்திருத்தத்தில் செலுத்தவேண்டும் என்று நாம் பெரிதும் வற்புறுத்திக் கேட்டுக்கொள்ளுகின்றோம். கிராமங்கள் முன்னேற்றம் அடையாத நிலைமையில், எத்தகைய சுயராஜ்யம் வரினும், பயன்பெறுதல் அரிதாகும். ஜனப்பொறுப்பாட்சி என்பது நகரங்களிலுள்ள படித்தவகுப்பார் போட்டி போட்டு, உத்தியோகப் பொறுப்பேற்று நடத்தும் ஆட்சி அல்ல. பெரும்பாலோராகவுள்ள விவசாயிகளின்-தொழிலாளர்களின் வறுமையையும் அறியாமையையும் நீக்கும் ஆட்சியே ஜனப்பொறுப்பாட்சியாகும். கிராமமக்களை அத்தகைய ஆட்சிக்குப் பண்படுத்த வேண்டிய பொறுப்பு இப்பொழுது காங்கிரஸ் தலைவர்களைச் சார்ந்து நிற்கிறது. பெரும்பான்மையான தலைவர்களின் கவனம் கிராமங்களின் மீது செல்லாதிருக்கின்றமைக்குப் பெரிதும் வருந்துகின்றோம். கிராமங்களில் தலைவர்களும் தொண்டர்களும் செய்ய வேண்டிய வேலை மிகுதியும் உண்டு.

நமது நாட்டிலேயே பிறந்து வளர்ந்து வாழ்ந்து வரும் முப்பத்தைந்துகோடி மக்களை, ஆறாயிரம் மைல்களுக்கப்பாலுள்ள ஐந்துகோடி ஆங்கிலேயர் ஆட்சிபுரிந்து வரும் ரகஸியம் என்ன என்பதை ஒவ்வொருவரும் சிந்தித்துப் பார்க்கவேண்டும். நாம் ஒற்றுமையின்றி அறியாமையில் மூழ்கிக் கிடக்கின்றோம். அவர்கள் ஒற்றுமையோடு அறிவு விளக்கத்துடன் வாழ்கின்றனர். இந்த நிலைமைதான் நம்மக்களை அந்நிய ஆட்சியின் கீழ் அடங்கிக் கிடக்குமாறு செய்து வருகின்றது. சாதிவேற்றுமை, சமயவேற்றுமை, மொழி வேற்றுமை, பொருளற்ற மூடப்பழக்க வழக்கங்கள் முதலியன நமது நாட்டைப் பாழ்படுத்தி வருகின்றன. இவற்றையெல்லாம் விரைவில் அடியோடு தொலைக்க வழிதேட வேண்டும். அந்நிய ஆடைவிலக்கும் மதுவிலக்கும் எவ்வளவு முக்கியமோ அவ்வளவு முக்கியம் நமது சமூக சீர்திருத்த வேலை என்பதை ஒவ்வொருவரும் நினைவில் வைத்துத் தொண்டாற்ற முற்படவேண்டும். இத்தகைய தலைசிறந்த தொண்டாற்றுவதற்குரிய இடம் கிராமங்களே. ஏனெனில் சாதி சமய வேற்றுமைகளும், மூடப்பழக்க வழக்கங்களும் கிராமங்களிலேயே தாண்டவமாடிக் கொண்டிருக்கின்றன. தீண்டாமை என்னும் கொடும்பேய் பெரும்பாலும் கிராமங்களிலேயே ஆதிக்கம் செலுத்திக்கொண்டிருக்கிறது. தலைவர்களும் பிறருங்கூடி இவற்றையெல்லாம் ஒழிக்கத்தக்க ஒரு திட்டம் வகுத்துக் கிராமமக்களிடையே பிரசாரம் செய்தல் வேண்டும்.

---

மனோ வியாதி, பிறரிடம் முறையிடுவதிலும், பிறரிடம் அந்தரங்கம் கூறுவதிலும் உடனே அதிக ஆறுதலைக் காணும்.

நூற்றைம்பது ஆண்டுகட்கு மேலாகவே ஆங்கில ஆட்சி நமது நாட்டில் நிலை பெற்றிருந்தும், இன்னும் நூற்றுக்குத் தொண்ணூறு பேர் எழுத்து வாசனையற்ற மூடப் பூச்சிகளாய்க் காலங்கழித்து வருதல் வருந்தத்தக்கது. இராணுவம் முதலியவைகட்கு அநாவசியமாய் ஆண்டுதோறும் கோடிக்கணக்கான திரவியம் கொள்ளை போய்க் கொண்டிருக்கிறது. ஆரம்பக் கல்வியேனும் நமது நாட்டில் சரியான முறையில் பரவியிருப்பின் நம் மக்கள் இவ்வளவு இழிநிலையில் இருப்பதற்குக் காரணமே இல்லை. கல்வியறிவு பரவின் நமது சமூகத்திலுள்ள பல தீமைகள் தாமே ஒழிந்துவிடும் என்பது உறுதி. இப்பொழுது கிராமங்களில் போதிக்கப்படும் ஆரம்பக் கல்வி முறை நற்பயன் அளிக்கவில்லை என்பது அநுபவத்தில் கண்ட உண்மை. சர்வ கலாசாலைக் கல்விமுறையும் பயனற்றதாகவே இருந்து வருகிறது. அதனால் நாளுக்குநாள் வேலையில்லாத் திண்டாட்டம் பெருகுவதைத் தவிர—கண்ட பலன் வேறொன்றுமில்லை. இக்காலத்தில் கிராமாந்தர மக்களும் சர்வ கலாசாலைக் கல்வியில்—ஆங்கில மொழியில் பெரிதும் மோகம் வைத்திருக்கின்றனர். கிராமங்களிலிருந்து நகரங்களுக்கு வரும் மாணவர்கள் பெரும்பாலும் ஆடம்பர—நாகரிக தடபுடல்களில் மூழ்கிப் பெரும் பொருளை வீண் விரயஞ் செய்து வீடு திரும்புகின்றனர். அவர்களுள் ஒரு சிலருக்குக் கிராம வாழ்க்கையே பிடிக்காமல் போய்விடுவதும் உண்டு. ஆங்கிலங் கற்றவருக்கு விவசாயத்துறை வேப்பங்காயாகிவிடுகிறது. அவர்கள் மனம் அணுவளவும் அதிற்படிவதில்லை. இதனால் எத்தனையோ குடும்பங்கள் நிலைகுலைந்து சீரழிந்த நிலைமையில் இருப்பதை நாம் பார்த்து வருகின்றோம். கிராமாந்தர மக்கட்குத் தற்கால உலகியல் அறிவும் சாஸ்திரீய விவசாய அறிவும் பெருகத்தக்க கல்விமுறையே மிகமிக வேண்டற்பாலது. அமெரிக்கா போன்ற மேனாடுகள் விவசாயத் துறையில் சாஸ்திரீய முறையை அநுசரிப்பதால் எத்துணை நற்பயன் அடைந்து வருகின்றன என்னும் உண்மை நம் கிராம மக்கட்குத் தெரியாது. நமது தலைவர்களும் தொண்டர்களும் இவைகளை எடுத்துக் காட்ட வேண்டும். மக்கள் அடிமைக் கல்வியில் வைத்துள்ள ஆசையை விட்டொழிக்குமாறு தூண்டவேண்டும். நம் நாட்டு மொழிகளையும் கலைகளையும் வளர்க்குமாறு செய்யவேண்டும். நம் நாட்டுக்கியைந்த—ஒழுக்கமுறை பொதிந்த கல்வி கற்கவும் போதிக்கவும் ஏற்பாடு செய்ய வேண்டும். விவசாயக் கல்வியையும் விஞ்ஞானக் கல்வியையும் கிராம மக்கள் உணர்ந்து கொள்ளுமாறு செய்ய வேண்டும்.

நமது நாட்டுக் கைத்தொழில்களெல்லாம் இப்பொழுது இருந்தவிடந் தெரியாமல் அழிந்தொழிந்தன. பண்டைக் காலத்தில் நமது

---

இன்பங்காணும் வழி ஆசைகளைக் குறைப்பதே—ஆசைகளைத் திருப்தி செய்ய முயல்வதன்று.



கிராமங்கள் கைத்தொழில் களஞ்சியங்களாய் விளங்கின. நமது நாட்டில் உற்பத்தியான உயர்ந்த—மெல்லிய ஆடைகளும் பிற பொருள்களும் வேற்று நாடுகட்கு ஏற்றுமதியான உண்மைக்குப் பண்டைய நூல்களே இன்றும் சான்றாக நிற்கின்றன. இப்பொழுது நாம் எந்நிலையில் வாழ்கின்றோம்? உண்டிக்கும் உடைக்கும் பிறர் கையை எதிர்நோக்கி வாழ்கின்றோம் என்றே கூறி வருந்தவேண்டியிருக்கிறது. இத்தகைய இழிநிலையைப் போக்கவே காந்தியடிகள் அல்லும் பகலும் கதர்த் தொண்டில் முனைந்து நிற்கிறார். கிராமங்களிலுள்ள ஏழைக்குடி மக்கட்குச் செய்யுந் தொழில் ஒன்றும் இன்மையால் அவர்கள் குடிக்கக் கஞ்சியின்றி—குடியிருக்க வீடின்றி—உடுக்க உடையின்றித் தென்னாப்பிரிக்கா போன்ற பிற நாடுகட்குச் சென்று தத்தளிக்க வேண்டிய நிலையில் இருந்து வருகின்றனர். நமது தலைவர்கள் இவ் வேழை மக்கட்கு ஏதேனும் ஒரு வழி காட்ட வேண்டும். கிராம மக்கட்குக் கைத்தொழிற் கல்வியின் மேன்மையைப் போதித்து ஊக்கந்தரவேண்டும். நாம் பிறர் கையை எதிர்நோக்கி வாழும் இழிநிலையை நன்கு எடுத்துக் காட்டவேண்டும்.

கிராம மக்கள் சண்டை சச்சரவுகளிலும் கட்சிப் பிணக்குகளிலும் கோர்ட்டு வழக்குகளிலும் ஏராளமான பொருளைக் கொட்டித் தொலைக்கின்றனர். கலியாணம் முதலிய விசேஷ சந்தர்ப்பங்களில் மிகுந்த பொருளைச் செலவழிக்கின்றனர். இவற்றின் தீமைகளையெல்லாம் நமது தலைவர்கள் எடுத்துக் காட்டி நீக்க ஏற்பாடு செய்ய வேண்டும். கிராமங்களில் பஞ்சாயத்து முறைகளை ஏற்பாடு செய்து வழக்குகளைத் தீர்ப்பதோடு பிற பொது நலங்களையும் கவனிக்குமாறு செய்யவேண்டும். காரச்சி காங்கிரஸ் தலைவர் சர்தார் வல்லபாய் படேல் இப்பொழுது தமது நோக்கம் முழுவதையும் கிராமங்களிலேயே செலுத்திவருதல் போற்றத்தக்க விஷயமாகும். அவர் ஒவ்வொரு கிராமத்திலும் பஞ்சாயத்துச் சபை ஏற்பட வேண்டும் என்று தீவிரமாகப் பிரசாரம் செய்து வருகிறார். கிராமப் பாடசாலைகளை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என்று உபதேசம் செய்துவருகிறார். எந்தக் காரியத்தையும் பஞ்சாயத்து வாயிலாக மிகவும் எளிதாகச் செய்து கொள்ளலாம். தன்னந் தனிமையாகச் செய்யும் முயற்சி என்றும் போதிய பயன் தருதல் அரிது. முற்காலத்தில் பஞ்சாயத்துச் சபைகளே கிராமங்களை ஆண்டு வந்தன என்று சரித்திர வல்லோர் கூறுகின்றனர். கோர்ட்டுகளில் வழக்குகளின் உண்மை வெளியாவதைவிடப் பஞ்சாயத்துச் சபைகளில் எளிதில் வெளியாகிவிடும். செல்வாக்கும், யோக்கியதையும், அந்தஸ்தும் வாய்ந்தவர்களே பஞ்சாயத்தார்களாக இருப்பார்களாதலால் இவர்கள் உள்ளூரில் நடக்கும் விவகாரங்களை நன்கு தெரிந்து கொள்ளுவார்கள். குற்றவாளிகளும் திருந்தி நல்லொழுக்கம் வாய்ந்தவர்களாக மாறி விடுவார்கள். இப்

---

ஊழியத்திலும் அநுதாபமே மக்களுக்கு அதிக உதவி அளிப்பதாகும்.

பொழுதும் சில கிராமங்களில் பெரியதனக்காரர்கள் சாதாரண வழக்குகளைத் தீர்த்து வைப்பதையும் நாம் அனுபவத்தில் கண்டு வருகிறோம். சுகாதாரம் கல்வி முதலியவைகளையும் பஞ்சாயத்துச் சபைகளின் மூலம் நல்ல முறையில் அபிவிருத்தி செய்து கொள்ளலாம். ஆதலால், தலைவர்களும் தொண்டர்களும் பஞ்சாயத்துச் சபைகளை ஏற்படுத்தும் விஷயத்தில் தங்கள் முழு நோக்கத்தையும் செலுத்துவார்கள் என்று நம்புகின்றோம்.

நமது கிராமமக்கட்கு இன்னும் பத்திரிகைப் படிப்பின் மேன்மை தெரியாது. சென்ற ஐரோப்பியப் பெரும்போரின் போதும், ஒத்துழையாமை இயக்க ஆரம்பத்திலும், சென்ற ஆண்டில் நடைபெற்ற சத்தியாக்கிரக காலத்திலும் கிராமங்களில் பத்திரிகை ஆர்வம் சற்றே பெருகிற்று என்று கூறலாம். ஆனால் பெரும்பான்மையான மக்கள் பத்திரிகைகளின் தொழில் பொய்யும் புரட்டும் அளப்பதே என்று எண்ணிக்கொண்டிருக்கின்றனர். உலகத்தில் நடைபெறும் பற்பல விதமான விசேஷ நிகழ்ச்சிகளைத் தெரிவித்து மக்கள் வாழ்க்கையைச் சிறப்பிக்கும் பெருமை பத்திரிகைகட்கு உண்டு என்னும் உண்மையைப் பெரும்பான்மையான கிராமமக்கள் அறியார். இவ்வறியாமையைப் போக்கிப் பத்திரிகை அறிவு பரவச் செய்ய வேண்டியது நம் தலைவர்களின் இன்றியமையாக் கடமையாகும். கிராமங்களில் பத்திரிகை அறிவு பரவவேண்டுமாயின் ஆங்காங்கு வாசகசாலைகளை நிறுவுமாறு தூண்டவேண்டும்.

வாசகசாலைகளின் பயன் அளவிடற் கரிதாகும். மேனாட்டு மக்கள் சிறந்த அறிவு விளக்கத்துடன் வாழ்க்கை நடத்தி வருவதற்கு வாசகசாலைகள் பெருந்துணை புரிந்து வருகின்றன. நமது நாட்டில் பரோடா சமஸ்தானத்திலும், ஆந்திரதேசத்திலும் கிராமமக்கட்கு வாசகசாலைகள் சிறந்த பயன் விளைத்து வருகின்றன. வாசகசாலைகளிருந்தால் விலையுயர்ந்த நூல்களையும் பலதிறப்பட்ட பத்திரிகைகளையும் எளிதில் வாங்கி வாசிக்கலாம். எல்லாரும் குறிப்பிட்ட நேரத்தில் ஒன்றுகூடி அளவளாவலாம். ஆதலால் கிராமங்கள் தோறும் வாசகசாலைகள் விளங்க வேண்டும் என்பது எமது பேரவா. இம்முயற்சியில் கிராமங்களிலுள்ள ஆரம்ப ஆசிரியர்கள் ஈடுபட்டுழைக்குமாறு வேண்டிக் கொள்ளுகின்றோம். நாம் மேலே எடுத்துக்காட்டிய காரியங்களெல்லாம் இனிது நிறைவேற வேண்டுமாயின் ஒற்றுமையும் பரஸ்பர நம்பிக்கையும் மக்களுக்குள் ஏற்படவேண்டும். ஒற்றுமையைக் குலைக்கும் பகைமைகளையெல்லாம் வேரோடு களைந்தெறிதல் வேண்டும். எல்லாம் வல்ல திருவருள் முன்னின்று காப்பதாக.

ஓம் தத் ஸத்:

---

அழகே இளைஞர் உள்ளத்தின் வழிகாட்டி.




## வடமலையின் பெருமை.

(ரா. பி. சேதுப் பிள்ளை, பி. ஏ., பி. எல்.)

சிவநெறியும் செந்தமிழும் செழித்து வாழத் திருநெல்வேலிச் சீமையில் செங்கோல் செலுத்திய காவை வடமலை ஐயன் கற்றவர் போற்றும் கொற்றவனாய்த் திகழ்ந்தான். அருந்தமிழருமை தெரிந்த அப் பெருந்தகையைப் பாவலரும் நாவலரும் பாராட்டி மகிழ்ந்தார்கள். எந்நாட்டவரும் போற்றும் தென்னாட்டை ஆண்டுவந்த வடமலையின் பெருமையை

> "செஞ்சிக்கும் கூடலுக்கும் தஞ்சைக்கும் ஆணைசெல்லும்
> செங்கோல் வடமலேந்திரன் எங்கள் ஊரே"

என்று முக்கூடற் பள்ளுப்புலவர் புகழ்ந்துரைத்துப் போந்தார். இஞ்சி சூழ்ந்த செஞ்சி என்று செஞ்சொற் புலவரால் சீராட்டப்பெற்ற செஞ்சிமா நகர்க்கும் தஞ்சைமா நகர்க்கும் இடையே அமைந்த திருநாட்டிலும் விரிந்த புகழொடு விளங்கிய வடமலையை "செங்கோல் வடமலேந்திரன்" என்று கவிஞர் சிறப்பிக்கும்முறை சிந்தையைக் கவர்வதாகும். இன்னும் விண்ணிலே உலாவும் வெண்மேகங்கள் கடல்நீர் பருகிக் கருநிறமுற்று, மின்னொளி வீசி மரங்கள் செறிந்த மலைகளைச் சார்ந்து மழைபொழியும் மாண்பினை எழுதப் போந்த பள்ளுக்கவிஞர்,

> "காவுக்கிறைவனும் இந்திரன் ஏவற்பணி கொண்டெழுந்தகார்
> கடலிற்படிந்து திருவிற்கோட்டி அடல்முக்கூடல் அரியுமாய்
> பூவிற்பொலியும் கலைமின்னோடு மேவிக்கமலத் தயனுமாய்ப்
> புனலைத்தரித்து வரையிலேறிக் கனலைத்தரித்த சிவனுமாய்த்
> தாவிப்பறந்து பணிகள்பதுங்கக் கோவித்தெழுந்த கருடனும்
> தானேயாகி உலகுக்குரிமை ஊனேயாகி உயிருமாய்
> கோவிற்பெரிய வடமலேந்திரன் மாவிற்சுறுத்துப் பொழிந்தபின்
> குளிருகின்றது கோன்கழுத்தினில் வெளிறுகின்றது வானமே'

என்று அருளிய அழகிய கவியில் குடிதழுவிக் கோலோச்சிய கொற்றவனை

"கோவிற்பெரிய வடமலேந்திரன்"

என்று குறிக்கும்முறை அறிந்து போற்றத்தக்கதாகும்.

---

கள்ளரில் கள்ளன் லோபி—அவன் தன்னையே கொள்ளை அடித்தான்.

இத்தகைய வடமலையின் புகழை இந்நில்லாவுலகில் நிலைநிறுத்தக் கருதிய கவிஞர் ஒருவர் வடமலைவெண்பா என்னும் பெயரமைந்த பாமாலை புனைந்து போற்றி யுள்ளார். நூற்றெட்டுக் கவிகளால் அமைந்த அந்நூல் காவை வடமலை ஐயனையே பாட்டுடைத் தலைவனாகக்கொண்டு பொய்யில் புலவர் அரு அருளிய பொதுமறையின் பொருளுரையைப் பொருந்திய சான்றுகளால் விளக்கி நிற்பதாகும். சிங்கைச் சிவஞானமுனிவர் சோமேசர் முதுமொழி வெண்பாவைப்போல் தெய்வப்புலமைத் திருவள்ளுவனார் அருளிய சீரிய குறட்பாக்களின் கருத்தைச் சிறந்த சான்றுகளால் விளக்கிச் செல்லும் வடமலை வெண்பாக்கவிகள் ஆராய்ந்து அறியத்தக்கனவாம்.

இல்லறத்தின் பெருமை கூறப்போந்த பொய்யில் புலவர்,

"இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு"

என்று சுருங்கச்சொல்லி விளங்க வைத்தார். அறவோர்க்கும் துறவோர்க்கும் ஆதரவாயமைந்து இலை என்னும் எவ்வம் உரையாது ஈதலே இல்வாழ்வான் கடன் என்று ஆசிரியர் வள்ளுவனார் ஐயம் திரிபற எடுத்துரைத்தார். விருந்தோம்பி வாழும் விழுமிய வாழ்க்கை எஞ்ஞான்றும் பருவந்து பாழ்படுதல் இல்லை என்று பொதுமறை புகழ்ந்துரைக்கின்றது. "வேளாளன் என்பான் விருந்திருக்க உண்ணாதான்" என்று இந்நாட்டில் வழங்கிவரும் பழமொழியும் இக்கருத்தையே வலியுறுத்துவதாகும். தாளாண்மையால் வந்த பொருளைத் தக்கார்க்கு உதவிய தகைமையாலேயே வேளாளர் புகழ் நாடெங்கும் பரவுவதாயிற்று. இவ்வாறு நல்விருந்தோம்பும் விழுமிய வேளாண்மையின் பெருமையை விளக்கப்போந்த நாயனார்

"விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற் பாற்றன்று"

என்று அருளிய நல்லுரை பொதுமறையில் ஓர் பொன்னுரையாய்த் திகழ்வதாகும். 'மருந்தேயாயினும் விருந்தோடுண்ணுக" என்னும் அறவுரையும் திருக்குறளின் கருத்தைத் தழுவி நிற்கக்காணலாம். மக்களை வாட்டி வருத்தும் பலவகை நோய்களில் பசி நோயே மிகக் கொடியதென்று அறிந்தோர் கூறுகின்றார்கள். உயிரையும் உடலையும் வேறாக்கும் கொடுமை வாய்ந்த பசியினைப் "பசிப்பிணி என்னும் பாவி" என்று மணிமேகலை இயற்றிய மதுரைச் சாத்தனார் மனம் கசந்து கூறிப்போந்தார். இத்தகைய பசிப்பிணியாய பாவியைக்கொன்று மக்களை வாழ்விக்கும் மருந்து அன்னமே ஆதலால் அதனை ஆருயிர் மருந்தென்று அருந்தமிழ்ப்புலவர்கள் புகழ்ந்துரைத்தார்கள். இவ்வாறு பசிப்பிணியை மாற்றும் மருந்தினும் இறப்பென்னும் கொடுமையை அறவே ஒழிக்கும் ஆற்றல் வாய்ந்த மருந்தொன்று இருக்குமாயின் அது யாவராலும் விரும்பி அடையப்படும் என்பது சொல்லாமலே அமையு மன்றோ? இத்தன்மை வாய்ந்த அருமருந்து அகப்படுமாயினும் அதனை விருந்தினரொடு பகுத்துண்டு வாழ்தலே இல்வாழ்வானுக் கேற்றதாகுமென்றும், தானே உண்டு

கர்வங்கொண்டவர்கள் சம்பந்தமான கஷ்டம் எல்லாம்—அவர்கள் தாங்கள் வீண் பெருமை பாராட்டுகிறவர்கள் என்பதை ஒப்புக்கொள்ளமாட்டார்கள் என்பதே.



உயிர்வாழக் கருதுதல் தகாதென்றும் திருவள்ளுவனார் திருக்குறள் தெளிவாக எடுத்துரைக்கின்றது. இத்தகைய அருமைசான்ற குறளின் கருத்தை விளக்கப்போந்த "வடமலை வெண்பா" ஓர் சிறந்த காதையைச் சான்றாகக் காட்டுகின்றது.

"நெல்லியமு தவ்வைக் களித்துநெடு வேலதிகன்
மல்குபுகழ் கொண்டான் வடமலையே—இல்லின்
விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா
மருர்தெனினும் வேண்டற் பாற்றன்று."

என்பது வடமலை வெண்பாவில் அமைந்த ஓர் அருங்கவியாகும். தமிழ் நாட்டில் வாழ்ந்த நல்லிசைப் புலமை மெல்லியலாராய ஒளவையார் அதிகமான் என்னும் அரசன் அளித்த அருநெல்லிக் கனி உண்டு பன்னெடுங் காலம் வாழ்ந்திருந்ததாகப் பழந் தமிழ் நூல்கள் கூறக்காணலாம்.

"இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று."

என்னும் திருக்குறளுக்கு உரை வரைந்த பரிமேலழகர் கனி என்பது ஒளவையுண்ட நெல்லிக் கனி என்று விளக்குரைப்பாராயினர். அருந் தமிழ்க் கவிஞராய ஒளவையார் நெல்லிக் கனியுண்டு நெடிது நாள் வாழ்ந்திருந்த வரலாறு புறநானூற்றில் அமைந்த சில கவிகளால் இனிது அறியப்படுகின்றது. இணையற்ற வீரமும் வண்மையும் வாய்ந்த அதிகமான் என்னும் அரசன் அமுதம் சுரக்கும் நெல்லிக் கனியின் அருமையைக் கேள்வியுற்று அக்கனியை அருந்தி வாழ ஆர்வமுற்றான். மந்தியும் அறியா மரங்கள் செறிந்த ஓர் மலையில் வேடரும் காணுதற்கரிய ஓர் விடலில் அமைந்திருந்த கருநெல்லி ஈன்ற கனியைக் காவலன் பலகால் முயன்று பெற்றான். வருந்திப் பெற்ற கனியை அருந்துதற்கு ஆர்வமுற்றிருந்த அரசன்முன்னே ஒளவையார் சென்று செந்தமிழ் இன்பம் சுரக்கும் செழுங்கவி பாடி நின்றாள். அருந் தமிழின் சுவை அறிந்த அதிகமான் ஒளவையார் அருளிய மதுர மொழிகளைச் செவியால் மாந்தி எல்லையற்ற இன்பமுற்று, அமுத மொழிகளை வாரி வழங்கிய அருங்கவி வாணர்க்கு அமுதம் பொழியும் கரு நெல்லிக் கனியே ஏற்ற பரிசென்றெண்ணி அக்கனியை அகமும் முகமும் மலர்ந்தளித்தான். நெல்லிக் கனியின் சீர்மை யுணராத நல்லியற் கவிஞராய ஒளவையார் அக்கனியை அருந்தி அதன் தெய்வத் தீஞ்சுவையைக் கண்டு திகைத்து நின்றாள். அப்பொழுது அதிகமான் அந்நெல்லிக் கனியின் அருமையையும் பெருமையையும் எடுத்துரைத்து கனிந்த கவிபாடும் நாவினுக்கு நெல்லிக் கனியே நல்லுணவாகுமென்று கூறி மகிழ்ந்தான். இவ்வாறு தானருந்திப் பயன்பெறுமாறு பல நாள் வருந்திப் பெற்ற அருங் கனியை விருந்தாக வந்த ஒளவையாருடன் பகுத்துண்ணவும் கருதாது முழுக்கனியையும் மனம் உவந்தளித்த மன்னன் பெருமையை விருந்தோம்பும் முறைமைக்கு விழுமிய சான்றாக எடுத்துக் காட்டிய புலவரது அறிவின் திறம் அறிந்து போற்றுதற் குரியதாகும்.

இன்பமும் துன்பமும் நேர் விரோதமாயிருந்தாலும், அவை எப்பொழுதும் இணைபிரியா நண்பர்களா யிருக்கவேண்டும் என்பது இயற்கையின் ஏற்பாடு.




# தேவாலயமும் திருவிழாவும்

(பண்டித. பூ. ஸ்ரீநிவாசன்.)

ஆஸ்திகராவோ ரனைவரும் பேரானந்தப் பெருவாழ்வாம் வீடுபேற்றை விரும்பிச் செய்யும் சாதனங்கள் பல. மக்களின் மனவுணர்ச்சி ஒரு தன்மைப்பட்டிராது பல திறப்பட்டிருத்தலின் சாதனம் பலவற்றை வகுத்தனர் சான்றோர். அவற்றுள் ஆலய வழிபாடும் ஒன்றாம். ஆலய வழிபாட்டுடன் விக்கிர காராதனையும் வேண்டற்பாலதென விழைந்தனர் சில்லோர். விக்கிர காராதனை விரும்பத் தக்கதன்றென வெறுத்தனர் சில்லோர். "தத்தம் மனநிலைக் கேற்றவாறு கொள்ளுவோர் கொள்ளுக; தள்ளுவோர் தள்ளுக; இருப்பினும் நன்றே; இல்லா திருப்பினும் நன்றே; இரண்டும் ஒன்றே" என்பதே பண்டைப் பெரியோரின் பரந்த கொள்கை. பின்பின் போந்த பெரியோர்கள் இந்த அபேதக் கொள்கையை யறிவுறுத்துத லொழித்து, அறிவான் மிகுத்த ஆராய்ச்சியாளர்க்கன்றி ஏனையோர்க் கிச் சமரஸநிலை எய்தற் கரிதென வெண்ணியே போலும் காலத்திற்கும் இடத்திற்கும் ஏற்ப ஒவ்வொருவரும் தத்தம் கருத்தைக் கடைப்பிடித் தொழுகுமாறு இவ் விரண்டினையும் தனித்தனி வற்புறுத்திச் சென்றனர். விக்கிரகாராதனை நம்பு மியல்புடையோர்க்கு "இது அவசியம் அனுஷ்டிக்கத் தக்கதே. விக்கிர காராதனை செய்வோரோ விண்ணோர்பிரா னருளை விரைவினி லடைவர். ஆகலின், இடைவிடாது சிரத்தா பக்தியுடன் விக்கிரக வாயிலாகப் பகவானைப் பூசியுங்கள், அருச்சியுங்கள், தியானியுங்கள்" என்றனர். அவர்களுக்கேற்ற உபதேச மிதுவேயாகும். ஏனெனில், அவர்கள் மனத்தின் பரிபாக நிலை அத்தகையது. விக்கிரகாராதனை மாண்பற்றதென்னும் மனோபாவமுடையோர்க்கு "இதுவே ஏற்ற நெறி; எள்ளுக்கு ளெண்ணெய்போல் எங்கும் வியாபியா யிருக்கு மிறைவனை இதயத் தமைத்து எண்ணுத லின்றி கல்லிலும் கட்டையிலும் பூசிப்பது போற்றத்தக்க தன்று. நீங்கள்கொண்ட கொள்கையே கோதிலாததாகும். விக்கிரகாராதனை வீண் காரியமே. அது மூடர் செய்கையுமாகும்" என மொழிந் தேகினர். அவரவர் மனோபாவத்தை நோக்குமிடத்து இரண்டு நெறிகளும் சரியே யாகும். பின்னால்வந்த தன்னல

உலகம் ஒரு கண்ணாடி—நாம் நகைத்தால் அதுவும் நகைக்கும். நாம் முகஞ் சுளித்தால் அதுவும் முகஞ் சுளிக்கும்.



முடையோர் தங்கள் காரியத்திற் கனுகுணமாக இச் செந்நெறியைப் பின்னப்படுத்தி, ஒருவர்க் கொருவர் பகையுண்டாக்கி, மதத் தலைவர்களெனப் பட்டம் புனைந்து பணம் பறித்து நாட்டைப் பாழ்படுத்தினர் என்று கூறுதலும் அவசியமாகும். எனவே, இவ் வுண்மைகளை ஏற்றபெற்றி ஆராய்ந் தறிந்து இதுதான் சரி இதுதான் சரி என வாதிட்டுத் திரியாது இரண்டிலும் சம நோக்குக் கொண்டிருப்பதே கற்றறிந்தோர் செய்கையாம். ஸ்ரீராம கிருஷ்ண பரமஹம்ஸர், ஸ்வாமி விவேகானந்தர், மகாத்மா காந்தியடிகள் முதலாயினோர் இத்தகையோ ரென்பதை உலகம் அறியும். நிற்க,

விக்கிரகாராதனை அஞ்ஞானிகள் செயலெனப் புறக்கணிப்போரைப் புறத்தொதுக்கி, அது அறிவுடைமையே யெனக் கொள்வோர் செயலைச் சிறிது ஆராய்வோம்.

"மூர்த்தி தலம் தீர்த்தம் முறையாய்த் தொடங்கினர்க்கோர்
வார்த்தைசொல்லச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே"

என்ற தாயுமானர் திருவாக்கின்படி, சாமானியமான தெனக் கருதப்படும் ஆலய வழிபாடு விக்கிரகாராதனைகளைச் சிரத்தையோடு செய்துவருவோர்க்குக் காலக் கிரமத்தில், அவை எந்த நோக்கத்தோடு—எந்தத் தத்துவத்தை யுள்ளடக்கி ஆன்றோரால் நியமிக்கப்பட்டன என்னு முண்மை வெளிப்பட அதனால் உண்மை நிலையாகிய தத்துவ ஞானத்தைப்பெற்று வீடுபேற்றிற் குரியவராவரென்பது திண்ணம். விக்கிரகாராதனை முறையைச் சென்ற வாண்டில் விளக்கினோம். ஆலய வமைப்பின் தத்துவத்தைப் பின்னர் சமயம் வாய்ப்புழி வரைவாம். இங்கு அவ்வாலயங்களின் தற்கால நிலைமையைப்பற்றியும் அவற்றில் நடத்தப்படும் திருவிழாக்களைப்பற்றியும் சிறிது வரைவாம்.

இப்போது ஆலயங்கள் எவ்விடத்தும் மிக்க சீர்கேடான நிலையி லிருக்கின்றன வென்பது அறிவுடையோரனைவரும் அறிந்த விஷயமாகும். பல தீமைகளை யுண்டாக்குந் தலங்களாக விருப்பதால் ஆலயங்களே யிருத்தல் கூடாதெனச் சிலர் கிளர்ச்சி செய்யக்கூடிய நிலைமையை ஆலய வழிபாடு உண்டாக்கிவிட்ட தென்பதிலையமில்லை. எனினும், சீர்திருத்தம் செய்யவேண்டுமெனக் கிளர்ச்சி செய்யலாமே யன்றி முழுவதுமாக வொழித்துவிட முயல்வது மேன்மையாகாது. ஆனால், ஒன்று உண்மை. இடித்துத் தள்ள வேண்டுமென்னும் கிளர்ச்சி எத்துணை வன்மையுடைய தாயினும் இடித்துத் தள்ளுவோரில்லை. அப்படியே சீர்திருத்தம் சீர்திருத்தம் என்று ஜகமுழுதும் செய்யும் ஆரவாரமும் செவிடன் காதி லூதின சங்காகும். எனினும், இவ் விரண்டினுள் பின்னையது கஷ்ட சாத்தியமானதே யன்றி முன்னையதுபோல அசாத்தியமான தன்று. 'எத்துணை முறை கூறினும் யாதும் பயனில்லையே' யென மனச் சோர்வுறாது, மேன்மேலும் பத்திரிகைகளின் வாயிலாகவும் வெளிப் பிரசங்கங்களின் வாயிலாகவும் உரைத்துக்கொண்டேவரின் சீர்திருத்த முண்டாவதற்கு வெகுகாலம் செல்லாது.

'சீர்திருத்தம் சீர்திருத்தம்' என்றா லென்ன? எவ்வகைச் சீர்திருத்தம் வேண்டற்பாலதென்பது ஈண்டறியத் தக்கதாம். முதலாவது "அந்தணர்

கேலி செய்தல் தன் அறிவை விளக்கும்—ஆனால் நற்குணத்தை விளக்காது.

மட்டுமே ஆலய பூசைக் கருகாரவர், கர்ப்பக் கிருகத்திற்குள் அவர்களையன்றிப் பிறர் பிரவேசிக்கலாகாது. முக்கியமாக ஆதித்திராவிடர்போன்ற சில வகுப்பினர் ஆலயப் பிரவேசஞ் செய்தலடாது; செய்தால் சுவாமிக்குத் தீட்டு வந்துவிடும்" என்பனபோன்ற தவறான கொள்கைளும் பழக்க வழக்கங்களும் அடியோடு களைந்தெறியப்பட வேண்டும். பிரவேசக் கட்டணம் கொடுத்தாலொழிய உட்பிரவேசிக்கலாகாதென வாயிலில் தடுத்தல்—தீபாராதனைப் பணம் அருச்சனைப் பணம் வசூலித்தல் முதலியவற்றை யகற்றி ஏழைகளும் தாராளமா யுட்புகுந்து சுவாமி தரிசனம் செய்தற்கு வசதிகள் ஏற்படுத்துதல் வேண்டும். ஓர் வறியவன் ஆலயத்திற்குப் போகவேண்டும் என நினைத்தால், உடனே 'பணமில்லையே என்ன செய்வது?' என்ற பெருந்தடை அவன் முன் நிற்கிறது. ஏன்? ஆலயத்திற்குள் செல்வோரை, 'பணமோப்பம் பிடித்துத் திரியும் பிராமணர் பலர், "பொருளுடையோரைச் செயலின் காணத்தகு" மென்றபடி கண்டுகொண்டு, பசப்பு வார்த்தைகளால் பகட்டி, தாராளமாகச் சுவாமிக் கருகில் அழைத்துப்போய், சகல வசதிகளையும்செய்து கொடுக்கின்றனர். இவ்வாறு ஒருவ ரிருவரல்ல. சிதம்பரம் சீரங்கம்போன்ற பெரிய கோயில்களில் இத்தகைய வேட்டையாளர் பலர் பல கூட்டத்தினரை யழைத்துச் சென்று நிற்க வைத்துவிடுவார். எளியவர்கள் அக்கூட்டத்தைப் பிளந்துகொண்டு உள்ளே செல்ல வஞ்சி தூரத்தேதானே நின்று 'சுவாமி தரிசனம் கிடைக்கவில்லையே' யென்றேங்கி வெளியிலே சூடங்கொளுத்திவிட்டுச் செல்வர். இவ்வாறு பூதேவர்கள் பணத் தேவர்களுக்குத் தாசர்களாய், ஈசுவரனுக்குள்ள 'ஏழைபங்காளன்' என்னும் பெயரை மாற்றிச் 'செல்வர் பங்காளன்' என்று கூறும்படியாகச் செய்துவருவது நம் நாட்டின் துரதிருஷ்டமே யன்றோ? ஆகவே, இத்தகைய துஷ்கிருத்தியங்களுக் கிடமின்றி, பண்டரிபுரம் காசி முதலிய விடங்களிற்போல யாவரும் தங்கள் பிரியப்படி சென்று ஈசனை இறைஞ்சத்தக்க ஏற்பாடுகளை ஏன் செய்யலாகாது?

விஷ்ணு ஆலயங்களைப் பற்றிய வோர் விஷயத்தை இங்கு குறிப்பிடாமலிருக்க முடியவில்லை. விஷ்ணு ஆலயங்களில் அடிக்கடி 'வடகலை தென்கலை' வழக்குகள் பெரிய சாபமாக நடந்து வருவது பிரத்தியக்ஷம். இவ்வழக்குகளின் காரணமாக அடைபட்டுக் கிடந்த ஆலயங்கள் பல. குளங்களுக்குள் மூழ்கி இன்னும் வெளி வாராமல் சேற்றில் மறைந்து கிடக்கும் சுவாமிகள் பல. சிறிது மண்ணைக் குழைத்து மூக்கிற் படும்படி வைத்தால் தென்கலையாம். வைக்கா விட்டால் வடகலையாம். அந்த மண்ணை மூக்கின் மேல் வைத்தாலென்ன? வைக்காமலிருந்தாலென்ன? இதற்குக் கலை என்னும் பெயரென்ன? இதில் உயர்வு தாழ்வென்ன? வழக்குகளென்ன? இத்தகைய அறிவுடையோர்க்குக் கலைஞர் என்னும் பெயரென்ன? ஆசாரியார் என்னும் பட்டமென்ன? இவர்களைத் தேர்ந்தெடுத்து ஆலய பூசைக் கமர்த்தின அறிவாளிகள் செயலை என்னென்பது? இவர்களது சண்டைக்குக் காரணமாயிருப்பது யாதெனின் பிரசாதமே. பிரசாத மில்லையேல் இவ்வபாதமில்லை. இவைகளெல்லாம் ஆலயங்களில் அடுக்குமோ வென்பதை அறிவாளிகளே ஆலோசித்துப் பார்க்கட்டும். நாம் இவ்வாறியம்புவதால் பிராமணர்களைத் தூஷிப்பதாகச் சிலர் எண்ணி விடலாம். அவ்வாறெண்ணுவோர் நாம்

---

அறிவை விட அந்தரங்க விசுவாசமே சம்பாஷணையை அதிகச் சோபிதமாக்கும்.



கூறியவற்றுள் தவறேதேனுமுளதா என்பதை நடுநிலையினின்று நோக்கிப் பின் குற்றங் கூறுமாறு கேட்டுக்கொள்ளுகிறோம். நிற்க, நமது கவனத்தை மிகுதியாகக் கவர்ந்து நிற்கும் மற்றொரு முக்கியமான விஷயம் ஆலயங்களில் நடைபெறும் வருஷோற்சவங்களே யாகும். வருஷோற்சவங்களைப் பெரியோர் ஏற்படுத்தியதன் நோக்கமென்ன வென்றாராயுமிடத்து, சுவாமிக்குத் தினந்தோறும் செய்துவரும் பூஜா முறையில் அறியாமை மறதிகளின் காரணமாகப் பல குறைகள் நேரிட்டிருக்கலாமாகலின், அக்குறைகளை நிவர்த்தித்துக் கொள்ளும்பொருட்டு ஆண்டுதோறும் உள்ளன்போடு விசேஷ பூசைகளைக் கிரமமாகச் செய்து வரவேண்டுமென்பது புலனாகின்றது. இதுவே அவர்த உள்ளக்கிடக்கை. இதனை 'சிறப்போடு பூசனை' என்று குறிப்பிடுகிறார் தெய்வப் புலவரும் தமிழ் மறையில். இதில் பூசனை என்பது நித்திய பூசை; சிறப்பு என்பது வருடோற்சவம். இது நைமித்திகம் எனவும் படுகிறது; ஓர் நிமித்தத்தால் செய்யப்படுவதாகலின், இம்முறை நாளாவட்டத்தில் எப்படியோ தற்காலம் நடைபெறுவது போல் "தமாஷ்" உற்சவமாக மாறிவிட்டது.

"ஆலயத்திற்கெல்லாம் மூலவரே" பிரதானம். ஆனால், அம்மூலவருக்குப் பிரதிநிதியாக உற்சவரைச் சில விசேஷ காலங்களில்—குழந்தை குட்டிகளுடன் மல்லாடிக்கொண்டு வீட்டு வேலைகளைக் கவனிக்கவேண்டி யிருத்தலினாலும், பெருங் கூட்டமாகக் கூடியுள்ள ஆடவர் கூட்டத்தைத் தள்ளிக்கொண்டு செல்லவேண்டுமே யென்னும் நாணத்தாலும், ஆலயஞ் சென்று தெய்வ வணக்கஞ் செய்ய வியலாமல் வீட்டிலே தானே அடைபட்டுக் கிடக்கும் பெண்டிர் பொருட்டு, அலங்காரத்துடன் திருவீதி புறப்பாடு செய்வித்தற்காக ஏற்படுத்தினார்கள். ஆகலின் அவ்விக்கிரகத்தை இருக்கிறபடியே—வேறு பொய்க் கால் பொய்க் கரங்களை வைத்து—நான்கு கால்கள் எட்டுக் கைகளுடையதாக்கி விகாரப்படுத்தாமல்-புஷ்பாலங்காரத்துடன் எழுந்தருளப் பண்ணல் ஒழுங்கான முறையாகும்.

இவ்வாறின்றிப் பத்து நாள் உற்சவம் நியமித்துக்கொண்டு பற்பல வாகனங்களைச் சிருஷ்டிப்பதேன்? உற்சவம் பத்து நாட்களல்ல இருபது நாள்களிருப்பினும் சம்மதமே; வாகனமேன்? வாகன சேவையும் ஒழுங்கான முறையில் சிவனுக்கு ரிஷபமும், விஷ்ணுவுக்கு கருடனும் மாத்திரமிருக்கட்டுமே! ஒழுங்கற்ற முறையில் வாகனங்களை யமைப்பதேன்? சிவனுக்கு அன்னவாகனம் ஏது? சிங்க வாகனமேது? யானை வாகனமேது? இன்னும் இவை போன்ற பிறவாகனங்களேது? விஷ்ணுவுக்குக் கருடவாகனமன்றி அன்னவாகனம் சிங்கவாகனம் முதலியவை இருப்பதாக எந்தப் புராணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது? அறிவுடையோர் ஆராய்ந்து கூறட்டும். இது ஒருபுற மிருக்க, விக்கிரகங்கள் சிற்ப சாஸ்திர முறைப்படி எல்லாவித லக்ஷணங்களுடன் அமைக்கப்பட்டவை. அது பெயருக் கேற்ப இரண்டோ நான்கோ கைகளையும் இரண்டு கால்களையும் உடையவை. அதிலும் உருவத்திற்கேற்ப சகல அங்கங்களையும் முடியையும் பெற்றிருக்கின்றன. அங்ஙனமாக, அவற்றை வாகனங்களி லேற்றும்போது வேறு கைகளை

---

பணத்தை வீணாக அழிப்பதைவிட பணத்தில் பேராசைவைப்பதே அதிகமாக நாசம் செய்யும்.

யும் கால்களையும், ஒரு சாணளவு விக்கிரகத்திற்கு இரு சாணளவில் அமைப்பதும், எலுமிச்சம்பழ வளவாகவுள்ள சிரத்திற்குப் பெரிய தேங்கா யளவு முடியை வைப்பதும் என்ன லக்ஷணமென்று கேட்கின்றோம்? இது சுவாமியை அவமானப்படுத்துவதாக ஆகாதா? ஒரு மனிதனுக்கு அவ்வாறு செய்து நிற்க வைத்தால் அவனைக் கோமாளி என்றல்லவோ கூறுவர்! இது என்ன அநியாயம்! தவிர, வாண வேடிக்கை யேன்? தாசி நடனமேன்? ஐந்நூறு அறுநூறு கொடுத்து மேளம் வைப்பதேன்? சுவாமிக்கு இவை அவசியமோ? அவர் தாசிப் பிரியரோ? இவ்வாறு செய்தால் அவர்க்கு உவப்பும் செய்யாமையால் வெறுப்பு முண்டாகுமோ? இப்படி யெல்லாம் செய்தால் தான் ஜனங்கள் வருவார்கள்; சாமியைத் தொழுவார்கள் என்று ஓர் சமாதானம் கூறலாம். ஜனங்கள் வருவார்களென்ப துண்மையே. சாமி கும்பிடக் கோயிலுக்குப் போவார்களென்பது முண்மையே. அருச்சகர்களுக்கு பணம் குவியுமென்பது முண்மையே. ஆனால், அதனால் பக்தி ஏற்படுமென்பது மாத்திரம் பொய்யே. இவ்வேடிக்கைகளை வைத்தால் தான் ஜனங்கள் வருவார்களென்றால் வேடிக்கைக்காகவே வருகிறார்களென்பது விளங்கவில்லையா! அன்றி, இவ்வேடிக்கையைப் பார்க்க வருவதால் அவர்களுக்குண்டாகும் கஷ்ட நஷ்டங்களெத்தனை யென்று வருணிக்க முடியாதே. 'அதற்கென்று முன்னோர் மானிய சானியம் விட்டிருக்கிறார்களே. அதன்படி செய்யவேண்டிய தவசியமல்லவா?' வெனக் கேட்கலாம். அக்காலத்து நன்மை பயப்பதா யிருந்தது பிற்காலத்தில் எதிர் பார்த்த நன்மை பயவாதாயின், அதனை மாற்றி வேறு நன்மை பயக்கும் வழியில் நடத்துவது அறிவுடைமை யன்றோ? வெனக் கேட்கின்றோம். அவ்வாலய வருவாயைக் கொண்டு தரும பாடசாலைகளை நியமித்துக் கல்வி புகட்டி அதன் மூலம் ஈசுவர பக்தியை யுண்டாக்குவது நலமன்றோ? அமெரிக்கர்கள் அவ்வாறு செய்வதைக் கண்டிலரோ! அன்பார்ந்த நண்பர்களே! ஆலோசித்துப் பாருங்கள். ஆலய முறைகளைச் சீர்திருத்துங்கள். எவனுக்கோ வந்த விருந்தென்று இதனை வாசித்துவிட்டு—என்னமோ எழுதி யிருக்கிறார்கள்—பத்திரிகையை நிரப்புவதற்கு ஏதாவது எழுத வேண்டாமா. அவர்கள் பிழைக்கும் வழியை அவர்கள் பார்க்கிறார்கள்—என்றெண்ணிப் போட்டுவிடாதேயுங்கள். சாமானிய ஜனங்களுக்கு இவ்விஷயங்களை எடுத்து விளக்குங்கள். உற்சவங்களால் உண்டாகும் தீமைகளை யெல்லாம் விளக்குவதற்குப் பத்திரிகை இடந்தாராதென் றஞ்சியே சுருக்கமாக இரண்டொரு விஷயங்களை மாத்திரம் காட்டினோம். எவ்வளவு அபகீர்த்தியைத் தரும் காரியங்கள் உற்சவங்களில் நடை பெறுவதைக் கண்டிருக்கிறோம். கடைக்காரர்கள் கிராம ஜனங்களை ஏமாற்றி எவ்வளவு கொள்ளை யடிக்கிறார்கள். இவற்றை யெல்லாம் நன்கு ஆலோசித்து ஏழை மக்களைக் காப்பாற்ற வழி தேடுங்கள். ஆலய வழிபாட்டு முறையைப் போதித்து நல்லறிவுச் சுடர் கொளுத்துங்கள். இது பெரும் தேசத் தொண்டே யாகும். நாமும் அடிக்கடி "ஆனந்தன்" வாயிலாக வற்புறுத்தி வருவோம்.

---

அதிக ஆனந்தம் அனுபவிக்க ஆற்றல் இல்லாதவன் உயர்ந்த ஒழுக்கமுடையவனா யிருக்கமுடியாது.

# ஆனந்த சந்திரோதயம்

தமிழாசிரியர் S. V. வரதராஜையங்கார்

திருவரங்கத்தில் திவ்யப் பிரபந்த வியாக்யானம் செய்து கொண்டும், சிஷ்யவர்க்கத்துடன் திருவரங்கனைச் சேவித்துக்கொண்டும் தரிசன நிர்வாகம் செய்துகொண்டுமிருந்த பட்டர், கொஞ்ச காலஞ் சென்றதும் தமது சிஷ்ய வர்க்கத்துடன் சேது யாத்திரை சென்று திரும்பினார். திரும்பிவரும் வழியில் ஒரு நாள் மாலையில் பாதிரி என்னும் ஓர் கிராமத்தில் ஒரு வேடனுடைய குடிசைக்கு எழுந்தருளினார். இப்பெரியார் வருகையைக் கண்ட அவ்வேடன் ஒரு கட்டிலைப் போட்டு வீற்றிருக்கும்படி உபசரித்து நின்றான்.

"சரணாகதி தர்மம்" வேடனிட்ட கட்டிலில் வீற்றிருந்த வண்ணம் பட்டர் தமது சிஷ்யர்களை நோக்கி "இவன் நமது தன்மையை அறிந்து இவ்வுதவி செய்தானல்லன். புகழை விரும்பியும் இவன் நம்மை உபசரிக்கவில்லை. எவ்வித பிரதியுபகாரத்தை எதிர்பார்த்தும் இயற்றினான் இல்லை. ஆனால், தனது இருப்பிடத்திற்கு நாம் வந்தோமென்னும் அபிமானத்தினாலல்லவா இவ்வாறு உபசரித்தான்? அறிவாற்றல்களில் மிகவும் குறைந்த நிலைமையிலுள்ள ஒரு வேடனுக்குள்ள தன்மை இதுவாயின், அறிவாற்றல்களில் சிரேஷ்டனான சர்வேச்சுவரன் தன் அபிமானத்தில் ஒதுங்கியவர்க்கு எவ்வளவு உதவிதான் செய்யமாட்டான்" என்று கூறி அன்றிரவு அங்கேயே தங்கத் திருவுளங்கொண்டார். அப்படித் தங்கியிருக்கும்போது அவ்வேடனை யோகக்ஷேமம் விசாரிக்க, அவன் "ஸ்வாமி! நான் இன்று வேட்டையாடக் காட்டிற்குச் சென்றேன். ஒரு முயற் குட்டி என் கண்ணிற்பட அதனைப் பிடித்துக் கொண்டுவந்தேன். அதைக் கொண்டுவரும்போது, அதன் தாய் என்னெதிரே வந்து கும்பிடுவதுபோல வருந்தி வணங்கிக் கிடந்தது.' நான் இரக்கங்கொண்டு அக்குட்டியை அதனிடம் விட்டுவந்தேன்" என்று கூறினான். பட்டர் வியப்புற்று நஞ்சீயரை நோக்கி "கேட்டீரா! எல்லா உபாயங்களையும் விட்டு என்னைச் சரண மடை நான் உன்னை, விடுவிக்கிறேன் என்று பகவான் அருச்சுனனுக்கு உபதேசித்ததுபோல, எப்படிப்பட்ட துன்பமும் நீங்கச் சரணாகதியே சிறந்த உபாயமென்னும் தர்மத்தை அந்த முயலுக்கு உபதேசித்தவர் எவரேனுமுண்டோ? 'யார் சரணமடைந்தாலும் அவரை எப்பாடுபட்டும் இரக்ஷிக்க வேண்டும்' என்று சுக்கிரீவன் முதலானவர்கட்கு ஸ்ரீராமன் உபதேசித்தாற்போல சரணாகத ரக்ஷணமே சிறந்த தர்மம்' என்று இந்த வேடனுக்கு ஒருவரும் உபதேசிக்க வில்லையல்லவா? எவ்வித உபதேசமுமின்றித் தானாகவே சரணாகதியும் அதன் பிரயோஜனமும் பகுத்தறிவற்ற முயலினிடத்தும், ஞான சூன்யனான இவ்வேடனிடத்தும் இவ்விதம் கை

---

கஷ்டப்படுகிறவன் மாத்திரமே சுகத்திற்கும், சுதந்தரத்திற்கும் சொந்தக்காரன்.

கூடினவல்லவா? இவ்வேடனுக்கே சரணாகதியால் இவ்வளவு இரக்க முண்டானதிலிருந்து, கருணாமூர்த்தியான எம்பெருமானுக்குச் சரணாகதி செய்வாரிடத்தில் கிருபையுண்டாவதற்குப் பிரமாணத்தின் பொருட்டு ஒரு சாஸ்திரத்தைத் தேடவேண்டிய அவசியமே இல்லையல்லவா?'' என்றருளிச் செய்தார். அப்பால், மறுநாள் பிரயாணப்பட்டு ஸ்ரீரங்கத்திற்கு வந்து சேர்ந்தார்.

திருவரங்கத்தில் இங்ஙனம் எழுந்தருளி மீண்டும் சமய சேவை செய்து கொண்டிருக்கும்போது, வீரசுந்தர பிரமராயன் என்னும் அரசன், ஆறாவது பிராகாரமான திருவிக்கிரமன் திருவீதித் திருமதிள் சிரணமாகிச் சரிந்து இடிந்து விழ, அதனைக் கட்டத் தொடங்கினான். அத்திருமதிளின் நேர்மைக்கு மாறாக ஆழ்வானுடைய (பட்டரின் தந்தை) அந்தரங்க சிஷ்யரான பிள்ளைப் பிள்ளை யாழ்வான் என்பவரின் திருமாளிகைக்கு எதிர்ப்படும்படி மதிளை ஒதுக்கி யெடுக்கத் தீர்மானித்தான் பிரமராயன். பட்டர் தமது பிதாவின் சிஷ்யனான பிரமராயனை அழைத்து ''எம்பெருமானுக்கு ரக்ஷகமாக நீர் திருமதிள் எடுக்கின்றீர். பிள்ளைப் பிள்ளை யாழ்வான் சிறந்த பாகவதோத்தமர்—மகாநுபாவர். அவர் வாழ்த்தல்லவா எம்பெருமானுக்கு ரக்ஷகமாகும்? முன்பு திருமங்கை மன்னன் திருமதிள் (நான்காவது) எடுக்கும்போது, தொண்டரடிப் பொடியாழ்வாரின் திருநந்தவனமான அடந்தை நடந்தை என்னும் இடங்கள் குறுக்கிட, ஒதுக்கி யெடுக்கவில்லையா?'' என்று நல்லன கூறினார். பிரமராயன் பட்டர் வார்த்தையைக் கேளாமல் தன் கருத்துப்படியே நடத்திவிட்டான். இதனால் பட்டருக்கும் பிரமராயனுக்கும் மனஸ்தாபம் ஏற்பட்டது. அது நாளடைவில் அதிகரித்தது. பிரமராயன் ஸ்ரீரங்கத்தில் இருக்கவொட்டாமல் பட்டருக்குப் பல இடையூறுகள் செய்தான். பட்டரும் திருவரங்கத்தை விட்டுப் புறப்பட்டு கஞ்சியருடன் திருக்கோட்டியூருக்கு எழுந்தருளினார். கொஞ்ச காலம் செல்லப் பிரமராயன் இறந்தான். பட்டரும் திரும்ப ஸ்ரீரங்கத்திற்கு எழுந்தருளித் தரிசன நிர்வாகம் செய்து கொண்டிருந்தார்.

ஒருநாள் ஸ்ரீரங்கநாதனைப் பட்டர் சேவித்துக்கொண்டிருக்கும்போது 'நம் உடையவர் ஸ்ரீபாஷ்யமும் கீதாபாஷ்யமும் செய்தருளினார். நீர் சஹஸ்ரநாமத்துக்குப் பாஷ்யம் செய்யும்' என்று நியமிக்க அங்ஙனமே செய்தருளினார். மற்றும் அஷ்டாக்ஷர மென்னும் பெரிய திருமந்திரத்திற்கு விவரணமாக அஷ்ட ச்லோகீ என்னும் நூல் வட மொழியில் இயற்றியருளினர். தத்துவ ரத்னாகரம், பிரணவ விவரம், ஸ்ரீகுணரத்ந கோசம், ஸ்ரீரங்கராஜஸ்தவம், க்ரியாதீபம், தத்வத்ரய ச்லோகம் முதலியனவும் இவரியற்றியவையே.

''ஜீவாத்மா பரமாத்மா விவாதம்—திருவரங்கர் திருமஞ்சனக் காட்சி'' ஒரு விசேஷ தினத்தில் திருவரங்கற்குத் திருமஞ்சனம் நடைபெற்றுக்கொண்டிருந்தது. அடியார் குழாத்துடன் பட்டர் சேவித்துக்கொண்டிருந்தார். அப்பொழுது அடியார்கள் பட்டரை நோக்கி 'இத்திருமஞ்சனத் திருக்கோலத்தைக் குறித்து ஒரு உத்ப்ரேக்ஷை அருளிச் செய்யவேண்டும்' என்று வேண்டினர். உடனே பட்டர் சொற்செறிவும் பொருட் பொலிவும் ஆழ்ந்த கருத்தும் அமைய ஆசுகவியாக ஒரு ஸ்லோகம் அருளிச் செய்தார். அது ஜீவாத்ம பரமாத்ம சம்வாத ரூபமானது. அதன் தாத்பரியம் வருமாறு:—

சந்தோஷமுள்ள மனிதனே உலகத்தில் இல்லாததால் நீ துக்கத்தைப் பற்றிக் கவலைப்படாதே.



பரமாத்மா:—(ஜீவாத்மாவை நோக்கி) நீ எனக்கு உரியை.

ஜீவாத்மா:—அன்று, நான் எனக்கே உரியன்; அதாவது உனக்குப் பரதந்திரன் அல்லன்; நான் ஸ்வதந்திரன்.

பரமாத்மா:—உனக்கு அது எப்படிப் பொருந்தும்?

ஜீவாத்மா:—உனக்கும் அது எப்படிப் பொருந்தும் காண்?

பரமாத்மா:—வேதம் முதலிய பிரமாணங்களால் அங்ஙனம் ஏற்படுகிறது.

ஜீவாத்மா:—தொன்று தொட்டுவருகின்ற அனுபவத்தினாலே இங்ஙனமாகின்றது.

பரமாத்மா—ஆனால், அவ்வனுபவம் இடையிடையே மறுக்கப்பட்டுள்ளதே.

ஜீவாத்மா:—எவ்விடத்தில் யார் ஆக்ஷேபித்ததென்பதைக் கூறும்?

பரமாத்மா:—கீதை முதலிய நூல்களில் என் தொடர்பு பிரசித்தமாயிற்றே.

ஜீவாத்மா:—அதற்குச் சாக்ஷி யார்?

பரமாத்மா:—நல்லறிவுடையவனே சாக்ஷியாவன்!

ஜீவாத்மா:—அந்தோ! அவன் நின் பக்கல் பக்ஷபாத முடையவன். அது எனக்குக் குறைவை யுண்டுபண்ணும்.

இப்படி நடக்கின்ற சம்வாதத்தில் ''பரமாத்மாவான ஸ்ரீரங்கநாதனே! நீ உன் கட்சி ஜயிக்கப் பிரமாணஞ் செய்யச் சித்தனாயிருப்பவன்போல் விளங்குகின்றாய்.'' இந்த விஷயத்தைக் கூறும் சுலோகம் மிகவும் அருமையானதென்றும் சமஸ்கிருத கவன சக்தியில்வல்ல வேதாந்த தேசிகருடைய கவித்திறம் பட்டருடைய இந்தச் சுலோகத்தைப்போல இருக்குமென்றும் கூறுவர்.

''கர்மலோபம்'' ஒரு நாள் ஸ்ரீரங்கநாதன் திருவீதிப் புறப்பாடாக எழுந்தருளி ஓர் மண்டபத்தில் இருக்கையில் பட்டர் திருவாலவட்டம் பரிமாறிக் கொண்டிருந்தார். அப்பொழுது சந்தியாவந்தன காலம் நெருங்கிற்று. அது கண்டு ஓர் சிஷ்யர் ஆசார்யரை நோக்கி ''சந்தியாவந்தன காலம் கடந்துபோகின்றதே'' என்று விண்ணப்பித்தார். அதற்குப் பட்டர் ''பகவத் கைங்கர்ய நிரதர்க்குச் சந்தியாவந்தன கைவல்ய தோஷம் சம்பவியாது. எனக்குப் பணிவிடை செய்கின்றவர்களுக்குக் கர்மலோப முண்டாகுமானால் அந்த நித்ய கர்மத்தை அவர்களுக்காக மூன்று கோடி மகரிஷிகள் செய்கிறார்கள் என்று பகவான் அருளிச் செய்கின்றார், ஆதலால் நித்ய கர்மானுஷ்டானத்திற்காகப் பகவத் கைங்கரியத்தை இடையில் விட்டுப்போவதுதான் ஸ்வரூபவிரோதமாகும்'' என்று கூறியருளினார்.

''பரந்தாமன் பள்ளிகொண்ட பாங்கு'' மற்றொரு நாள் பட்டர் அடியார்களுடன் திருவரங்கன் சந்நிதிக்குச் சென்று பள்ளிகொண்டிருக்கும் பரந்தாமனைச் சேவித்துக்கொண்டிருந்தார். அப்பொழுது அவரது திருவுள்ளத்தில் ஓர் எண்ணம் உதயமாகப் பக்கலிலிருந்த அப்பிள்ளை பிள்ளை என்பவரை

மூட பக்திகளும் மூடப் பழக்க வழக்கங்களும் இந்தியாவை விட்டு நீங்க வேண்டும்.

நோக்கி "நம் பெரிய பெருமாள் ஒரு திருக்கையை மடித்துத் திருமுடியோடு சேர்வைத்து மற்றொரு திருக்கையைத் திருவடிகளை நோக்குமாறு நேரிட வைத்துக் கண்வளர்ந்தருள்கிற நிலையின் இங்கிதத்தை நினைத்துப் பார்த்தீரா? எம்பெருமானைச் சரணமடையப் புக்கவர்கள் அனாதிகாலமாகத் தம்மைத் தொடர்ந்துவருகிற தொல்லைப் பழவினையின் தொகுதியைக் கண்டு அஞ்சுவாராயின் அவர்களைப் பார்த்து "நீங்கள் அப்படி அஞ்சவேண்டாம். எல்லா உயிர்களையும் பாதுகாப்பதற்கென்று கவித்த முடியன்றோ இது!" என்று மடித்த திருக்கையின் விரல்கள் தேவாதி தேவனென்பதற்கு அறிகுறியான திருமுடியைத் தொட்டுக் காட்டுகின்றன. திருவடிகளுக்கு நேராக நீட்டி வைக்கப்பெற்ற இடது திருக்கையோ தானாகப் பாலுண்ண அறியாத இளங்குழந்தைக்கு வலியப் பால்கொடுக்கும் தாயைப் போன்று "எல்லா வுயிர்கட்கும் இத்திருவடிகள் புகலிடம்" என்று குறித்துக் காட்டுகின்றன" என்றருளிச் செய்தார்.

" அணங்காதும் தான்செய்த பாவை தனக்கு" என்பதுபோலப் பட்டரின் தாய்—தன் மகனைச் சான்றோன் எனக் கேட்ட தாய், பட்டருடைய ஞானபரிபூரண பக்குவ நிலையையும் எம்பெருமானுக்கு அவர் பக்கலில் உள்ள வாத்ஸல்யத்தையும் கண்டு, அவர் மாட்டு ஆசார்ய பிரதிபத்தி செய்துகொண்டிருந்தாள். தினந்தோறும் ரகஸியமாக ஒரு சிஷ்யரைக் கொண்டு பட்டருடைய திருவடிகளைச் சோதிக்கச் செய்து அந்த ஸ்ரீபாத தீர்த்தத்தைப் பட்டர் அறியாதபடி உட்கொண்டு வருவாளாயினள். இச்செய்கையை யறிந்த மற்றொருவர் "இது தகுமோ தாயாரான தமக்கு?" என்று வினவ, ஆண்டாள் 'பிறர் செய்த விக்ரஹத்தை ஆராதனம்செய்து அத்தீர்த்தத்தை உட்கொள்வதே தகுமென்றும், தான் செய்த விக்ரஹத்தைத் தான் பூஜித்து அந்தத் தீர்த்தத்தை உட்கொள்ள லாகாதென்றும் நியதியுண்டோ? இல்லைபோல, அவ்வாறே இதையும் கொள்ள என்ன தடை?" என்று கூறி, மேலும்

"கள்ளவிழ் சோலைக் கணபுரங் கைதொழும்
பிள்ளையைப் பிள்ளையென் றெண்ணப் பெறுவரே."

என்னும் திருமங்கை மன்னன் (பெரிய திருமொழி-72-ம் பதிகம்-9) வாக்கையும் ஆதாரமாக எடுத்துக் காட்டினாள். அன்னாள் செய்த பேறன்றோ பேறு!

"ஸ்ரீரங்கேச புத்திரர் என்றொரு சிறப்புப் பெயரும் பட்டருக்குண்டு. ஸ்ரீரங்கநாதன் சந்நிதியில் புராணம் வாசிக்கிற அதிகாரம் அவர் தந்தைக்கிருந்ததுபோல பட்டருக்கும் இருந்துவந்தது. ஆண்டுதோறும் கார்த்திகை மாதம் சுக்லபக்ஷ த்வாதசியான கைசிகத் துவாதசியன்று காலையில், ஸ்ரீரங்கநாதன் முன்னிலையில் பட்டர் நம்பாடுவான் என்னும் பக்தர் எம்பெருமானைக் குறித்துக் கைசிக மென்னும் பண்பாடிப் பேறுபெற்ற திவ்ய சரித்திரத்தைக் கூறுவதும், வராகபுராணத்தின் ஒரு பகுதியான கைசிக மகாத்மியத்தைப் படித்து அர்த்தம் சொல்லித் திருமாலைப் பட்டம் பெறுவதும் வழக்கம். அதுபோலவே அதே நாளில் பட்டர் தமது இருபத்தெட்டாவது பிராயத்தில் கைசிக மகாத்மியத்தைப் படித்துப் பொருள் கூறும்போது, ஒரு சுலோகத்திற்கு பலவாறாக தாத்பர்யம் விந்யாஸம் பண்ணி வெகு அழகாகப் பொருளுரைக்க, ஸ்ரீரங்கநாதன் அதுகேட்டுத் திருவுளமுவந்து தாம் சாத்தியிருந்த திருமாலை,





187510

திருப்பரியட்டம் திருவாபரணம் முதலியவற்றை[illegible] மாஸனத்தையும் பட்டருக்குக் சன்மானமாகக் கொ[illegible]ருளி "[illegible]ரே! உமக்கு மேல்வீடு தந்தோம்" என்றருளிச் செய்ய, பட்டரும் "பேருள்" என்று ஏற்றுக் கொண்டார்.

இதைக் கேட்ட அடியார்கள் கலக்கமுற்றார்கள். பட்டர் பெருமகிழ்ச்சியுடன் ஸ்ரீரங்கநாதன் திருவடிகளில் தண்டனிட்டுக் கைகுவித்து நின்று நம்பெருமாளுடைய திருமேனி யழகில் ஈடுபட்டு "இப்படி திவ்ய சௌந்தர்யத்திற்கு ஆதாரமான திருவடித்தாமரைகளையும், அஞ்சலென்ற கையையும், கவித்த முடியையும், குளிர்ந்த திருமுக மண்டலத்தையும், கஸ்தூரித் திருநாமத்தையும், பூத்த புன்முறுவலையும், கரியவாகிப் புடைபரந்து மிளிர்ந்து செவ்வரியோடி நீண்ட பெரிய கண்களையும் பரமபதத்திற் கண்டேனில்லையாகில்—உடனே ஒரே முறியாக முறித்துக்கொண்டு குதித்து இங்கு ஓட்டமாய் ஓடிவந்துவிடுவேன்" என்ற நிபந்தனையுடன் திருநாட்டிற் கெழுந்தருள்வதாகவும் விண்ணப்பம் செய்துகொண்டார். "அச்சுதா! அமரர்ஏறே! ஆயர்தம் கொழுந்தே! நின் பச்சைமா மலைபோல் மேனி, பவளவாய், கமலச் செங்கண்!—இவற்றைக் கண்டு பருகும் அமுதம் எனக்குவேண்டுமே யன்றி எனக்கு இந்திர பட்டமும் வேண்டுவதில்லை" என்று தொண்டரடிப் பொடியர் அருளிச் செய்ததும் இங்கு கவனிக்கவேண்டியதாகும்.

அப்பால், பட்டர் ஆனந்த பாஷ்பத்துடனே தொண்டர்கள் நாற்புறமும் சூழ்ந்து பணிவிடை செய்யப் பிரம்மரதத்தில் ஏறித் தமது திருமாளிகையை யடைந்தார். அடைந்து தாயாரான ஆண்டாள் திருவடிகளிலே பணிய அப்பரமபாக்கியவதியும் "நலமந்த மில்லதோர் நாடுபுகுவீர்" என்னும் (திருவாய்மொழி-18-4) திருவாக்கைக் கொண்டு மங்களாஸாஸனம் செய்தருளினாள். பட்டரும் "அம்மா! அடியேன் வேண்டுவது ஈதே" (திருவாய் மொழி 19-1) என்னும் அருளிச் செயலைக்கொண்டு அங்கீகரித்தார். அதன்மேல் ஸ்ரீரங்கநாத புத்திரர் திருநெடுந்தாண்டகத்திற்கு அர்த்தம் அருளிச் செய்கையில் "அலம்புரிந்த நெடுந்தடங்கை" என்று தொடங்கும் ஆறாவது பாசுரத்தில் "அஞ்சிறைப்புள் தனிப்பாகன்" என்னும் இடம் வந்தபோது,

"பறவையேறும் பரம்புருடா! நீ என்னைக் கைக்கொண்ட பின்
பிறவியென்னும் கடலும்வற்றிப் பெரும்பத மாகின்றதால்"

என்னும் (பெரியாழ்வார் திருமொழி 44-2) அடிகளை ஒரு முறைக்கு இருமுறை உரைத்து, அவ்வளவில் கருடாழ்வான் மீது எழுந்தருளிக் காட்சி கொடுத்த எம்பெருமானைச் சேவித்தவாறு கண்ட கண் மற்றொன்றினையும் காணாதாகி—இமையாமல் மலாவிழித்து, ஆனந்தாதிசயத்தால் உரோமஞ் சிலிர்ப்பப் புன்முறுவல் பூத்து, சிரத்தின் மீது கைகூப்பிய வண்ணமாகத் திருவணையிலே சாய்ந்து திருநாட்டிற் கெழுந்தருளினார்.

"பட்டர் பெருமை பகர்வது அருமை" எனினும் அடியேன் இயன்ற அளவு ஈண்டு எழுதினேன். இப்பெரியாருடைய சரித்திரத்திலிருந்து நாம் அறிந்த பல அரிய அர்த்த விசேஷங்களையும், ஆசார்ய பிரதிபத்தி, மனபரிபக்குவம் முதலான விஷயங்களையும் மனதிற் பதியவைப்பதே அதனைப் படித்ததன் பலனாகும். இனி, அடுத்த இதழில் "பறவை யேறும் பரம்புருடா!" என்னும் பாசுரத்தின் விஷயத்தைக் கவனிப்போம்.

# "முன்னவன் முன்னம் முடி"

(தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான், பி. ஏ.)

பொன்னையும் பொருளையும் பெரிதென மதித்து நீதிமன்றங்களில் எல்லையற்ற வல் வழக்காடுதலே உடன் பிறந்தாரது ஒழுக்கமா நிகழும் இக்காலத்தில் அயோத்திநகரில் மன்னன் மக்களாய்த் தோன்றி அண்ணன் தம்பியாய் இலங்கிய இருவரது வரலாற்றை அறிவது முறையேயாகும். இராமன்பால் இறவாத அன்பு பூண்டொழுகியவன் இலக்குவன் என்பது சொல்லாமலே அமையும். இருவரும் வேறு வேறு தாயார் வயிற்றில் பிறந்தும், ஒரு சிறிதும் வேற்றுமையின்றி ஒத்த அன்புடையராய் இலங்கிய பெருமையை உன்னுந்தோறும் நாம் ஆரா உவகை யெய்துகின்றோம். இலக்குவன் இராமன்பால் இறவாத அன்புபூண்டு அவனது ஏவலைச் செய்வதே தன்கடன் எனக்கொண்டு வாழ்ந்த பெருமகன் என்பது வெள்ளிடைமலை

"தருவனத்துள் யானியற்றுந் தவவேள்விக் கிடையூறாத் தவஞ் செய்வோர்கள்
வெருவரச்சென் றடைகாம வெகுளியென நிருதர்இடை விலக்காவண்ணம்
செருமுகத்துக் காத்தியென நின்சிறுவர் நால்வரினுங் கரியசெம்மல்
ஒருவனைத் தந்திடுதி"

என்று இரந்து நின்ற முனிவனுடன் தயரதன் "வந்த நம்பியைத் தம்பி தன்னொடும்" அனுப்பும் பான்மையில், இலக்குவன் அவ்விளவயதிலேயே இராமனைப் பிரியாத அன்பன் என்பது விளக்க முறுகின்றது. முனிவன் கேட்டதும் ஒரு மகனைத்தான், கொற்றவனும் "திருவின் கேள்வனைக் கொணர்மின் சென்றென" இராமன் ஒருவனையே அழைத்து வரும்படி ஏவலாளர்கட்கு கட்டளை யிடுகின்றான். இருந்தும், நம்பியுடன் தம்பியும் புறப்பட்ட தன்மையில், இருவரும் இணைபிரியாத் துணைவர்கள் என்பதைக் கவிஞர் அழகாக எடுத்துரைக்கின்றார். இனித் "தாய்வரங்கொளத் தந்தையேவலால்" சடைமுடியும் மரவுரியும் தரித்து, இராமன் தாங்கருந்தவம் மேற்கொண்டு பூழி வெங்கானம் நண்ணி, புண்ணியத் துறைகளாடப் புறப்படுகின்றான். இவ்வுரை கேட்ட இளையோன்

"கண்ணிற் கடைத்தீயுக, நெற்றியிற் கற்றைநாற,
விண்ணிற் சுடரும் சுடர்தோன்ற, மெய்ந்நீர் விரிப்ப,
உண்ணிற்கு முயிர்ப் பெனுமூதை பிறங்க நின்று"

"மூட்டாத காலக்கடைத் தீயென மூண்டெழுந்த நிலையை" விளக்கும் கம்பரது கவிநலம் அழகுடையதே யாகும்.

ஆடம்பரத்தைத் தேடுவது அழிவுக்குக் காரணம்.



"சிங்கக் குருளைக்கிடு தீஞ்சுவை யூனை நாயின்
வெங்கட் கடுங்குட்டியை யூட்ட விரும்பினனே"

என்று இலக்குவன் கொதித்துக் கூறும் மொழிகள் அவனது மனநிலையை விளக்குவதாகும். இவனது சீற்றத்தைத் தணிப்பவர் ஒருவருமில்லாத நிலையில் இராமன் இவண் முன்வந்து ஆறுதல் மொழிகள் பல கூறி இவனது சீற்றத்தைத் தணிக்கவும் அண்ணல்தன் சொல்லிற்கு அடங்கியவனாய் "தெவ்வர் சொல்லும் சொல்லுஞ் சுமந்தேன் இருதோளெனச் சோம்பி யோங்கும் கல்லுஞ் சுமந்தேன் கணைப்புட்டிலும் கட்டமைந்த வில்லுஞ் சுமக்கப் பிறந்தேன்" என்று தன்னைத்தானே நொந்து சீற்றம் துறந்து நிற்கின்றான். இணைபிரியாத் துணைவனான இலக்குவனும் அண்ணல்தன் பின்னே செல்லப் புறப்படுகின்றான். சோதரர் இருவரும், அன்னையாய சுமித்திரையிடம் விடைபெறச் சென்றார்கள். மரவுரிதரித்த மக்கள் இருவரையும் கண்டமங்கை மனம் கலங்கி அடிதொழுத மக்களை அன்புடன் எடுத்தணைத்து கண்ணில் நீரருவி சோரக் கலங்கி யழுதுகரைகின்றாள். பின்னர் தன் காதற்றிருமகன் இலக்குவனை நோக்கி "அப்பா! இனி உனக்கு அவ்வனமே இவ்வயோத்தி, இராமனே தந்தை, சீதையே தாய்" என்று சொல்லியதோடமையாது. "நீ இவனுக்குத்தம்பி யென்ற முறையில்லாது அடியவன்போல் ஏவல் செய்தலே முறையாகும். இன்னும் இம்மணி நகர்க்கு அவன் மீண்டும் வருவானேல் நீயும் வா. அன்றேல் முன்னவன் முன்னம் முடிந்திடு" என்று கூறும் கனிந்த மொழிகள் கற்றோர் உளத்தை உருக்குவனவாகும்.

"பின்னும் பகர்வாள் மகனே இவன்பின் செல்தம்பி
என்னும்படி யன்று அடியாரின் ஏவல் செய்தி
மன்னும் நகர்க்கே இவன்வந்திடின்வா அதன்றேல்
முன்னம்முடி என்றனள் பால்முலை சோர நின்றாள்"

என்று கவியரசர் கூறும் அன்புததும்பும் சொற்கள் கருங்கல் மனத்தையும் கரைப்பனவாகும். இலக்குவன்தான் தன் தமையனிடம் மாறாத காதலுடையான் என்றால் அவனை யீன்றதாயும் அவனைவிடப் பன்மடங்கு தன் மக்கள்பால் ஆறாத அன்புடையவளாய் இலங்குகின்றாள். தன் மக்களிலும் நன் மகனாய் இராமனைப்போற்றும் பான்மைவாய்ந்த சுமித்திரையைப் பங்கமில் குணத்துப் பரதன், கங்கை யிருகரையுடைய நாவாய் வேந்தனிடம் அறிமுகப் படுத்தும் வாயிலாய்ப் போற்றி யுரைக்கும் நயம் சாலவும் அழகுடையதாகும்.

"அறந்தானே என்கின்ற அயல்நின்றான் தனைநோக்கி ஐயஅன்பின்
நிறைந்தானை உரையென்ன நெறிதிறம்பாத் தன் மெய்யை நிற்பதாக்கி
இறந்தான்றன் இளந்தேவி யாவர்க்கும் தொழுகுலமாம் இராமன்பின்பு
பிறந்தானும் உளன் என்னப் பிரியாதான் தனைப்பயந்த பெரியாள்"

என்று "தன்புகழ் தன்னினும் பெரியதன்மை"யனான பரதன், இலக்குவனையும் அவனது அன்னையையும் போற்றும் பான்மை யொன்றே இருவரது பெருமைக்கும் போதிய சான்றாகும்.

நீ நித்திரைக்குச் செல்லுமுன் அன்று செய்த பிழைகளை நினைத்து மறுதின முதற்கொண்டு திருந்திக்கொள்க.

இத்தகைய இணைபிரியா இயலமைந்த இலக்குவன் தன் தாய்மொழியை ஆதரித்துப் போற்றும்முறை ஆராய்தற்குரியதாகும். வெய்ய கானகத்திடை கால்வருந்த நடந்து சென்ற கமலக்கண்ணனையும் அவன் காதலியாம் சீதையையும் அவர்தம் நிலைமையையுங்கண்டு மனங்கரைந்து சோர்வதும், கானகத்தே அவர்கட்குக் காயும் கனியும் கொய்து கொணர்வதும் இரவு முழுதும் அவர்கள் தூங்கும்போது கண்ணிமையாமல் காவல் புரிவதுமே இலக்குவனது தினசரி வாழ்க்கையாக அமைந்தது. தாயுரை தலைமேற்கொண்ட தனையன் தன் அண்ணனிடம் அடியவன்போலப் பணிசெய்யும் பான்மை அழகுடையதாகவே அமைந்துள்ளது. இவர்கள் மூவரும் கான்கத்திடையே நதியைக் கடக்க நேர்ந்த காலையில் மூங்கிலால் ஒரு தெப்பம் ஒன்றமைத்து அதில் அண்ணலையும் அவன்றன் தேவியையும் இனிதே யிருத்தி, ஒருகையால் தெப்பத்தைத் தாங்கி மற்றொருகையால் ஆற்றில் நீந்திச் சென்ற இலக்குவனது செயற்கருஞ் செயலை

"வாங்குவேய்ங் கழைதுணித்தனன் மானையின் கொடியால்
ஓங்குதெப்ப மொன்றமைத்து அதின் உம்பரின் உலம்போல்
வீங்கு தோளண்ணல் தேவியோடினிது வீற்றிருப்ப
நீங்கினன் அதைநெடுநதி யிருகையால் நீந்தி"

என்று கவியரசர் போற்றி யுரைக்கின்றார். இராமனும் சீதையும் அயர்ந்து தூங்கும்பொழுது கண்ணிமையாமல் நின்று காவல்செய்த இலக்குவனது ஆரா அன்பினை அறிந்தவேடர் வேந்தன்

"அல்லையாண் டமைந்தமேனி அழகனும் அவளுந்துஞ்ச
வில்லையூன் றியகையோடும் வெய்துயிர்ப் போடும் வீரன்
கல்லையாண்டுயர்ந்த தோளாய் கண்கள் நீர்சொரியக் கங்குல்
எல்லைகாண்பளவும் நின்றான் இமைப்பிலன் நயனம்"

என்று பரதனிடம் போற்றி யுரைக்கின்றான். இராமன்பால் மாறாத காதலுடையவனாய் அவனைவிட்டுப் பிரியாதபடி அவனுக்கு ஏவல் செய்யும் இலக்குவனது தன்னலமற்ற தொண்டினை உணர்ந்த பரதனும் "யானென்று முடிவிலாத துன்பத்துக்கு ஏதுவானேன் அவன் அது துடைக்க நின்றான்" என்று இலக்குவனது அன்பைப் பாராட்டும் மொழிகள் நயஞ் சான்றனவாகும். இன்னும் தானும் சீதையும் தங்கி உறைவதற்கேற்ற பர்ணசாலையைத் தம்பி தனி நின்று செய்து முடித்ததைக்கண்ட இராமன், தாரை தாரையாகக் கண்ணீர் சொரிந்து "குன்றுபோலக் குலவிய தோளினாய், என்று கற்றனை நீயிதுபோல்" என்று ஏங்கி, தம்பியின் அளப்பரிய அன்பினுக்கு எல்லைகாணாது மயங்குகின்றான்.

இனி கானகத்திடையே அரக்கர்கோன் இழைத்த வஞ்சனையால் மங்கையைப் பிரிந்த மன்னன் மைந்தர்கள், கவந்தன் வாழும் காட்டை அடைந்தார்கள். "எவ்வுயிரும் பகையால் வளைத்து வயிற்றடக்கும் கவந்தன்" கையிற் சிக்கிய காளையர் இருவரில் இராமன் இலக்குவனை நோக்கி

---

உனக்கு ஏற்படும் இன்ப துன்பங்களிலிருந்து நீ உண்மையான அனுபவங்களைக் கண்டறியலாம்.



"தோகையும் பிரிந்தனள் எந்தை துஞ்சினன்
வேகவெம்பழி சுமந்துழல வேண்டலேன்
ஆதலின் யானினியிதனுக் காமிடம்
ஏகுதியீண்டு நின்றினவலே"

என்று தம்பிமேல் வைத்த காதலால் உரைக்கின்றான். இவ்வுரை கேட்ட இலக்குவன் "அண்ணலே! இடர்தன்னை வென்றாரன்றோ வீரர்களாவர். நீர் கருதும் செய்கை புகழுடையதாகுமோ. அதுதான் இருக்கட்டும். என்னை உம்முடன் அனுப்பிய என் அன்னை 'மன்னும் நகர்க்கே இவன் வந்திடின் வா. அதன்றேல் முன்னம் முடி' என்றான்றோ பணித்துள்ளாள். அத்தாயுரையை நிலைநிறுத்த வலியற்ற போதன்றோ நீர் இவ்வாறு எண்ண இயலும்," என்று கனிந்துகூறும் மொழிகள் அழகுடையனவாகவே அமைந்துள்ளன.

"என்தாய் உன் முன் ஏவியாவும் இசையின்னல்
பின்றாது எஃதிப் பேரிசையாளற் கழிவுண்டேல்
பொன்றாமுன்னம் பொன்றுதி யென்றாள் உரைபொய்யா
நின்றாலன்றோ நிற்பது வாய்மை நிலையம்மா"

என்பது நல்லியல் கவிஞரின் நலமுடைய வாக்காக அமைந்து தாய்மொழிந்த உரைவழி நின்ற தநயனது பெருமையை உலகுக்குப் பறைசாற்றுகின்றது. இன்னும்

"கேட்டார் கொள்ளார் கண்டவர்பேணார் கிளர்போரில்
தோட்டார் கோதைச் சோர்குழ றன்னைத் துவளாமல்
மீட்டானென்னும் பேரிசை கொள்ளான் செருவெல்ல
மாட்டான் மாண்டான் என்றபின் மேலும் வசையுண்டோ"

என்று இலக்குவன் கூறிய செம்மைசான்ற சொற்கள் இராமனது உளத்தில் ஆழ்ந்து பதிந்தன. உண்மை உணர்ந்த வீரர் இருவரும் ஒருவர் முன் ஒருவராய் இகலிச் சென்று கவந்தனது கைகளை அறுத்தெறிந்தனர்.

இவ்வாறு தாயுரை தலைமேற்கொண்டு, தமயனுக்குத் தொண்டு செய்து வந்த தம்பியும் இந்திரசித்தன் விடுத்த மலரவன் கணையால் மாழ்கி, மண்மீது விழுந்து கிடந்ததைக்கண்ட இராமன்

"அறந்தாய் தந்தை சுற்றமுமற்று மெனையல்லால்
துறந்தாயென்று மெய்ம்மற வாதாய் துணைவந்து
பிறந்தாயென்னைப் பின்பு தொடர்ந்தாய் பிரிவாற்றாய்
இறந்தா யுன்னைக்கண்டு மிருந்தேன் எளியேனே"

என்று பன்னிப்பன்னி அளவிறந்த சோகத்தால் நலிந்த நிலையை சித்திரிக்கும் கம்பரது கவிப்பெருமையே பெருமை. இராமனும் இலக்குவனும் அவர்தம் சேனையும் ஒருங்கே வீழ்ந்து கிடந்ததைக்கண்ட அரக்கர்கோன் சிறையிருந்த செல்வியாய சீதையைத் தனது விமானத்திலேற்றிப் போர்க்களத்தை

---

இந்தியாவில் ஆங்கிலப் படிப்பு அடிமைத்தனத்திற்கு அஸ்திவாரமா யிருக்கிறது.

அவனுக்குக்காட்ட, மண்மீது கிடந்த மன்னன் மைந்தர்களைக்கண்ட மங்கை மயங்கி

"விழுந்தான் புரண்டான் உடல்முழுதும் வியர்த்தான் உயிர்த்தான் வெதும்பி [னன்
எழுந்தான் இருந்தான் மலர்க்கரத்தை நெரித்தான் சிரித்தா னேங்கினன்
கொழுந்தாவென்றான் அயோத்தியர்தம் கோவேயென்றான் எவ்வுலகும்
தொழுந்தான் அரசேயோ வென்றான் சோர்ந்தான் அரற்றத் தொடங்கினன்"

என்று கூறும் கம்பர் கவிநலம் நயஞ்சான்றதாகும். களங்காண வந்த நங்கை களத்திடையே இலக்குவன் மயங்கிக் கிடப்பதைக் கண்டபோழ்து, இளைய வீரனது இணையற்ற பெருமையை நினைந்து நங்கை புலம்பலுற்றான்.

"மேதா இளையோய் விதியார் வினைவால்
பேதாநெறி யெம்மோடு போதுறு நான்
மூதானவன் முன்னர் முடிந்திடேனும்
மாதா உரையின்வழி நின்றனையோ"

என்று மங்கை மருகிக்கூறும் உரை சாலவும் அழகுடையதாகும். "முன்னவன் முன்னே முடிந்திடு" என்று தாயுரைத்த மொழியின் தலைநின்று உயிர் துறந்துள்ளனே இலக்குவன் என்று மங்கை மயங்கிக் கூறும் செம்மை சான்ற சொற்கள் இலக்குவன் தாயுரை பேணிய தகைமையைப் பெரிதும் விளக்குவனவாகும்.

மலரோன் படையால் மயங்கிய வீரர்கள் மாருதி கொணர்ந்த மருந்தினால் உயிர் பெற்றெழுந்தார்கள். பின்னர் இலக்குவன் இந்திரசித்தனது முடித்தலை துமித்து, அவன்றன் தலையுடன் வந்த தம்பியைத் தழுவிய இராமன்,

"கம்பமதத்துக் களியானைக் காவற்சனகன் பெற்றெடுத்த
கொம்புமென்பால் இனிவந்து குறுகினள் நன்றெனக் குளிர்ந்தேன்
வம்புசெறி மலர்க்கோயில் மறையோன் படைத்த மாநிலத்தில்
தம்பியுடையான் பகையஞ்சான் என்னும் மாற்றந் தந்தனையால்"

என்று போற்றியுரைக்கும் நலம் அழகுடையதாகவே அமைந்துள்ளது. "தம்பியுடையான் பகையஞ்சான்" என்னும் முதுமொழிக்கு இலக்கியமாய் அமைந்த இலக்குவன் தன் தலைவனை இராமனுடனே மன்னும் நகர்க்குத் திரும்பி வந்து அண்ணனுடன் இணைபிரியாது வாழ்ந்தான் என்பர் கவியரசர்

இதுகாறும் கூறியவற்றால் "மன்னும் நகர்க்கே இவன் வந்திடின் வா அதன்றேல் முன்னம் முடி" என்று தாயுரைத்த மொழிகளைத் தலைமேற் கொண்டு வாழ்ந்த பெருமகன் இலக்குவன் என்பதும் அவன் அண்ணல்பால் மாறாத காதலுடையான் என்பதும் அவனது ஆரா அன்பினை அளவிட்டுரைக்கும் ஆற்றல்படைத்தவர் கவியரசர் கம்பர் பெருமானே என்பதும் எமது தாழ்மையான கருத்தாகும் என்று கூறி என்பணி முடிக்கின்றேன். திருவருள் முன்னிற்க.

---

எவ்வளவு எளிய நிலையிலிருப்பினும் உனது மனதில் உற்சாகம் மாத்திரம் ததும்பி நிற்கட்டும்.

# மேனாட்டுத் தத்துவம்

(கி. பாலசுப்பிரமணியம், M. A.)

(830-ம் பக்கத் தொடர்ச்சி.)

ஸ்டாயிக்கர்:—ஸ்டாயிக்கர் (Stoics) என்னும் ஒரு திறத்தார் எபிக்யூரருக்குப் பிறகு கிளம்பினார்கள். எபிக்யூரரைப் போலவே ஸ்டாயிக்கருக்கும் மனிதர் முக்கியமாக அடையவேண்டியது சிற்றின்பத்தின் விடுதலையே. இச்சைகள் மனிதரைக் கெடுக்கும் இயல்புடையன. அவைகளை அடக்கியாள்வது போதாது. அறவே யொழித்துவிட வேண்டும். மனிதர் தனித்தனி அணுக்களாக இல்லாமல் இப் பிரபஞ்சத்தின் அம்சங்களாகக் கருதவேண்டும். பிரபஞ்சவாஸிகளாகிய மனிதரினூடே பிருதிவி சஞ்சரிக்கின்றது. பிருதிவிக்கு இணங்கி நாம் நடப்பதுதான் விதி. இந்த விதிப்படி நடப்பதற்குப் பிரபஞ்ச ஞானம் அவசியம். ஆகையால் மெய்ஞ்ஞானம் பிரபஞ்ச ஞானந்தான். பிரபஞ்சம் ஒன்று, பலவல்ல. அரிஸ்டாடில் சொல்லியபடி பொருளும் உருவமும் தனித் தனியே யில்லாமல், இணைபிரியாதனவாக இருக்கின்றன. பிரபஞ்சத்தைத் தவிர கடவுளென்று ஒன்றில்லை. பிரபஞ்சமே இயற்கை. பிரபஞ்சமே கடவுள். உலகத்தின் ஒவ்வொரு பாகத்தினும் ஆத்மா சஞ்சரித்து வருகிறது. மனிதனின் தேகத்தில் ஆத்மா இருப்பதுபோல் பிரபஞ்சத்திலும் ஓர் ஆத்மா உள்ளது. மேலும் நம்முடைய ஆத்மா அந்த உலக ஆத்மாவின் ஒரு பாகமேயாம். நம்முடைய ஆத்மா தேகத்தைவிட்டுப் பிரிந்தவுடன் அந்தப் பொது ஆத்மாவுடன் கலக்கின்றது. உலகத்தில் உண்டாகும் ஒவ்வொரு விஷயமும் ஒரு காரணத்திற்காகவே.

நல்லொழுக்கமென்பது ஞானந்தான். ஆனால் ஞானம் அரிஸ்டாடில் நினைத்தது போல் ஏகாந்த அனுபவமல்ல. ஞானத்தைக் கொண்டுதான் நம்முடைய தினசரிப்பணிகளைச் செய்யவேண்டும். வெறும் தர்க்கமும் வியாகரணமும் எதற்கு? ஸ்ரீராமரின் சேனைகள் எத்தனை யென்பதைப்பற்றி நமக்கென்ன? பாரத யுத்தத்தில் அபிமன்யு 13-ம் நாள் இறந்தாலென்ன, 10-ம் நாள் இறந்தால் என்ன? அபிமன்யு பெரியவனா, அல்லது துரியோதனன் புத்திரனாகிய லக்ஷ்மணன் பெரியவனா என்பதைப்பற்றி என்ன கவலை? நல்லொழுக்கமே மனிதனின் முக்கிய விதியென்றோம். மனிதனின் முக்கிய அம்சம் புத்தியல்லவா? ஆகையால் நல்லொழுக்கம் புத்தியைக் காரணமாக வுடையது. இந்தப் புத்திக்கும் மனிதனுடைய மனத்தில் அவ்வப்போது எழும் சிற்றின்ப ஆசைகளுக்கும் வேறு பல இச்சைகளுக்கும் யாது சம்பந்தம்? இச்சை பிளேடோ நினைத்தபடி மனிதனின் ஆத்மாவின் ஒரு பாகமாகாது. இச்சை ஒருவித

---

மனிதன் ஒவ்வொருவனும் தனது குற்றத்தை உணர்வதில்லை.

வியாதி. இச்சை யடக்கினால் மாத்திரம் போதாது. வியாதியை ஒழிப்பது போலவே இச்சையை நீக்கவேண்டும். அதை ஒரு சிறிதேனும் விட்டுவிட்டால் நம்மை யடக்கியாளும் சக்தியைப் பெற்றுவிடும். ஆனால் கஷ்ட காலத்தில் துக்கங்கொள்ளக் கூடாதா? நமது நண்பனுக்கு நேர்ந்தால் நாம் வருத்தம் கொள்ளக் கூடாதா? நண்பனுக்குத் துன்பம் நேர்ந்தால் அதை விடுவிப்பது நமது கடனே. ஆயினும் அக் கஷ்டத்தைப்பற்றி வருத்தம் பாராட்டுதல் தவறு. சிறிது இடம் கொடுத்தாலும் நம் மனதைக் கெடுத்துவிடும் அது. மனம், திடம் (Will) இவ் விரண்டும் ஏனைய பொருள்களின் சம்பந்தமில்லாமல் இருப்பதே அவசியம். அனேக விஷயங்களுக்கு நமது எண்ணமே காரணம். அவ்வெண்ணத்தை நீக்கிவிட்டால் என் நமக்கு உபத்திரவமுண்டாகவேண்டும். நமக்கு ஒருவன் தீங்கிழைத்தான் என்று நினைத்தால்தானே அவனுக்குப் பிரதி தீங்கு செய்யவேண்டுமென்று ஆத்திரமுண்டாகிறது. தீங்கிழைத்தான் என்பதையே நினையாமலிருந்துவிட்டால் தீங்கு ஒரு பொருட்டாகத் தோன்றாது. ஒரு பொருளை யடையவேண்டி அனேக துன்பங்களுக்குள்ளாகிறோம். அப்பொருள் வேண்டாமென்று தள்ளிவிட்டால் சஞ்சலம் ஏன் உண்டாகிறது? நம்முடைய மகன் இறந்து விட்டால் அதைக்குறித்து வருந்துவானேன். போகட்டுமே. சுகமென்பது என்ன? இப்போது உயிருடன் இருக்கிறோம். நாளைக்கு முடிசார்ந்த மன்னரும் ஒரு பிடி சாம்பராய்த் தானே போகவேண்டும். அப்போது இந்தச் சுகம் எங்கே? பொருள் எங்கே? நம்முடைய பரிசுகள் எங்கே? நம்மைத் தீங்கு செய்வதும் ஒன்றில்லை. நமக்கு நன்மை செய்வதும் ஒன்றில்லை. நமக்கொன்றுமே அவசியமில்லை. மனம் மாத்திரம் அமைதியாக விருக்கவேண்டும்.

மேலே கூறியிருக்கும் தத்துவம் கடினமானதாகவே தோன்றும். மனிதர் அப்படி இச்சையை அறவே ஒழித்துவிட முடியாது. ஸ்டாயிக்கர் மனிதர் முழுவதும் நல்லவராகவோ முழுவதும் கெட்டவராகவோ யிருக்கவேண்டும்; படிப்படியாகக் கெட்டவன் நல்லவனாக முடியாதென்று சொன்னார்கள். உலகத்தில் இருதிறத்தார் உண்டு. பழுதற்ற நல்லோர் (ஸ்டாயிக்கர்), இச்சைச் சுழலில் அகப்பட்டுத் தத்தளிக்கும் ஏனைய மனிதர். ஆகையால் ஸ்டாயிக்கர் மற்றோரைத் தங்களுக்கு நிகராக இல்லாதவரென்று அசட்டை செய்ததாகவும் ஏற்படுகிறது. ஆனால் நாளாவட்டத்தில் ஸ்டாயிக்கருக்கே தங்கள் மதக் கோட்பாடு அதிகக் கடுமையானதென்று ஏற்பட்டது. வைராக்கியம் உடனே உண்டாகாதென்றும் படிப்படியாக அந்நிலையை மனிதர் அடையவேண்டுமென்றும் அவர்கள் அங்கீகரித்தனர். மேலும் மனம் மாத்திரம் நன்மையானது. மற்றதெல்லாம் தீமை யென்பதையும் வற்புறுத்தாமல் சில விஷயங்கள் வெளியிலிருந்தும் நமக்கு ஒருவித சௌகரியத்தைச் செய்கின்றனவென்றனர். சுகம் சுத்தமாக வேண்டாம் என்பதில்லாமல் மிதமாக அனுபவிக்கலாமென்றும் அது நம்மை அடிமையாக்காமல் பாதுகாத்துக் கொள்ளவேண்டுமென்றும் விதிக்கப்பட்டது. மேலும் நமது கடமையைக் குறைவறச் செய்தால் மற்றோருடைய நல்லபிப்பிராயத்தை வேண்டாவிட்டாலும் நமக்கே ஒருவிதத் திருப்தி ஏற்படுகிறது. அதை எவ்வாறு தள்ளமுடியும்?

இம்மாதிரிச் சட்டங்களையும் கோட்பாடுகளையும் இலகுவாக்கியதன் காரணமாக இன்பம் மிதமாக அனுபவிக்கலாமென்று திட்டம் செய்யப்பட்டது. நன்னடத்தையின் காரணமாக இன்பமேற்படலாம். ஆனால் அந்த இன்பத்திற்காக நடத்தை நல்லதென்று கூறமுடியாது. "ஒரு நிலத்தைப் பயிரிடும்போது சில புஷ்பங்களும் அங்கங்கே முளைக்கின்றன. ஆனால் இப் புஷ்பங்களைப் பயிராக்க நிலத்தை உழவில்லை." மேலும் சட்டங்கள் இலகுவாக்கியதனால் ஜனங்களுக்குள் அன்னியோன்ய மேற்பட ஏதுவாயிற்று. மனிதரெல்லோரும் சகோதரர்கள் என்றும் எல்லோரும் இயற்கை யமைப்பின் பாகங்களாகையால் ஒருவரோடு ஒருவர் சம்பந்தப்பட்டவர்கள் என்றும் நம்முடைய செயல்களை மற்றோருடைய நன்மையைக் கருத்தில்வைத்தே செய்யவேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

பின்னும் மனிதன் உலகத்தில் ஓர் அங்கத்தினன் மாத்திரம் அல்லன். பிரபஞ்சத்தில் அவன் ஒரு பாகமாவான். ஆகையால் பிரபஞ்சக் கட்டுப்பாட்டுக்கு அவன் உட்பட்டவன். அவன் நடத்தைகள் எல்லாம் பிரபஞ்சத்தின் நடத்தைகளே. ஆனால் அந்த நடத்தைகள் அர்த்தமல்லாதவைகளல்ல. பிரபஞ்சத்திற்கு விரோதமாக நாம் ஒன்றும் செய்யமுடியாது. விதி என்பது அதிக வலிமையுள்ளது. அதுவே நம்மைத் தள்ளிக்கொண்டு ஒவ்வொரு சமயத்தில் ஒவ்வொரு மாதிரி நடிக்குமாறு வைக்கின்றது. விதியை வெல்லலாமென்று நினைப்பவன் மதியிலியாவான். ஒரு புத்திசாலியின் தீர்மானத்தை மாற்ற முடியாது. ஏனெனில் அவனுக்குத் தான் செய்யப்போவது சரியானதென்று தெரிந்திருக்கிறது. அப்படியிருக்க சர்வஞ்ஞனான ஈசுவரனின் தீர்மானத்தில் குறுக்கிட யாரால் ஆகும்? நமக்கு எது நன்மை என்று அவருக்குத் தெரியாதா? விதியே கடவுள். இத் தத்துவம் மன வமைதியைக் கொடுக்குமென்பதில் சந்தேகமில்லை. எதுவரினும் எல்லாம் ஈசன் செயல் என்று மனதைத் திடப்படுத்திக் கொண்டுவிட்டால் எதுவரினும் நம் மனவமைதி கெடாது. ஸெனெக்கா (Seneca) என்னும் ஒரு பெரியார் ஓரிடத்தில் கூறியிருப்பதாவது.—"மரணமும் விளையாட்டும் எனக்கு ஒன்றுதான். எவ்வளவு கடினமான வேலையா யிருந்தாலும் என்னைத் தளரச் செய்யாது. பணம் இருந்தாலும் இல்லாவிட்டாலும் எனக்கு அதன்மேல் அருவருப்புதான். செல்வம் வந்தாலும் போனாலும் என் மனத்தில் சந்தோஷமாவது துக்கமாவது கிடையாது. மற்றவர் பூமியை என்னுடையதாகவும் என்னுடைய பொருள்களை மற்றோருடையதாகவும் கருதுவேன். நான் எதைச் செய்தாலும் மற்றோர் என்னைப் பார்த்துக்கொண் டிருக்கிறார்களென்பதை ஞாபகத்தில் வைப்பேன். உண்பதிலும் பசியை ஆற்றுவதிலேயும் கருத்தை வைப்பேனேயொழிய வயிற்றை நிரப்ப எண்ணங் கொள்ளேன். என் சினேகிதர்களிடம் இதமாகவும் எதிரிகளிடம் சாந்தமாகவு மிருப்பேன். மன்னிப்புக் கேட்பதற்கு முன்னே மன்னித்து விடுவேன். உலகமே என்னுடைய சொந்தப் பட்டணம். அதை ஆள்பவர் கடவுள். நான் எதைச் செய்யினும் அவர் பார்வையிருந்துகொண்டே யிருக்கின்றது. பிரபஞ்சம் என்னுடைய ஆவியைக் கேட்ட தருணமே அதைச் சந்தோஷமாய் அர்ப்பணம் செய்துவிடுவேன்."

ஒவ்வொரு ஹிருதயத்திலும் கடவுள் இருக்கிறார். அவருடைய இருப்பிடத்தை அசுத்தமாக்கப்படாது. இந்த எண்ணம் நம்முடைய மனத்தில் குடிகொண்டு விட்டால் ஒருவித பயமும் இல்லை. மற்ற இன்பங்கள் இன்ப

---

உறுதியுடன் இருப்பவனுக்கு ஒரு துக்கமும் உண்டாவதில்லை.

நீ உனது உறவினனை விட உற்ற நண்பனை இழப்பது போலுள்ள கஷ்டம் வேறொன்றும் இல்லை.

யில்லை. மன வமைதியே. மேலான இன்பம். நன்னடத்தைக்குப் பரிசும் வேண்டுமா? ஒரு குதிரை நன்றாக ஓடினால் அது பரிசா கேட்கிறது? ஒரு நாய் வேட்டையைப் பார்த்துவிட்டால் பரிசா கேட்கிறது? தேனீ தேனைச் சேர்த்து வைத்துவிட்டு வெகுமதிக்கா கை நீட்டுகிறது? அதேபோல் நல்ல காரியத்தைச் செய்த மனிதன் அதைச் செய்வதே வெகுமதியாகக் கொள்வான். ஒரு நல்ல காரியத்தைச் செய்தவன் மரங்கள் ஒரு வருஷத்தில் பலங் கொடுத்தது மறு வருஷமும் தாமே கொடுப்பதுபோல் வேறு நல்லகாரியத்தைச் செய்கிறான்.

மனிதன் காலத்தை வீணாகக் கழித்தல் கூடாது. வீணாகக் கழித்தால் அவனுக்கு இன்பத்தைத் தருமென்று தோன்றினால் அவன் உடனே "நான் பிறந்தது இன்பம் அனுபவிக்கவா? மரங்களும், பக்ஷிகளும், ஈ, எறும்பு, புழு, பூச்சிகளும் எவ்வளவு சுறு சுறுப்பாக வேலை செய்கின்றன? நானும் அவைகளைப்போல் இயற்கைப் பொருளல்லவா?" என்று கருதவேண்டும். ஒருவர் பொருளை விரும்பவேண்டாம். விசேஷ அந்தஸ்தை அவ்வந்தஸ்திற்காக விரும்ப வேண்டாம். நமக்கு வேண்டியது மனவமைதி. கஷ்டம் நமக்கு ஒரு பொருட்டல்ல. கஷ்டம் வந்தாலும் நமது நன்மைக்காகவே வருகின்றது. மரணம் நமக்கு ஒரு பொருட்டா? பிறப்பு வளர்ப்பு இவைகளைப்போல் அதுவும் இயற்கைச் சம்பவந்தானே. என்றைக்காவது ஒருநாள் இந்த உடலினின்றும் ஆவி நீங்கவேண்டும்; என்று நீங்கினால் என்ன? முன்னதாக நீங்குவதே மேல். ஜீவியத்தில் நன்மையு மிருக்கிறது, தீமையும் இருக்கிறது. இதைவிட்டுப் பலாத்காரமாக நீங்குவதும் நன்மைதான்.

உலகத்தில் ஏன் தீமை இருக்கவேண்டும் என்பது தத்துவத்தின் முக்கிய கேள்வி. இதற்குச் சமாதானமாக ஸ்டாயிக்கர் ஆதியாத்மிக துன்பங்கள் துன்பமில்லை யென்றார்கள். மனிதனுக்குக் கஷ்டம்வந்தால் அது அவனுடைய நன்மைக்காகவே ஏற்பட்டது. அபரிமிதமான நன்மையின் நடுவில் ஒரு சிறிது தீமை யிருப்பது குற்றமாகாது. இவ்வளவு திவ்விய உலகத்தில் என் கால் ஏன் நொண்டியா யிருக்கவேண்டும் என்று ஒரு நொண்டி கேட்டால் அதற்கு உத்தரமாக, "அடே, அது நொண்டியா யிருப்பதால் உலகத்திற்கு ஏதோ நன்மையுண்டு. நீ ஓரணு. பிரபஞ்சத்தின் நன்மைக்காகவே ஓரணு சிரமத்தைப் பாராட்டலாகாது. மனிதனுக்குப் பின்னால் வரப்போவது தெரிந்தால் தனக்கு இப்போது உண்டாகும் துன்பத்தை இன்பமாகவே பாராட்டுவன். கடவுள் நம்மைப் பரீக்ஷிக்கவே துன்பத்தைக் கொடுக்கிறார். கஷ்டத்தினால்தான் மனிதனுக்குச் சில அரிய பெரிய குணங்கள் ஏற்படுகின்றன. ஸ்டாயிக் தத்துவம் அனேக விஷயங்களில் கொண்டாடத் தக்கதாகவிருக்கின்றது. மனிதனுக்கு அமைதி ஏற்படவேண்டும். இகபர சுகங்களைக் கருதி அவன் ஒரு காரியத்தையும் செய்யலாகாது. துன்பம் வந்தாலும் இன்பம் வந்தாலும் ஒரே மாதிரியாகக் கருதவேண்டும் என்பது நமது தேசத் தத்துவங்களில் சிலவற்றின் கருத்துப்போலவே இருக்கிறது.

(தொடரும்)

அந்நிய ஆட்சியில் அல்லல்தான் மிகுந்திருக்கும்.

# மேனாட்டு விழுச் செல்வம்

(பொ. திருகூடசுந்தரம் பிள்ளை, எம். ஏ., பி. எல்.)

1 தனவந்தர் அசத்தியத்தை மறைக்கத் திரையாகச் சத்தியத்தை விலை கொடுத்து வாங்குகின்றனரே யன்றி வேறெதற்கு மன்று. அவர்கள் நோய்க்குச் சௌகரியம் செய்யவே ஆரோக்கியத்தை விலை கொடுத்து வாங்குகின்றனர். வேறெதற்கு மன்று. செஸ்டர்டன்.

2 நான் அந்தப் புழுவை மிதித்தால் என்னைப்பற்றி அதற்கு ஞாபகப்படுத்தியவனாவேன். நான் அதை அலட்சியம் செய்துவிட்டால் அது தானே மறைந்து போகும்: ராக்பெல்லர்.

3 என்றேனும் ஒருநாள் நண்பனாய் விடுவான் என்றிருக்குமானால் எவ்விதம் நடந்து கொள்வோமோ அவ்விதமே பகைவனிடம் எப்பொழுதும் நடந்து கொள்ள வேண்டும். நியூமன்.

4 ஒரு பொழுதும் பின்னால் திரும்பாது எப்பொழுதும் முன்னோக்கி முனைந்து செல்பவன், மேகங்கள் விலகும் என்பதில் ஒருபொழுதும் சந்தேகம் இல்லாதவன், நியாயம் தோற்றாலும், அநியாயம் வெல்லும் என்று ஒருபொழுதும் கனவிலும் கருதாதவன், எழுவதற்கே வீழ்ச்சி, வெல்வதற்கே தோல்வி, விழிப்பதற்கே தூக்கம் என்று நம்புவன், ப்ரௌணிங்

5 கடவுளை அறிந்துவிடுவோம் என்று எதிர்பார்க்க இயலாது. ஆனால் கடவுளை அறியாமல் வேறெதை அறியவும் எதிர்பார்க்க இயலாது. பூடின்.

6 குறைந்த பட்சத் தீமையும், கூடிய பட்ச நன்மையும் விளையும்படி வாழ்வதே உலகில் தலைசிறந்த ஞானமாகும். ரொமைன் ரோலண்டு.

7 "உமக்கு இயற்கையைப்பற்றிச் சிரத்தை யுண்டா"—"ஆம், அதிகம் உண்டு; ஆனால் அதைவிட அதிகமாயுண்டு மனிதர் விஷயத்தில்" என்றார் ப்ரௌணிங். செஸ்டர்டன்.

8 வாயால் மொழியும் மொழிகளிலும் கையால் எழுதும் மொழிகளில் மிக துக்ககரமானவை—"அவ்விதம் இருந்திருக்கக்கூடும்"—என்பவையே. விட்டியர்.

9 மக்களில் அநேகர் தாம் அனுபவிப்பதைவிட அதிக இன்பத்தை அனுபவியாது வீணாக எறிந்துவிடுகின்றனர்! ஆவ்பரி.

10 மனிதர் தம் வாழ்நாளில் அதிக காலத்தை மீதிக்காலத்தைச் சஞ்சலமுள்ளதா யாக்கும் காரியங்களிலேயே செலவு செய்கின்றனர்! லாபுரூயர்.

11 படிப்பில் பிரியமில்லாத பார்த்திபனாயிருப்பதைவிட ஏராளமான நூல்களுள்ள எளியவனா யிருப்பதையே விரும்புவேன். மக்காலே.

ஒப்புக்குச் செய்தால் உள்ளதும் கெடும்.

12 எவன் தன் தேசத்தினிடம் அதிக அன்புடையவனாயிருக்கிறானோ, அவனே பொதுவாக பிறதேசத்தினிடம் அதிக நியாய முள்ளவனாக இருப்பான். மாரிஸ்.

13 தீமையோடு நம்மைப் பழக்கப்படுத்தும் நூல்கள் தீயவைகளே. ஆவ்பரி.

14 ஒன்றுமே அறியாதவன் வாழ்பவனாகமாட்டான். கிரேவியன்.

15 கூலி உண்டோ இல்லையோ ஒவ்வொரு மணிநேரமும் வேலை செய்யத் தவறாதே. வேலையைச் செய்துவிடமட்டும் செய், வெகுமதி யடையாமல் தப்பித்துக் கொள்ள முடியாது. எத்தனைமுறை தோற்றாலும் சரி, வெற்றிக்கே பிறந்துள்ளாய். எமர்ஸன்.

16 சோம்பல் இளைப்பாறுதல் அன்று. அது வேலையைவிட அதிகக் களைப்பு அளிப்பதாகும். ஒன்றுஞ் செய்யாதிருந்தால் இளைப்பாறக் கஷ்டமாகும். ஆவ்பரி.

17 செய்யவேண்டியதைச் செய்யத் தீர்மானித்துக் கொண்டு, செய்யத் தீர்மானித்ததைத் தவறாமல் செய்து முடிப்பாயாக. பிராங்க்லின்.

18 தொல்லையில்லாமல் இருப்பதற்காகவே ஜனங்கள் "நாங்கள் எல்லோரும் ஒரே மதத்தினர்" என்று கூறிக்கொள்கின்றனர். ஆனால் விஷயத்தை நன்கு ஆராய்ந்தால் எல்லா விஷயங்களிலும் ஒரே மதத்தையுடைய மூன்று பேரைக்கூட எங்கும் காணமுடியாது. ஸெல்டன்.

19 அற்பமாய் எதிர்பார்க்கவும், அதிகமாய் அனுபவிக்கவும் கற்றுக்கொள்வதே ஜயத்தின் ரகஸியம். கதே.

20 துன்பத்தைப் பொறுப்பது விதியை வெல்வதாகும். காம்பல்.

21 வீரம் என்பது அபாயத்தை அலட்சியம் செய்வதன்று. அதைத் தைர்யமாய்த் துணிந்து எதிர்ப்பதாகும். ஆவ்பரி.

22 மனச் சாட்சிக்கு விரோதமில்லாமல் நடந்தால் அது இடையறாத விருந்தாகும். ஸெனீக்கா.

23 மேல் நோக்காதவன் கீழேயே நோக்குவான். உயரப் பறக்கத் துணியாத ஆன்மா ஒருவேளை தரையில் புரளவே விதிக்கப்பட்டிருக்கும். பீக்கன்ஸ்பீல்டு.

24 ஜனங்கள் இறந்தோரைப் பேசுவது போலவே இருப்போரையும் பேசுவார்களானால் எவ்வளவு நன்மையாய் இருக்கும்? ஆவ்பரி.

25 முடிவில் பிரதானமானது நாம் எண்ணுவது எது, அறிவது எது, நம்புவது எது என்பதன்று. நாம் செய்வது எது என்பதொன்றே பிரதானமானதாகும். ரஸ்கின்.

26 தவறு செய்தால் வெட்கப்படுதல் நல்லதே. ஆனால் அதை ஒப்புக்கொள்ள ஒருநாளும் வெட்கப்படாதே. ஆவ்பரி.

27 சந்தோஷமான மனம் சற்றுமிடையறாத விருந்தாகும்—தனக்கன்று, பிறர்க்கு. பர்டன்.

28 உன் கடமையைத் தைரியமாய்ச் செய்துவிட்டால் நீ அடையும் பலன் யாது? அதைச் செய்ததையே பலனாய் அடைவாய். செயலே பலனாகும். ஸெனீக்கா.

உலகத்தில் அழியாதது உண்மை ஒன்றே.



29 சந்தோஷத்தைத் தேடாதே. ஆனால் சந்தோஷமாயிருக்கச் சதாகாலமும் தயாராயிரு. ரஸ்கின்.

30 சண்டைக்கு இருவர் தேவை. நீ அவ்விருவரில் ஒருவனாயிராதே. ஆவ்பரி.

31 துன்பம் அனுபவிக்கத்தான் செய்கிறேன்; ஆனால் கடவுள் அருளால் அதற்காக நான் மனதைச் சஞ்சலப்படுத்திக் கொள்வதில்லை. வெஸ்லி.

32 ஆசையை ஒழி, மனச்சாந்தியைக் காண்பாய். அக்கம்பிஸ்.

33 நாம் ஒருபொழுதும் அனுபவிக்க முடியாத துன்பம் "மரணம்" ஒன்றே—நாமுள்ள பொழுது மரணமில்லை, மரணம் வரும்பொழுது நாமில்லை. கிரேக்க ஞானி.

34 மனம் சாந்தமாயும் சந்தோஷமாயும் இருக்க வேண்டுமானால், அதை அறிவுள்ள உயர்ந்த எண்ணங்களைக்கொண்டு நிரப்பவேண்டும். ஆவ்பரி.

35 சான்றோரிடம் இழிவுரையால் கோப மூட்டப்படாதிருக்கப் போதிய நல்லறிவும், பிறர் தீமையை மறந்துவிடப் போதிய வேலையில் கவனமும், வன்மம் பாராட்டாதிருக்கப் போதிய அலட்சிய புத்தியும் உண்டு. நியூமன்.

36 நாம் அறியாதவரிடம் காட்டும் அன்பு நாம் அறிந்தவரிடம் காட்டும் அன்பைப் போலவே ஓர் அழியாத உணர்ச்சியாகும். செஸ்டர்டன்.

37 செய்ய வேண்டியதைச் செய்ய முயல்; முயன்றால் செய்யவேண்டியது இதுவென்பதில் சந்தேகம் ஏற்படாது. ஆவ்பரி.

38 எல்லா விஷயங்களிலும் நல்ல அம்சத்தைக் கவனிக்கவே எப்பொழுதும் முயல். அநேகமாக ஒவ்வொரு விஷயத்திலும் நல்ல அம்சம் உண்டு. ஆவ்பரி

39 நல்லவன் ஞானி சில சமயங்களில் உலகத்தைக் கோபிக்கலாம், சில சமயங்களில் அதற்காக வருந்தலாம். ஆனால் உலகில் தன் கடமையைச் செய்பவன் எவனும் அதனிடம் ஒருபொழுதும் அதிருப்தி கொள்வதில்லை என்பதுமட்டும் நிச்சயம். ஸௌதி.

40 அதிர்ஷ்டம் அதிகம் அளிக்கக்கூடும், ஆனால் அதிகத்தைப் போதுமானதாக்குவது மனமே. பாயில்.

41 பணம், விருது, பதவி அடைதல் எல்லோராலும் இயலாது. ஆனால் ஒவ்வொருவரும் நல்லவராயும்: தயாள குணமுடையவராயும் அறிவுடையவராயும் இருக்க முடியும். வாவனார்கூஸ்.

42 உன் மனோபீஷ்டத்தைச் சாதித்துக்கொள்ள வாளால் வழி செய்து கொள்வதை விட, அதை உன் நகை முகத்தால் சாதித்துக் கொள்வதே சாலச் சிறந்ததாகும். ஷேக்ஸ்பீயர்.

43 யாரானாலும் "ஆம்" என்று கூறிவிட இயலும். ஆனால் "ஆம்" என்று சந்தோஷமாய்க்கூற எல்லோராலும் முடியாது. "இல்லை" என்று கூறுவதோ அதைவிடப் பன்மடங்கு அதிகக் கஷ்டமான காரியம். ஆவ்பரி.

வைக்கோல் போர் ஆகாயமளாவி நிற்பினும் சிறு தீப்பொறியால் மறைந்துவிடுகின்றது.

44 தனி நபர்கள் அடிக்கடி மறப்பதும் மன்னிப்பது முண்டு. ஆனால் சமூகங்கள் ஒருபொழுதும் அவ்விதம் செய்யா. ஆவ்பரி.

45 ஆசைப்பட சிலவும் அஞ்சப்பலவு முள்ள மனம் சஞ்சல முடையதாகும். பேக்கன்.

46 தனவந்தன் சரீராரோக்கியமாய் இருக்கவேண்டுமானால் தரித்திரனைப் போல வாழவேண்டும். டெம்பிள்.

47 தான் படிக்ககூடிய அளவு நூல்கள் வாங்க முடியாதவன் தரித்திரம் மிஞ்சியவனாகவே இருகக வேண்டும். ஆவ்பரி.

48 நான் லட்சுமியிடம் பிரார்த்திப்ப தெல்லாம் நான் செலவு செய்யக்கூடியதைவிடச் "சிறிது" அதிகமாக அளித்தருள வேண்டும் என்பதே. ஹோம்ஸ்.

49 வறிஞனுக்குப் பல பொருள்கள் தேவை. ஆனால் பேராசைக்காரனுக்கோ எல்லாப் பொருள்களுமே தேவை. ஸெனீக்கா.

50 பெருமைப்படுத்திக் கொள்வதற்குச் செல்வத்தில் ஒன்றுமில்லை. ஆவ்பரி.

51 உண்மையில் கெட்ட பருவம் என்று ஒன்று கிடையாது. நல்ல பருவத்தில் பலவகைகளே உண்டு. ரஸ்கின்.

52 கல்விச்சாலை யொன்று திறப்பவன் காராக்கிருகம் ஒன்று மூடுகிறான். விக்டர் ஹீகோ.

53 நான் சேர்த்ததை இழந்தேன்; செலவு செய்ததைப் பெற்றேன்; கொடுத்ததை உடையேன். டெவன்ஷேர்.

54 எல்லோரும் ஆனந்தமாய் இருக்கலாம். ஆனால் சிலரே பெருங்காரியங்களைச் செய்து முடிக்க இயலும். ரஸ்கின்.

55 சாத்தான் நேரில் போகமுடியாத இடத்திற்கு மதுவை அனுப்புகின்றான். யூதப் பழமொழி

56 ஒவ்வொருவனும் இரண்டு கல்விப் பயிற்சி உடையவன். ஒன்று பிறரிடம் பெறுவது. மற்றொன்று—அதைவிட முக்கியமானது—தனக்குத் தானே தந்துகொள்வது. கிப்பன்.

57 கற்பது கடினம்; ஆனால் அதைவிடக் கடினம் கற்பதை மறப்பது. ஆவ்பரி.

58 அதிகம் கற்றவரே தமக்கு எவ்வளவு அற்பமாகத் தெரியும் என்று நன்கு அறிந்து சொன்னக் கூடியவராவர். ஆவ்பரி.

59 இருதயத்தைப் பெருக்கி அலங்கரித்துக் காலியாக வைத்திருப்பது என்பது விரும்பினாலுங்கூட முடியாத காரியம். நாம் தயாராக்குவது நன்மை புகவா தீமை புகவா என்பதொன்றே கேள்வி. கிப்பன்.

60 ஒருவனுடைய அறிவை அபகரித்துவிட்டால் அவனைச் சிக நிலைமையில் வைப்பதாகாது. விலங்கு நிலைமையில்—அதுவும் விலங்குகளில் எல்லாம் அதிக துஷ்டத்தனமான விலங்கு நிலைமையில்—வைப்பதே யாகும். ஆர்னால்டு.

---

சுதந்தர உணர்ச்சி பெற்ற எந்த சமூகத்தையும் ஓர் பலாத்காரத்தால் அடக்கிவிட நினைப்பது பெருந் தவறு.




## மங்கையர்க்கரசியார்

(ஸ்ரீமதி. அசலாம்பிகை அம்மையார்.)

இப்பெயரை எண்ணும்போதே உள்ளத்தில் உவகைப்புனல் பெருகிப் பாய்கின்றது. பெருமைத்தேன் பிலிற்றுகின்றது. அன்பின் மணம் வீசுகின்றது. இவர் யாரென்பது தமிழ் நாட்டினருக்கு எடுத்துக் காட்டவேண்டியதில்லை. தமிழ்நாட்டு மூவேந்தர்களுள் பாண்டிய மரபில் தோன்றிய முடிமன்னவனின் பட்டத்தரசியாகத் திகழ்ந்தவர், மூவேந்தருள் மற்றுமொருவராகிய சோழர் குடியில் அவதரித்தவர். இயற்கையாக மானினியார் என்னும் பிள்ளைத் திருநாமம் பெற்றவர். அவர் தம் பேரறிவின் பெற்றிமையால் மங்கையர்க்கரசியார் என்னும் சிறப்புப் பெயரைப் பெற்றனர். யாரால் பெற்றனர்? மூவாண்டில்-ஞானப்பாலுண்ட ஆளுடைய பிள்ளையார் திருவாக்கினால் பெற்றனர்! என்னே பேறு! என்னே தவம்! திருவாலவாய்ப் பதிகத்தில்,

"மங்கையர்க்கரசி வளவர் கோன்பாவை
வரிவளைக்கை மடமானி
பங்கயச் செல்வி பாண்டிமாதேவி"

என்று தொடக்கத்திலேயே அவர்தம் குணப்பெருமை, குடிப்பெருமை, இளமைப் பருவம், செல்வச் செழுமை, பதவி இவைகளைச் சுருங்கச் சொல்லி விளங்க வைத்தருளினார்.

இதனைப் பெரிய புராணம் பாடியருளிய குன்றத்தூர் சேக்கிழார் சுவாமிகள் விரித்துரைகாண்பார்போன்று

"மங்கையர்க்குத் தனியரசி எங்கள் தெய்வம்
வளர்திருக் குலக்கொழுந்து வளைக்கைமானி
செங்கமலத் திருமடந்தை கன்னி நாடாள்
தென்னர் குலப்பழி தீர்த்த தெய்வப்பாவை"

என்று விளக்கமுறப் பாராட்டினார். ஆளுடைய பிள்ளையார் மங்கையர்க்கரசி என்றருளினார். சேக்கிழாரோ, "மங்கையர்க்குத் தனியரசி" என்று

---

உலகத்தில் ஒவ்வொரு சிறு விஷயத்தையும் ஊன்றிக் கவனிக்க வேண்டும்.

விரிவுற அமைத்தனர். மங்கையர் குழுவில் குணநலத்தாற் சிறப்புற்றவரை அரசி என்பது மரபு. தனியரசி என்பது ஒப்பாருமிக்காரும் இல்லாத ஒரு பெருந்தகைமைக் குரியவர் எனவே பொருள்படும். சைவசமயத்தினைத் தக்க தருணத்தில் தழைத்தோங்குமாறு தலைநின்று காத்த இவ்வம்மையாரைத் தெய்வப் புலமைச் சேக்கிழார் "எங்கள் தெய்வம்" எனச் சைவப்பற்றுடையார் அனைவர்க்கும் வழிபடும் குலதெய்வம் என்றனர். பின்னர் வளவர் திருக் குலக்கொழுந்து என்றமையால் சோழவேந்தரின் ஒளிபெற்ற குலத்திற் றளிர்த்த கண்கவர் வனப்புடைய வளர்ச்சிக் கறிகுறியாகிய பூங்கொழுந்து போல்வார் என்பது புலனாகின்றது.

கொழுந்துவிடா மரமும் பயனற்ற தாதல்போல் இம்மங்கையை நல்காவிடில் அச்சோழர் மரபும் செழுமை குன்றியதாகும். உலகில் ஆண்மகவு பிறந்த குடியைமட்டில் உய்விக்க முடியும். பெண்மகவோ பிறந்த குடி புகுந்த குடி இரண்டினையும் உய்விக்கச் செய்தல் இயல்பு என்பதே அறிஞர் கொள்கை. இவ்வம்மையார் அவதரித்தமையால் அச்சோழர் மரபே தனிச் சிறப்பெய்திய தன்மை. புகுந்த குலமாகிய பாண்டிய குலமும் இவரது சம்பந்தத்தினால் பெரிய அபாயத்தினின்றும் மீட்சிபெற்றது. இதனை அடுத்தபடியாக "தென்னர் குலப்பழி தீர்த்த தெய்வப்பாவை" என்ற வாக்கியத்தினால் விளக்கியருளினார்.

ஞானசம்பந்தப் பெருந்தகை வளவர்கோன்பாவை எனப் பிறந்த மரபின் பெருமையும், அவர் பெறலரும் பேறாகப் பெற்று கண்மணியெனக் காதலித்து வளர்த்துப் பாராட்டிய அருமையும் தோன்றக் கூறி யருளினார். உயர் குடியிலும் நிறைதிருவிலும் பிறந்து வளர்ந்த பெண்களே பேரறிவும் பெருமித வுள்ளமும் உடையவர்களாய்த் திகழ்கின்றனர் என்பதும் உய்த்துணரலாகும். வரிவளைக்கை மடமானி என்ற குறிப்பு மடந்தைப் பருவம் கடவாத இளமையினர் என்பது தெளிவு. ஆளுடைய பிள்ளையார் அருளியவாறே, சேக்கிழார் சுவாமிகளும் வளைக்கைமானி என்று அமைத்தனர்.

பண்டைக்காலத்தில் மகளிர் எல்லாம் தத்தம் பருவத்திற்கேற்ற அணிகள் அணிவதும், ஆடை புனைவதும், தம்மை அலங்கரித்துக்கொள்வதும் ஓர் வரையறைக் குட்பட்டே பொது வழக்கமாகக் கொள்ளப்பட்டது. தற்காலத்தில் அன்னிய நாகரிகம் நுழைந்ததின் பயனாகத் தம்மைக் காண்போர் புறத்தே சென்றாவது இகழ்வார்கள் என்று தெரியுமாயினும், அதனைப் பொருட்படுத்தாமல் பேரிளம் பெண்களிற் சிலரும் தம்மை ஒப்பனை செய்துகொள்ளுவதை அடிக்கடி காண்கின்றோம். இந்தப் பொருத்தமற்ற நிலை அஞ்ஞான்று வழக்கில் இல்லை. சங்க வளையல்களை மகப்பெறாத இளமடந்தையரே அணிவது இயல்பாகச் சொற்ப காலத்திற்கு முன்னும்கூட வழக்கிலிருந்தது. இத்துணை இளமைப் பருவத்திலேயே முதிர்ந்த மதப்பற்றும், ஆழ்ந்த தெய்வ பக்தியும், பணிவுடைமையும், நாயகன் ஊழ் வலியால் தவறிழைப்பினும் தந்திரமாக வழியொழுகி நிற்பவர்போல் காட்டி அந்தரங்கத்தினை அகத்தேயடக்கிச் சமயோசிதமாக நல்வழிப்படுத்தவல்ல சக்தியும் எவ்வாறு பெற்றனர் என்று

கொலை களவு செய்யக்கூடிய துஷ்டர்களை அடக்குவதற்காக ஏற்பட்ட சிறைச்சாலைகள் சுதந்தர உணர்ச்சி யுடையோரின் இல்லங்களாகத் திகழ்வது எவ்வளவு ஆச்சரியம்.



ஒரு சிலர் ஐயுறலாம். இதற்கு ஐந்தில் வாராதது ஐம்பதில் வாராதென வழங்கும் நம் நாட்டுத் தொன்மைப் பழமொழியே தக்க விடையாகும். மானினியார் என்பது அவரது இயற்கைப் பெயராயினும் சைவநலம் சலையுறாது செழித்தோங்குமாறு தலைநின்று வேண்டுவன செய்த மதாபிமானமே உருக்கொண்டதன்ன இவரது பண்புக்கு இயற்பெயர் சிறப்புப் பெயராகவும் அழகு தருவதாகும். சுவாமிகள் "பங்கயச்செல்வி" என்றருளியதை சேக்கிழார் பெருமான் "செங்கமலத் திருமடந்தை" என்றழைத்தனர். இதன் கருத்து இலக்குமிபோன்ற நிறைமங்கல மடந்தை என்பது தெளிவு. சிவனடியார் ஒருவர்க்கு இன்னல் செய்பவர் மீளா நரகிற் காளாவர் என்பது தொன்னூற்றுணிபு. அங்ஙனமிருக்க சைவ சமயத்தினையே நிலைநிறுத்தவேண்டி திருவவதாரம் புரிந்தருளிய பாலறவாயருக்கும் அவரது பரிவாரங்கட்கும் தீங்கிழைக்கத் துணிந்த அடிகண்மார்கட்கு ஆதரவளித்து அவர் சொல்வழி நின்று ஆலய வழிபாட்டினையும் கைவிட்டுக் குலப்பழி தேடிக்கொண்ட கூன்பாண்டியன் அழிந்துபடாமலிருந்ததற்குக் காரணம் மானியாரின் முழு மங்கல வன்மையே ஆதலினால் "செங்கமலத் திருமடந்தை" என வாயார வாழ்த்தினர். "ஏர் பிடித்தவன் என்ன செய்வான்? பானை பிடித்தவள் பாக்கியம்" என்னும் பழமொழியே விழுமியதாயிற்று. இதுபோன்ற சான்றுரைகள் நம் நாட்டில் வேரோடிக்கிடக்கின்றன. பின்னும் இவரைப் "பாண்டிமாதேவி" என ஸ்ரீ ஞான சம்பந்தமூர்த்தியாரும் "கன்னி நாடாள் தென்னர்குலப்பழி தீர்த்த தெய்வப்பாவை" எனத் தெய்வப்புலமைச் சேக்கிழார் அவர்களும் பாராட்டிய தன் நுட்பம் கவனிக்கத்தக்கது. அரசனுக்குத் தேவியாக அமையும் அரசி அரசபோகத்தை ஏக போகமாக அநுபவிப்பதும் பெரும் பதவியில் வைத்துப் பிறர் பலரால் போற்றப்படுவதுமே சாதாரண தருமம். அவ்வாறு பட்டமஹிஷிகளாக நிற்பவர்களைத்தான் பரமபாக்கியவதிகள் என நாம் போற்றிப் புகழ்கின்றோம்.

அத்தகைய பெண்கள் தேவி என்றழைப்பதற்கே உரியவராவர். அவ்வாறின்றித் தமக்குப் பதவியளித்த தமது நாயகனின் அரசபதவி நிலை நிற்கவும், முன்னோர்கள் ஈட்டிய கீர்த்தி மழுங்கி மறையாமல் ஒளிர்தரவும், குடி மக்களின் மனத் துன்பமும், தெய்வ சாபமும் வளராது தடுக்கவும் தம் சொந்த மதிவன்மையினால் திறமையுடையவராகிய மானியாரை மாதேவியார் என்று புகழ்ந்தனர் போலும்! சேக்கிழாரும் இதனைத் தென்னர் குலப்பழிதீர்த்த தெய்வப்பாவை என்று விரிவுபடுத்தினர். தடாதகைப்பிராட்டியாரும், சிவபரஞ்சுடரும், செவ்வேற் கடவுளும், முறையே முடிசூடி ஆண்டதாகிய ஒப்பில் புகழ்வாய்ந்த பாண்டிய மரபின்கண் பிறந்த ஓர் மன்னவன் சைவசமயத்தைக் கைவிட்டு நாட்டினரின் அவமதிப்புக்கு உரியவனானான் என்னும் பழியைப் போக்கியது அவர் தம் வாழ்க்கைத் துணைவியாகிய ஓர் பெண் எனில் அவரை மானிட மடந்தையாக எண்ணாமல் தெய்வப்பாவை என்றது மிக மிகப் பொருத்தமன்றோ? "அரசன் எவ்வழி குடிகள் அவ்வழி" என்றபடி அரசன் மனமாற்றத்தினால் குடிகள் மதிமாறுவது எளிதாய்விடும். இப்பழி அரசனையே சாரும். ஆதலின் தென்னர் குலப்பழிதீர்த்த தெய்வப்பாவை என்ற குறிப்பு போற்றற் குரியது.

இக்கால சிறைச்சாலைகளெல்லாம் காண்பதற்கரிய தவச்சாலைகளாக விளங்குகின்றன.

இம்மாதரசியாரின் வரலாறே இந்தியப் பெண்களின் திறமைக்கும் உரிமைக்கும் சான்று பகர்வதாகும். இந்தக் குடும்பங்களில் உண்மையதிகாரிகள் குடும்பத் தலைவிகளே யாவர். விறல் மந்திரி மதியுடையாரே உத்தமப் பெண்டிராவர். தக்க தருணத்தில் தமது மந்திரி மதியைக்கொண்டு வினை செய்யும் உரிமையும் அபாயத்தை நீக்கும் முன் யோசனையும் உடையவர்களாய் விளங்கிய நம் முன்னோர்களாகிய தாய்மார்களை அடிமை நிலையில் வைத்திருப்பதாக ஒரு சிலர் கருதி வருந்துகின்றனர். ஆடவர் ஏற்கும் போலியதிகாரப் பொறுப்புக்களையும், கவுரவப் பதவிகளையும் வகிக்க முன்வருவதே கண்ணியமென்று எண்ணவும் பின்வாங்கவில்லை.

தெய்வானுகூலமாய்த் தற்போது ஏற்பட்டுள்ள சுதந்தரவேட்கைப் போரில் இந்தியப் பெண்மணிகளின் சகிப்புத்தன்மையும், தியாக புத்தியும், உறுதியும், ஒழுங்கும், ஆண்பாலர்கட்கும் வியப்பூட்டிய தென்பதை மறுக்க முடியாது. அதிகாரம் வகிப்பதே அடிமைத்தனம் என்பதைத் தற்காலம் மறந்திருந்த பெண்களும் உணர்ந்துகொண்டனர். கல்கத்தா சர்வகலாசாலைப் பட்டம் பெற்ற பல பெண்களே பெரும்பாலும் இவ்வாண்டு நடந்த தருமப் போரில் தலைமை வகித்து மகாத்மாவும் பாராட்டும்படி பின்னிடாது தொண்டாற்றிச் சிறப்புற்றனர். இனியாவது பெண்கள் குடும்பத் தலைவிகளாகவிருந்து தம் கடமைகளை யாற்றுவதே சுதந்தரபூஷணமாகுமல்லது பதவி பெறுவது அடிமைத்தனத்தின் அடையாளம் என்பதை நன்குணர்வார்களாக.

சோழமன்னவர் திருமகவாய்ப் பிறந்து தமிழ் அணங்கு கொலுவீற்றிருந்த தண் பாண்டி நாட்டின் முடிமன்னவனின் பட்டத்தரசியாகச் சிறந்திருந்த இம்மங்கையர்க்கரசியார் எனும் மானியார் சிவனடியாரைக் கண்டால் மூன்று நாள் உபவாசமும், கண்டவரைக் கண்டால் ஒரு நாளைய உபவாசமும் இருக்க வேண்டுமெனும் துவேஷ உணர்ச்சியினையுடைய அமணர் குழுவினரால் மனமாறிச் சமயப்பற்றழிந்து மரபொழுக்கத்தில் வழுவிய மணாளனாகிய பாண்டியனை நல்வழிப்படுத்த தம்மனமொத்த நல்லமைச்சரிடம் கலந்து அவர் துணைகொண்டு மன்னவன் அறியாவண்ணம் ஞான சம்பந்தமூர்த்தியார்பால் பாண்டி நாட்டின் நிலையும் பாண்டியன் சார்பையும் வேவுகாரர்மூலம் தெரிவித்து ஆலவாய்க்கெழுந்தருளி அமணர் ஆக்கங் குலையவும், சைவம் பொலியவும் மன்னவன் பண்டைமதப் பற்றுடையவனாய் உய்ந்து கரையேறவும் அருள் புரியுமாறு விண்ணப்பித்தனர்.

அது கேட்ட ஆளுடைய பிள்ளையாரும் அவ்வாறே மதுரையம்பதியடைந்து மந்திரிகுலச் சிறையாரும் மானியாரும் தனிமையில் வந்து தாள் பணிந்து எதிர்கொள்ளப் பரிவாரங்களுடன் சென்று சைவமடம் ஒன்றிற் றங்கியிருந்தனர்.

இதனையறிந்த அமணர் மனம் பொறாராகி வாதம் நிகழின் சிவானுபூதிச் செல்வராய் மூவாண்டில் மூதுணர்வு பெற்றுப் பண்ணிசைப் பதிகம் பல பாடும் அண்ணலாகிய ஆளுடைய பிள்ளையாரால் மன்னன் மனமாறினால் தமது செல்வாக்குக் குறையுமாதலினால் முன்யோசனையுடன் அவரையும் அவரது அடியார் கூட்டத்தினையும் கொடிய முறையில் அழிக்கத் தீர்மானித்து

---

**நீண்ட நேரம் வார்த்தையாடுவதை விட கொஞ்ச நேரம் யோசனை செய்வது மேல்.**



இரவில் தங்கியிருந்த மடத்தில் தீயிட்டனர். எல்லாம்வல்ல இறைவனருள் பெற்ற எமது ஞானசம்பந்தப் பெருந்தகை எழுந்தருளியிருந்த மடத்தினைப் பற்றிய தீ விரைவில் மூளாமல் புகையத் தொடங்கியது. இதனைக் கண்ட அடியார் சுவாமிகளிடம் விண்ணப்பம் செய்ய அவர் இவரது அறியாமைக்கிரங்கி,

“செய்யனே திருவாலவாய் மேவிய
ஐயனே யஞ்சலென்றேற்கருள் செய்வாய்
வெய்யராம் அமணர் கொளுவும் சுடர்
பையவே சென்று பாண்டியற்காகவே”

என்று கருணை ததும்ப இக்கனல் மெல்லச் சென்று பாண்டியற்காகவே எனப் பதிகம் அருளினர். மெல்லச் சென்று பற்றாமல் விரைந்து செல்க என்றருளியிருப்பின் பாண்டியன் உயிர் தரிப்பதே யரிதாகும். அன்பிற்கினிய மங்கையர்க்கரசியாரின் மங்கலம் மங்காமலிருக்கும் பொருட்டு அவர் தம் நாயகனை உய்விக்கவும், அவர்மூலம் தென்பாண்டி நாடும் தெய்விகச் சைவமும் செழித்தோங்கவும் அருளவேண்டியே “பையவே சென்று பாண்டியற்காகுக” என்று அமைத்தருளினார்.

இதன்பயனாக வேந்தன் உடலில் வெப்புநோய் தோன்றி எம்முறைச் சிகிச்சைகளாலும் தணியாதாகிப் பாலறாவாயரால் தீரலாம் எனத் தனது அரசியும் அமைச்சரும் புகன்ற ஆலோசனையை ஏற்று வரும்படி இசைந்தனன். இவ்வாணைதாங்கி உய்ந்தேமென மகிழ்ந்து உத்தமியாரும் அமைச்சர் குலச்சிறையாரும் அடிகளை யணுகிப் பணிந்து போற்றி அரசமாளிகைக்குக் கொண்டணைந்து அவரால் திருநீறளிக்கப்பெற்று வெப்புநோய் நீங்கியதுடன் பிறவியிலேயே அமைந்திருந்த கூனும் நீங்கி சவுந்தர பாண்டியன் எனும் மறு பெயரும் பெற்றுச் சைவப் பற்றுடையவராய்த் திகழ்ந்தனன். பின்னர் அமண் கூட்டத்தினர் அவர் மதவுண்மையை நிலைகாட்ட வேந்தன் முன்னிலையில் அனல் வாதம் புனல் வாதம் என்னும் முறைகளிலும் முயன்று வெற்றி பெறாது வீழ்ச்சியுற்றனர்.

சரித வரலாற்றினால் நாம் எடுத்துக்காட்ட விழைந்ததெல்லாம் மங்கையர்க்கரசியாரின் உன்னத் துறுதியும், திறமையும், கற்பும், அறிவும் ஞானசம்பந்தராகிய குருநாதரையே பாராட்டும்படி செய்ததென்பதே. மாதர்க்கில்லை மருமமும் உறுதியும எனும் சில வாய்மதக்காரர் கூற்று இவ்வம்மையாரின் சரிதத்தினால் பொன்றிய தன்மை.

பெண்கள் அறிவுடையவராயின் எவ்வித இடையூறும் எய்தாமற் றடுக்க முடியும் என்பதும் இச்சரித்திரத்தினால் கல்வெட்டேயாகும். இந்திய மாதரின் வெளிப்படையான பணிவும் அடக்கமும் இதர நாட்டினர் அறிவது எளிதன்று. ஆகவே அன்னாரிற் சிலர் அறியாதவைகளையும் அறிந்தவர்போல் கூறிவிடுகின்றனர். நாகரிகப் பித்தினர் சிலரும் அவர் கொள்கையை ஆமோதிக்கின்றனர். இதுவே கலிகாலம். இதுவே மதிமோசம்.

---

தேசபக்தியுடைய ஒவ்வொருவரும் இந்தியாவில் நடைபெறும் பிரிட்டிஷ் ஆட்சி முறையிலுள்ள ராஜதந்திரங்களைக் கற்றுக்கொள்ளட்டும்.

# தலை பிழைத்தது தம்பிரான் புண்ணியம்!



“மீசை முளைத்துள்ள ஆண்பிள்ளைச் சிங்கங்கள்” என்று மார் தட்டுகிறவர்களை யெல்லாம் ரயில்வே ஸ்டேஷனுக்கு அனுப்பி டிக்கட்டு வாங்கச்சொல்லுங்கள். வியர்க்க வியர்க்க ஓடி ஒரு டிக்கட்டு வாங்க நான் பட்டபாடு பஞ்சு தான் படுமோ-சொல்லத்தான்படுமோ? நான் ஒரு டிக்கட்டு வாங்கிவிட்டேன்!

# சிறுகதை

## பழிக்குப் பழி.

(பண்டித லி. ராமசாமி.)

கலியாணம் என்றால் ஆசை இல்லாதவர்களும் இருப்பார்களா என்பதில் எனக்குப் பெரிய சந்தேகம். அன்று பிறந்த குழந்தைமுதல் அறுபது வயதுக் கிழவன் வரை கலியாணம் என்ற வார்த்தையைக் காதில் கேட்டாற்போதும்—சொக்கிப்போய்விடுகிறார்கள் என்பது என் நம்பிக்கை. இதைப்பற்றி வாதம் செய்து சொற்போர் நிகழ்த்துகின்றவர்களைப்பற்றி எனக்குக் கவலை இல்லை—நானும் ஒருகை பார்க்கத் தயார் என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன். அது ஏனோ?—எனக்கு இந்த விஷயத்தில் மட்டும் அவ்வளவு உறுதி பிறந்து விட்டது! மூன்றுகால் ஊன்றும் முதியவரிடம் போய் “என்ன தாத்தா! கலியாணம் செய்து கொள்ளுகிறீர்களா?” என்று கேட்டால் அவர் என்ன பதில் சொல்லுகிறார்?—வேண்டாம் என்றா சொல்லுகிறார்? “எனக்கும் பெண் கொடுக்கிறவர்கள் இருக்கிறார்களா?” என்றே கேட்கிறார். இன்னொரு உதாரணம் கொடுக்கிறேன் கேளுங்கள்! “உனக்கு எந்தமாதிரிப் பெண்டாட்டி வேணுண்டா கண்ணே?” என்று யாராவது கேட்டால் அந்த ஈரங்காயாத இளங் குழந்தை என்ன சொல்லுகிறது? “எனக்கு அழகான பெண்டாட்டி வேணும்” என்று உடனே பதில் கொடுத்துவிடுகிறது! உலகமே கலியாணம் பெண்டாட்டி என்ற சிங்கார மோகன சாகரத்தில் மூழ்கிக் கிடக்கிறது! இதற்கு நான் என்ன செய்வேன்? நீங்கள் என்ன செய்வீர்கள்? பழைய காலக் கலியாணங்கட்கும் இக்காலக் கலியாணங்கட்கும் மிகுந்த வேற்றுமை உண்டு. முன் காலத்தில், தாய் தந்தையர்கள் மேதை, மரியாதை, சம்பிரதாயங்களைக் கவனித்து “எங்கள் பெண்ணை உங்கள் பிள்ளைக்குக் கொடுக்கிறோம்” என்றால் “ஆஹா! அதற்கென்ன மிகவும் நல்லது” என்று சொல்லி விடுவார்கள். அத் தாய் தந்தையர் இஷ்டப்படியே நடக்கும் அந்தக் காலத்துக் கலியாணங்கள். “எங்கள் பெண்ணை உங்கள் பிள்ளைக்குக் கொடுக்கிறோம்” என்றால் “பையன் வந்து பார்த்துக்கொள்ளட்டும். பிறகு வேணுமானால் வரதக்ஷிணை விஷயம் பேசி முடித்துக் கொள்ளலாம்” என்று பதில் கொடுக்கும் காலம் இது.

* * *

“அடே அப்பனே! உனக்குச் சங்கரையர் பெண்ணைக் கொடுக்கவேணும் என்று மிகவும் பிடிவாதமாயிருக்கிறார். அவர் பெரிய குடும்பத்தைச் சேர்ந்தவர். ஏராளமான ஜவேஜு உண்டு. பூமி காணி வீடு வாசல் எல்லாம் மிகுந்த

---

சிறியவனாயினும் பெரும் புத்தி வேண்டும்.

அந்தஸ்தாயிருக்கின்றன. எல்லாவிதத்திலும் நமக்குத் தகுந்த சம்பந்தம். இதுவரை அவர் ஒரு கலியாணமும் செய்யவில்லை. அதனால் மிகவும் பிரபலமாய்ச் செய்வார் என்றே தோன்றுகின்றது. நம்மவர் எல்லாருக்கும் மிகுந்த இஷ்டம். பெண் கொஞ்சம் கருப்பு என்பாயோ? கருப்பும் செவப்பும் கடித்துத் தின்னமாட்டார்களல்லவா யாரும்? என்ன சொல்லுகிறாய்? உன் இஷ்டம்" என்றால் "எனக்கு அந்தப் பெண்மீது இஷ்டம் இல்லை—பிடிக்கவில்லை. புருஷன் பெண்சாதி என்றால் இந்த ஜன்மத்தில் குடும்ப ரதத்தைச் சரியானபடி இழுத்துச் செல்லவேண்டிய சம பங்காளிகள் என்று அர்த்தம். இந்த விஷயத்தில் பங்காளிகளுக்குள் பரஸ்பரம் சரிப்படாமல் போய்விட்டால் சம்சாரத்தில் சுகம் என்பது அணுவளவும் இல்லாமல் அலக்கழிப்புப்பட நேர்ந்துவிடும். எனது கலியாணம் என்னிஷ்டம்போல் நடக்க வேண்டியதேயொழிய உங்கள் இஷ்டம் என்ன வந்தது? என்னுடைய இன்பதுன்பங்களை நானே அனுபவிக்க வேணும். உங்களுக்கு என்ன இருக்கும்" என்று மிடுக்காகப் பதில் கொடுத்தானும் ஒரு இளைஞன். தாங்கள் எப்படியிருந்தாலும் தங்களுக்கு வரக்கூடிய பெண்கள் மட்டும் ரம்பை—ஊர்வசி—திலோத்தமை முதலிய தேவ கன்னிகைளைப்போல் இருக்க வேண்டும் என்பது சில வாலிபர்களின் ஆசை. தங்கள் இல்லங்களில் அழகுத் தெய்வங்கள் தாண்டவமாட வேண்டுமோம்!—இக்காலத்து வாலிபர்களின் கொள்கை இது.

இந்தக் கோஷ்டியைச் சேர்ந்தவன்தான் நமது நாராயணனும். நாராயணன் அவ்வளவு அழகன் என்று சொல்ல முடியாது. தான் செய்துகொள்ளும் அலங்கார தடபுடல் வெளிச்சங்களால் பார்வைக்கு ஒரு தினுசாய் இருப்பான். கொஞ்சம் இங்கிலீஷ்ப் பயிற்சி உள்ளவன். பெரிய லக்ஷப் பிரபுவின் பிள்ளை. இனி என்ன குறை? எப்படியும் தனக்கு வருகிற பெண் ஒரு ரதியாக இருக்க வேண்டும் என்பதே அவனது தீர்மானம். மனைவி இவ்வாறு இருக்க வேண்டும் என்று மனோராஜ்யம் செய்துகொண்டிருக்கிறான். "நிறம் எலுமிச்சம் பழம்-திரண்டு உருண்ட முகம். சிரித்தால் குழிவிழும் கன்னங்கள். பரந்து மதர்த்த கண்கள். அடர்ந்து நீண்ட சுருள் குழல். எட்பூவை ஏசும் நாசி. முறுவல் ஊற்றும் இதழ்கள். வளமான உடற்கட்டு. அளவான உயரம். நல்ல சங்கீத ஞானம். சுகமான சாரீரம்."



பெரியப் பணக்காரரின் பிள்ளையாகையால் ஏராளமான விண்ணப்பங்கள் வந்து குவிந்து கொண்டே இருந்தன. எந்தச் சம்பந்தமும் சரிப்படவில்லை. காரணம் நாராயணனுக்குப் பெண் பிடிக்காமல் போனதே. இப்படி நூற்றுக்கணக்கான சம்பந்தங்கள் நிராகரிக்கப்பட்டன.

* * *

சிவராம சாஸ்திரிகள் சிங்காநல்லூரில் ஒரு பெரிய மிராஸ்தார். நல்ல முதல்தரமான-கரும்பும் நெல்லும் விளையக்கூடிய-எழுபது எண்பது ஏக்கர்

---

ஓர் பெருங் காரியத்திற்காக அற்பக் காரியமொன்றை ஒதுக்கிவைப்பது புத்திசாலித்தனமாகும்.



நன்செயும், ஏராளமான புன்செயும், மேட்டுப்பாளையத்தில் பெரிய பெரிய கமுகந் தோப்புகளும் அவருக்குண்டு. வேளாண்மை விளைச்சல்களுக்கு ஒன்றுங் குறைவில்லை. இளகிய மனம் படைத்தவர். எப்பொழுதும் பத்துப்பேர் சிவராம சாஸ்திரிகளைச் சூழ்ந்து கொண்டே இருப்பார்கள். உள்ளூரிலோ அக்கம் பக்கம் கிராமங்களிலோ என்ன வழக்கு ஏற்பட்டாலும் சிவராம சாஸ்திரிகளின் மாளிகைதான் நியாய ஸ்தலம். அந்த ஊரார் கோர்ட்டுப் பக்கம் கண்ணெடுத்துங்கூடப் பார்க்கமாட்டார்கள். நல்ல பேரும் புகழும் சம்பாதித்துச் சுகமாகக் காலங்கழித்து வருகிறார் சிவராம சாஸ்திரியார். இரண்டு ஆண்மக்கள்—ஒரு பெண். பெண்ணின்பேர் ஸீதாலக்ஷ்மி. இவள் கடைசிக் குழந்தை யாகையால் தாய் தந்தையர்கள் உயிருக்குயிராகப் பாவித்துச் செல்லமாய் வளர்த்து வருகிறார்கள். ஸீதாலக்ஷ்மி மிகுந்த சுறுசுறுப்பும் புத்திக் கூர்மையும் வாய்ந்த பெண்மணி. தாங்கள் வைத்திருந்த பிரியத்தினால் தாய் தந்தையர்கள் ஸீதாலக்ஷ்மியைப் பள்ளிக்கூடத்துக்குச் சரிவர அனுப்பவில்லை என்றாலும் தோழிகளின் உதவியால் அவள் நன்றாய்ப் படிக்கவும், எழுதவும், பாடவும் கற்றுக்கொண்டிருக்கிறாள்.

எப்படியாவது ஸீதாலக்ஷ்மியை ராவ் பகதூர் நரசிம்ம ஐயரின் மருமகளாகச் செய்துவிடவேண்டும் என்பது சிவராம சாஸ்திரியாரின் கோரிக்கை. ராவ்பகதூரின் ஐவேஜு அந்தஸ்துகளைக் கண்டு பெண்களுக்குங்கூட அதே உத்தேசம் உண்டாயிருந்தது. நல்லநாள் பார்த்து புரோகிதர் வெங்கு சாஸ்திரிகளை வரவழைத்து அவரிடம் சொல்ல வேண்டிய சங்கதிகளையெல்லாம் சொல்லி, துணைக்கு இன்னும் இரண்டொருவரைச் சேர்த்துச் சம்மதம் பெற்றுக் கொண்டுவரக் கோயமுத்தூருக்கு அனுப்பினார்கள். வரதக்ஷிணை விஷயம் இரண்டு மூவாயிரம் அதிகமானாலும் பரவாயில்லை என்றும் சொல்லி அனுப்பினார்கள்.

புரோகிதர் வெங்கு சாஸ்திரியாரும் மற்றவர்களும் கோவையை அடைந்தனர். "எக்ஸ்டென்ஷ"னில் ராவ்பகதூர் நரசிம்ம ஐயரின் வீட்டை விசாரித்து அறிந்துகொண்டு அங்கே போனார்கள். க்ஷேம விசாரணையும் மரியாதைகளும் நடந்தபிறகு வந்த சங்கதியை ஐயரின் மனதில் படும்படி தெளிவாகவும் சாதுரியமாகவும் எடுத்துச் சொன்னார்கள்—பத்தாயிரம் ரூபாய் வரதக்ஷிணை-ஐயாயிரம் ரூபாய் ஆடையாபரணம்-இரண்டாயிரம் ரூபாய் ஸ்ரீதனம். வருகிற ஆவணி மாதம் கலியாணம்.

ராவ்பகதூர் ஐயருக்கு எல்லா அம்சங்களிலும் திருப்தியே. ஆனால் நாராயணன் ஒப்புக் கொள்ளுவானோ இல்லையோ என்பதில் சந்தேகம். வந்தவர்களுக்குத் தகுந்த முறையில் உபசாரமும் மரியாதையும் செய்து பையனை நேரில் பெண்ணைப் பார்த்துக் கொள்ளவேணும்—அவனை அனுப்பிவைக்கிறேன் என்று அவர்கட்கு விடை கொடுத்தனுப்பிவிட்டார்.

நாராயணன் தனக்குப் பிடித்தாலொழியக் கலியாணம் செய்துகொள்ளப் போவதில்லை என்று தகப்பனாரிடம் அழுத்தமாகச் சொல்லி வைத்திருந்தான். அதனால் நரசிம்ம ஐயர் மகனை அழைத்து நடந்த விஷயங்களைக் கூறி

---

மிஞ்சினால் கெஞ்சுவதும் கெஞ்சினால் மிஞ்சுவதும் காரியத்தைச் சாதித்துக்கொள்ளும் ஒரு வழி.

"பெண் உன் மனதுக்குப் பிடித்தால் நான் "எஸ்" வைக்கிறேன். நீ போய்ப் பார்த்துக் கொண்டு வா" என்று அனுப்பிவைத்தார்.



நாராயணன் துணை வேண்டாமல் தனிமையாகப் புறப்பட்டான் சிங்காநல்லூருக்கு. ரயிலில் போகும்போதே பெண்ணின் ரூபலாவண்யத்தைக் கண்களுக்கு முன் சித்திரிக்கத் தொடங்கினான். அங்கே போனால் தான் என்ன பேசவேண்டும்—அவர்கள் என்ன கேட்பார்கள் என்று எண்ணத் தொடங்கி ஒரு முடிவு செய்து கொண்டான். ஒரு வேளை தனக்குப் பெண் பிடிக்காவிட்டால் என்ன செய்வது?—தகப்பனார் வந்து பேசிக் கொள்ளுவார் என்று சொல்லித் தப்பித்துக் கொள்ள வேணும் என்று தீர்மானம் செய்துகொண்டான்.

நாராயணன் வரும் செய்தி முன்னரே தெரிவிக்கப்பட்டிருந்தது. சிவராம சாஸ்திரியார் தம் மக்களிடம் விஷயம் தெரிவித்து ஸ்டேஷனுக்கு வண்டி கொண்டுபோய் வரவேற்குமாறு ஏற்பாடு செய்திருந்தார். நாராயணன் ரயிலிலிருந்து இறங்கியவுடன் அவ்விருவரும் வரவேற்று வீட்டிற்கு அழைத்துக்கொண்டு சென்றனர். கூடத்தில் தயாராய்ப் போட்டிருந்த சாய்வு நாற்காலியில் உட்காரவைத்துச் சிவராம சாஸ்திரியார் க்ஷேமாதிசயங்களை விசாரித்தார். வெள்ளித் தட்டில் பலகாரமும், வெள்ளிப் பாத்திரத்தில் காபியும் எடுத்துக்கொண்டு வந்து மேஜைமீது வைத்தாள் சர்வாலங்கார பூஷிதையான சீதாலக்ஷ்மி. சீதாலக்ஷ்மியைக் கண்டதும் நாராயணன் தனக்குள் ஏதோ எண்ணிக் கொண்டான்.

நாராயணன் வந்து பெண்ணைப் பார்த்துக் கொண்டுபோன மூன்றாவது நாளிலேயே சிவராம சாஸ்திரியார் சுப முகூர்த்தம் குறிப்பிட்டு புரோகிதர் வெங்கு சாஸ்திரிகள் மூலம் ராவ்பகதூர் நரசிம்ம ஐயருக்குச் செய்தி அனுப்பியிருந்தார். அநுகூலமான பதில் இன்றுவரும் நாளைவரும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர் சிவராம சாஸ்திரியாரின் குடும்பத்தார்.

பாவம்! மனிதர்கள் செய்யும் முயற்சிகளெல்லாம் வீணாகப் போய்விடுகின்றன சில சந்தர்ப்பங்களில். ஒருவன் லக்ஷாதிபதியாகிவிடலாம் என்று எண்ணி முயற்சி செய்கிறான்—ஆனால் உடனே பிக்ஷாதிபதியாகி விடுகிறான். ஒன்றை நினைக்கின் அது ஒழிந்திட்டொன்றாதல் உலக இயற்கை அல்லவா?

ராவ்பகதூர் நரசிம்ம ஐயரிடமிருந்து ஒருநாள் அடியிற் கண்ட கடிதம் வந்தது.

கோயமுத்தூர்.
5—6—31.

பிரம்மஸ்ரீ சிவராம சாஸ்திரிகளுக்கு அநேக நமஸ்காரம். நான் இவ்வாறு கடிதம் எழுதவேண்டி நேரும் என்று கனவிலுங் கருதவில்லை. சிரஞ்சீவி நாராயணன் இப்பொழுது கலியாணம் தேவை இல்லை என்று ஒரே பிடி

ஒவ்வோர் நாட்டிலும் உட்பிரிவுகள் இருந்தே தீருகின்றன.



வாதமாய் உட்கார்ந்திருக்கிறான். இந்த விஷயத்தைத் தங்களுக்குத் தெரிவிக்க நேர்ந்ததற்கு நான் மிகவும் வருந்துகிறேன். எப்படியாவது அவனுக்குச் சொல்லிச் சரிப்படுத்தி உங்கள் சம்பந்தத்தை ஒப்புக்கொள்ளும்படி முயற்சி செய்து கொண்டிருக்கிறேன். தாங்கள் ஏமாற்றம் அடைந்ததாக நினைக்கக்கூடாது. தயவுசெய்து மன்னிக்க வேணும்.

இங்ஙனம்,
நரசிம்மன்.



ஆஹா! இந்தக் கடிதத்தைக் கண்டவுடன் சிவராம சாஸ்திரியார் பட்டபாட்டை என்ன என்று வருணிப்பது! மனம் பதறியது! கண்களில் நீர் ததும்பிற்று! துக்கம் தொண்டையை அடைத்தது! ஒன்றும் பேசமுடியவில்லை. பெருமூச் செறிந்தார். அடியற்ற மரம்போல் கீழே சாய்ந்துவிட்டார்.

* * *

சிவராம சாஸ்திரியாருக்குக் கிட்டுவையர் உயிர் நண்பர். கிட்டுவையருக்குத் தம் நண்பரின் நிலைமையெல்லாம் தெரிந்தது. அவரது மனமும் கலகலத்துப் போய்விட்டது. சிவராம சாஸ்திரியாரின் துக்கம் தமது துக்கமாகப் பாவித்தார். எப்படியாவது பழிக்குப்பழி வாங்கவேண்டும் என்று உறுதி செய்துகொண்டார். நாய்க் கடிக்குச் செருப்படிதான் பிரதானம் என்று முடிவு செய்தார். இந்தக் காலத்து வாலிபர்களுக்குத் தகுந்த பாடங் கற்பிக்கவேண்டும் என்று ஆவேசங் கொண்டார் கிட்டுவையர்.

கிட்டுவையரின் மகள் நல்ல அழகு வாய்ந்தவள். ராவ்பகதூர் நரசிம்ம ஐயரின் மகனுக்குத் தம் பெண்ணைக் கொடுப்பதாக அவர் செய்தி அனுப்பினார். மறுமுறையும் சிங்காநல்லூர்ப் பிரயாணம் கிடைத்தது நாராயணனுக்கு.

அன்று நாராயணன் வருகிறான் என்று தெரிந்த கிட்டுவையர் ஊரிலுள்ள பெரிய மனிதர்களுக் கெல்லாம் தகவல் கொடுத்திருந்தார். கூடத்தில் ஜமக்காளம் முதலிய விரிப்புக்கள் தயாராய்ப் போடப்பட்டிருந்தன. பெண்ணையும் நன்றாய் அலங்காரம்செய்து வைத்திருந்தார்கள். நாராயணன் வருகைதான் பாக்கி. எல்லாப் பெரியவர்களும் வந்து உட்கார்ந்திருந்தார்கள்.

நாராயணன் வந்தான். பெரியோர்களுக்கு நமஸ்காரம் செய்துவிட்டு நாற்காலியில் உட்கார்ந்தான். எல்லோரும் நிசப்தமா யிருந்தார்கள் இரண்டு நிமிஷநேரம். கிட்டுவையர் "சுந்தரீ........" என்று அழைத்தார். கதவுக்கப்பால் மறைவாக நின்றுகொண்டிருந்த சுந்தரி சற்று நாணத்தோடு வந்து தன் தந்தையின் பக்கத்தில் உட்கார்ந்தாள். ஒரு வேலைக்காரன் ஹார்மோனியத்தைக் கொணர்ந்து பக்கத்தில் வைத்தான். சுந்தரி வெட்கத்தால் தலை குனிந்தவாக்கில் நாராயணனைக் கடைக்கண்ணால் பார்த்தாள். நாராயணன் புளகாங்கிதனாகிவிட்டான். அவனுக்கு இவ்வுலகத்தில் இருப்பதாகவே நினைவில்லாமற் போய்விட்டது. "இன்றுதான் என் கோரிக்கை நிறைவேறிய நன்னாள்" என்று தனக்குள்ளேயே எண்ணி எண்ணி மகிழ்ச்சிப் பெருக்கு அடைந்தான்.

சோம்பேறிக்கு ஓர் வேலையும் தீராது.



சுந்தரி ஹார்மோனியத்தின் சுருதியோடு கலந்து ஜகன்மோஹனமான மோஹன ராகத்தை ஆலாபனம் செய்தாள். நாராயணன் அப்படியே சொக்கி மயங்கி விட்டான். இந்தப் பெண்ணரசியையே மணஞ்செய்து தீர வேண்டும். இன்றேல் உயிர் விடலே மேல் என்று எண்ணினான். விரைவில் முகூர்த்தம் வைக்க ஏற்பாடு செய்யவேண்டும் என்று ஆத்திரப்பட்டான்.

பெண் பாடுவதை நிறுத்தினாள். மூன்று நிமிஷங்கள் நிசப்தமா யிருந்தார்கள் எல்லோரும்.

பிறகு ஒரு பெரியவர் நாராயணனைத் தம் பக்கத்தில் வருமாறு அழைத்துக் கேட்கிறார்: "அப்பனே பெண் பிடித்ததா உனக்கு? தகப்பனாரின் சம்மதம் வேணுமா?"

"தாத்தா! எனக்குப் பெண் மிகவும் பிடித்திருக்கிறது. இதில் சந்தேகம் ஒன்றும் இல்லை. முகூர்த்தம் வைத்துவிட்டால் நான் போய்த் தயாராய்ப் பந்துக்கள் சகிதம் வந்து கலியாணம் செய்துகொள்ளுகிறேன். எனது கலியாண விஷயத்தில் எனக்கே எல்லாச் சுதந்தரமும் உண்டு. தகப்பனாரும் என்னிஷ்டம்போலவே விட்டுவிட்டார். இனி அவரை ஒன்றுங் கேட்க வேண்டியதில்லை" என்றான் நாராயணன். கிட்டுவையர் சுந்தரியை நோக்கி "அம்மா! உனக்கு இந்த மாப்பிள்ளை சம்மதமா?" என்றார். "எனக்கு இவர் வேண்டாம்" என்று சொல்லிக்கொண்டே எழுந்து புறப்பட்டு விட்டாள் சுந்தரி.

சுந்தரியின் மொழிகள் நாராயணனைத் திடுக்கிடச் செய்தன. அவனது அகமும் முகமும் கருகி இருளடைந்தன. எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணி எண்ணி ஏங்கினான் ஏழை நெஞ்சன். முதலில் தன்னால் வெறுத்து ஏமாற்றப்பட்ட பெண்கள் எல்லாரும் ஒன்றுகூடித் தன்னை ஏளனம் செய்வது போல் அவனது மனக் கண்ணுக்குப் புலனாயிற்று. முற்பகற் செய்யில் பிற்பகல் விளையும் என்பது அநுபவ வாக்கல்லவா?


## உங்களைத் தேடிவந்தால்

தமிழ் மக்களுக்கு ஆனந்தங் கொடுப்பதையே தன் முதற் பெருங் கடமையாகக் கொண்டுள்ள "ஆனந்தபோதினி" உங்களைத் தேடிவந்தால் ஏதோ வழி தவறித் தெரியாமல் வந்துவிட்டதென்று நினைத்துவிடாதீர்கள். உங்கள் வாழ்க்கை நலத்தில் சிரத்தைகொண்டே உங்களைத் தேடி வருகிறது என்று நினையுங்கள். உங்கள் உதவி எல்லாம் பன்னிரண்டு மாதங்களுக்கு ஒரே ரூபாய்தான்.


# ஸ்ரீபார்த்தசாரதிபிரமோற்சவம்

(ஆரியூர் வ. பதுமநாப பிள்ளை)

அறியாமையால் கடமையை உணராது அயர்வு மிகுந்து அகம் வருந்திநின்ற அர்ச்சுனனது கோழைமையை, தனது அருளுரைகளால் அகற்றி வீரமூட்டி வெற்றி பெறுவித்த கண்ணபிரான்—மெய்யன்பரது பேரன்புக்குத் தான் எவ்வளவு தூரம் கட்டுப்பட்டவன் என்பதை, பார்த்தனது திருத்தேர் ஓட்டும் சாரதியாகவும் திருவிளையாடல் புரிந்து விளக்கியருளிய கீதாசார்யன்—அன்பரை உய்விக்கவேண்டி திருக்கோயில்கொண்டு எழுந்தருளியுள்ள திருப்பதி, சென்னை நகரில் சிறந்து விளங்கும் திருவல்லிக்கேணியாகும். அல்லிப்பூக்கள் நிரம்பப்பெற்ற அழகிய திருக்குளத்தை உடையதாதலின், அஃது 'அல்லிக்கேணி' எனும் பெயர் பெற்றது. தனது தொண்டன் பக்கலில் கொண்ட அன்புப் பெருக்கினால், அமர்க்களத்தில் படை எடுப்பதில்லை எனத் தான் ஆணையிட் டிருந்ததையும் மறந்து—இருமுறை ஆழிப் படையை எடுத் தருளிய பார்த்த சாரதியின் கருணையை என்னென்று எடுத்துரைப்பது? அர்ச்சுனனுக்குச் சாரதியாகத் திருத் தேர்த் தட்டில் அமர்ந்திருந்தபோது, எதிரிகள் விடுத்த கணைகளால் ஏற்பட்ட வடுக்கள் நிரம்பியுள்ள திருமுகத்துடனேயே இன்றும் சேவை சாதிக்கும் பார்த்தசாரதியை, சற்று கவனத்துடன்—உண்மை அன்புடன்—சேவிக்கும் அன்பர்களது அகங்களில், 'ஆண்டவன் அடியவர்க்கு எத்துணை எளியவனாக இலங்குகின்றான்' எனும் பேருண்மை இனிது புலனாகும். எண்ணிறந்த ஆண்டுகளாக எண்ணிறந்த மெய்யன்பர்களால், ஏத்திப் போற்றப்பெற்று எல்லையில்லாப் பெருமை பெற்று இலங்கும் எம்பெருமான் பார்த்தசாரதியை உண்மை யன்புடன் சேவித்து அப்பெருமானது வடிவழகில் ஈடுபடுவோர்க்கு, அவர் கண்ணபிரானாகவே தோற்றுகின்றாரேயன்றி சாதாரணமானதொரு விக்கிரகமாகக் காணப்படுகின்றாரில்லை. அத்தகைய வைபவமுடைய அப்பெருமானுக்கு ஆண்டுதோறும், சித்திரைத் திங்களில் திருவோணம் இறுதியாகக்கொண்டு பத்து நாட்கள் பிரமோற்சவம் நடைபெற்று வருகின்றது. இவ்வாண்டில் அவ் வுற்சவத்தைச் சேவிக்கும் பேறுபெற்ற சிறியேற்கு, அப் பெருமானது வைபவத்திற்குப் பொருந்தாத சிற்சில குறைபாடுகள் அன்பர்களால் விரைவில் விலக்கப்பெற வேண்டும் எனும் ஆர்வந் தோன்றியதால் இக்கட்டுரை எழுத முன்வந்தேன். இச் சீர்திருத்தம் கீதாசார்யனுக்கும் அவனது மெய்யன்பர்க்கும் பெரிதும் மகிழ்வூட்டக்கூடியதாக இருக்குமாதலின், அடியேனது புல்லுரைகளை மெய்யன்பர்கள் கவனிக்க வேண்டுகின்றேன்.

சென்னைமாநகரம் இவ்விராஜதானியில் தலைநகராதலின், பிரதிதினமும்

---

அன்பினால் நமது தாயையும் ஆலிங்கனம் செய்துகொள்ளலாம்-ஆனால் அதிகாரத்தால் உனது மனைவியையும் தொடமுடியாது.

—இவ்வுற்சவ காலத்தில் பார்த்தசாரதியை ஸேவிக்க திரளான மக்கள் உள்ளூரிலிருந்தே கூடுகின்றனர். பத்து நாட்களிலும் வெளியூர் ஜனங்கள்—பத்தில் ஒரு பங்கினராகவே இருப்பர் என்னலாம். பிரதிதினமும் தேசாந்தரிகட்குச் சந்நிதியில் இலவசமாகப் பிரசாதம் அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது. ஆனால் — நெடுந்தூரத்திலிருந்து வந்தவர்களுக்கு பிரசாதம் கிடைப்பது அரிதாகும்படியாக, உள்ளூராராகிய அந்தணர்களும்—நெற்றியில் திருமண்ணும் இடாத உள்ளூர்ச் சோம்பேறிகள் பலரும்—அன்ன அறச்சாலையை அடைந்து, பெரும் தொந்தரவு செய்து வருவதால், வெளியூரார்க்கு அன்னம் கிடைப்பது மிகவும் கஷ்டமாய் விடுகின்றது. இலவசச் சோற்றை எதிர்பாராது விலைக்கு வாங்கியேனும் பசி தணித்துக்கொள்ள விரும்புவோர் பாடும் மிகக் கஷ்டமே. இறைவன் கருணையால் இவ்வாண்டில் ஒன்றுக்கு மும்மடங்காக நெல்லின் விலை குறைந்திருந்தும்—சந்நிதியில் பற்றுக்கடை வைத்திருப்போர் மனம் சிறிதும் மாறிய பாடில்லை. ஓரணைக் கொடுத்துத் தயிரன்னம் கேட்பின், உள்ளங்கை நிறையவேனும் கொடுக்க அன்னார்க்கு மனம் இருப்பதில்லை. சாதாரணமாக—ஆறு அணைக்களுக்குத் தயிரன்னம் வாங்கினுங்கூட ஒருவரது பசி அடங்காது. நெல்விலை அதிகரித்திருந்தபோது பற்றுக்கடைச் சாமிகள் எத்தகைய திருவுள்ளம் கொண்டிருந்தார்களோ, அவ்வாறே நெல்விலை மிக மிகக் குறைந்துவிட்ட இந் நாளிலும் இருந்து வருவது இறைவனுக்கே ஏற்குமோ? உள்ளூரிலேயே வசித்துவரும் பிராமணப் பெண்களும் பிராமணர்களும் மற்றவர்களும், பெருமாளையே நம்பி நெடுந் தொலைவிலிருந்து வந்துள்ள தேசாந்தரிகளின் தருமச் சோற்றிற்கும் பங்குக்கு வந்து தொந்தரவு செய்வது பெரிதும் வெட்கம்கெட்ட செயலாகும். அக்கொடுமையை அடுத்த ஆண்டிலேனும் அன்பர்கள் அகற்ற முயல்வார்களாக. இவ்வண்ணம் இவ்வூரில் மட்டுமன்றி, தமிழ் நாட்டிலுள்ள பற்பல திவ்ய தேசங்களிலும் நிகழ்ந்து வருகின்றது. இதை இயன்றவரை தடுக்க முயல்வது மெய்யன்பரின் கடமையாகும்.

பெருமான் திருவீதி உற்சவம் கண்டருளும்போது—பிரதிதினமும்—சிந்தைக்கினிய செவிக்கினிய செந்தமிழ்த் திருமறையாகிய திவ்ய ப்ரபந்தத்தை ஓதிச்செல்லும் அத்யாபக கோஷ்டியின் பின்பும் பெருமாளுக்கு முன்பும் கண்டவர் அகத்தில் காமவிகாரத்தை எழுப்பக் கூடியவாறு தங்களைச் சிங்காரித்துக்கொண்டு கைகோத்துக்கொண்டு தேவதாசிகள் செல்வது பெரிதும் வருந்தத் தக்கதாக இருக்கின்றது. அவ்வளவுடன் அமையாது—தமது இயல்புக்கு இயைந்தபடி காரணமின்றி அடிக்கடி சிரித்துக்கொண்டும் ஏனைய சிருங்கார சேஷ்டைகள் செய்துகொண்டும் கீதாசார்யன் எதிரில் அத் தேவதாசிகள் செல்வது, மெய்யன்பர் நெஞ்சைப் புண்படுத்துவதாக இருக்கின்றது. பெருமாளருகில் நிற்போர் தொகையைவிட அவ் வம்மைமாரருகில் சூழ்ந்து நிற்போர் தொகையே அதிகரித்திருக்கின்றது. அதனால் போலீஸார் ஆர்ப்பாட்டம் ஏற்படுவது—பெருமானது சேவைக்கென்றே வரும் மெய்யன்பர்கட்கும் இடையூறுகின்றது. மேலும், காமக் குரோதங்களை அடக்கிக் கருத்தைக் கடவுளிடம் செலுத்த முயல வருவோர்க்கு, அத் தேவதாசிகளின் ஊர்வலம் பெரிதும் பாதகமாக இருப்பதைச் சொல்லவேண்டுவதில்லை.

---

நாம் பிறரிடம் காட்டும் அன்பு ஒன்றினைக் கொண்டே உலகம் மகிழ்கின்றது.



"காம ஏஷ: க்ரோத ஏஷ: ரஜோகுண ஸமுத்பவ
மஹாசனோ மஹா பாப்மா வித்யேந மிஹ வைரிணம்

(ரஜோகுணத்தால் ஏற்படும் காமமும் சீற்றமும் மனிதனுக்குப் பெரும் பகைகளான பெரும் பாவமுடையனவாகும்) என்று எந்த கீதாசார்யன் அறிவுறுத்தியருளினனோ, அதே கீதாசார்யன் சந்நிதியிலேயே—அப்பெருமான் முன்பாகவே—கண்டாரது அகத்தில் காமநினைவை எழுப்பக்கூடியவாறு தேவதாசிகளின் ஆடல் பாடல்கள் நடைபெறுவது பெரிதும் கண்டிக்கத் தக்கதாகும். முற்காலத்தில் ஆலயப்பணியிலேயே ஆழ்ந்த சிந்தையராய்—தெய்வ பக்தியில் சிறந்தவர்களாய்—காம விருப்பத்தைத் துறந்தவர்களாய்—எளிய நடை உடை பாவனைகளையே மேற்கொண்டவர்களாய் இலங்கிய தேவதாசிகள், தற்காலத்தில் நவீன நாகரிகம் தலைவிரித்தாடும் இக் காலத்தில் தலைகீழாக மாறிவிட்டிருக்கின்றனர். ஆகவே, நமது முன்னோர் எந் நன்னோக்கத்துடன் தேவதாசிகளை ஆலயப்பணியில் அமர்த்தினரோ, அந் நோக்கத்திற்கு இந்நாளில் முற்றிலும் மாறாக அவர்கள் 'பணி' செய்து வருகின்றனர். ஆதலின், இத் திருப்பதியிலும்—இதையொத்துத் தமிழ் நாட்டிலுள்ள ஏனைய திருப்பதிகள் பற்பலவற்றிலும்—காணப்படும் பெருங் குறையாகிய தேவதாசிகளின் ஆடல் பாடல்கள் விரைவில் நீங்கி விடுவதற்கு எவ்வெம் முயற்சிகளை எடுத்துக் கொள்ளலாமோ, அவையனைத்தையும் விரைவில் எடுத்துக்கொண்டு திருக்கோயில் முன்னேற்றத்திற்கென்று உழைக்க முன்வருவது இறைவனது இன்னருளை எய்துவிக்கும் சீரிய செம்பணியாகும். முதலில், அத் திருப்பணிக்கு இடையூறு பல ஏற்படக்கூடும். அதுகண்டு அகம் தளராது—புகழ்ச்சியையாதல் இகழ்ச்சியையாதல் பொருட்படுத்தாது—தீவிரமாக உழைக்கத் தக்க சீரிய தொண்டர்கள் பலர் முன்வர வேண்டும்.

பிரதி தினமும் இரவுகளில் ஏராளப் பொருட்செலவில் வாண வேடிக்கை நடத்தப்படுகின்றது. அதுகண்டு பாமர மக்கள் சிலர் மகிழ்வதேயன்றி, அதனால் வேறு எப் பயனுமில்லை. மேலும், அதற்குச் செலவழிக்கப்படும் பொருளில் பெரும்பகுதி அன்னியநாட்டினர்க்குச் சேர்கின்றது. வாண வேடிக்கை நடத்தப்பட்டே தீரவேண்டும் என்பதற்கு எந்தச் சாஸ்திரத்திலிருந்தேனும் பிரமாணம் காட்டி வாதிக்க எவரும் முன்வரார். வீணே—அவ் வகையில் காசைக் கரியாக்குவதை நிறுத்திக்கொண்டு, அப்பொருளை—ஏழை மக்கட்கு அன்னமளிக்கவேனும், கஞ்சி காய்ச்சி வார்க்கவேனும் செலவழிப்பின்—கோவிலதிகாரிகளும் உற்சவம் செய்விப்பவர்களும் ஏழைமக்கள் பலரது வாழ்த்துகட்கு உரியராவதோடு இறைவனையும் இன்பூட்டியவர்களாவர். இறைவன் ஏழை பங்காளனே அன்றோ! பசிப் பிணியால் பரிதவிக்கும் பற்பல வறிஞர்க்குப் பரிந்தளிக்கும் அன்னதானம் பரமனுக்கே விருந்தளிப்பது போன்றதன்றோ! ஆதலால், வாணப் பைத்தியத்தை விட்டுவிட்டு, அன்னதானப் பைத்தியத்தை உற்சவம் செய்விப்பவர்கள் மேற்கொள்வார்களாயின், இருமையிலும் நலம் பெறுவார்கள்.

பார்த்தனுக்குத் தேர் ஓட்டிய பெருமாளுக்கு இவ்வருடம் நடைபெற்ற ரதோத்ஸவம் மிக்க வியக்கத்தக்கதே. பெரிய திருத்தேர் சிறிது பழுதுபட்டிருத்தலால், தேர் என்றே சொல்லமுடியாத அவ்வளவு சிறிய சப்பரத்தில்

---

நண்பர் தொகையில் குறைவில்லை—ஆனால் நட்பைத்தான் காணோம்.

வீதி உற்சவம் நடைபெற்றது பெருங்குறையாகும். பழுதுபட்டுள்ள திருத்தேரைச் செப்பனிடத் திருவுள்ளம் கொள்ளாத பார்த்தசாரதி சுவாமி தேவஸ்தான அதிகாரிகள், பற்பல ஆடம்பரங்களிலும் ஏராளமாகப் பொருளைச் செலவழிப்பது எவ்வளவு அறியாமை! இதுபோல, அத்தியாவசியமாகச் செய்யப்படவேண்டிய திருப்பணிகளை விட்டுவிட்டு, அநாவசியமாகப் பற்பல துறைகளிலும் கோயிலதிகாரிகள் பணத்தை வீண் விரயம் செய்து வருவது விரைவில் தடுக்கப்பட வேண்டும்.

உலகு முழுவதும் போற்றும் உயர் பெரும் நூலாகிய பகவத்கீதையை மெய்யன்பர் உய்ய அருளிச்செய்த ஸ்ரீ பார்த்தசாரதியின் திருவிழாக்களிலே, அக்கீதை அறிவுறுத்தும் அரும் பொருள்களை ஜனங்களிடையில் பிரசாரம் செய்வது சிறந்த தொண்டாகும். அத் தொண்டு ஒன்றே பார்த்தசாரதியின் திருவுள்ளத்திற்குப் பெரிதும் இன்பூட்டுவதாகும். ஆதலின், இனியேனும் வீணில் பொருளைச் செலவழிக்காமல், முன்னோர்கள் எவ்வெந் நன்னோக்கங்களுடன் திருவிழாக்களை ஏற்படுத்தினரோ, அவ்வந் நோக்கங்களை நன்குணர்ந்து ஜனங்களிடையில் உண்மையில் பக்தி பரவுதற்கேற்ற சிறந்த முறைகளில் திறம்பட உற்சவங்களை நடத்தி ஆண்டவனது அருளுக்கும் அன்பர்களது வாழ்த்துகட்கும் பாத்திரர்களாகுமாறு திருக்கோயிலதிகாரிகளை வேண்டிக் கேட்டுக்கொள்ளுகின்றேன். திருவருள் முன்னிற்க.

# செந்தமிழ்ச் செல்வர்கட்கு ஒரு வேண்டுகோள்

ஸ்ரீமான் சி. எம். ராஜு செட்டியார் அவர்களால் இயற்றப்பெற்ற அன்பானந்தன், ஞானகாந்தி, குசாவதி, காதலி, சந்திரசேகரி ஆகிய இவ்வைந்து செந்தமிழ் நாவல்களும் நமது வாசக நேயர்கள் யாரிடமேனும் இருப்பின் எமக்கு அனுப்பிவைக்குமாறு வேண்டுகின்றோம். தங்களிடமில்லாவிடின் நண்பர்களிடமேனும் விசாரித்து வாங்கி அனுப்பினும் அவர்கள்பால் நன்றியறிதலுடையவர்களா யிருப்போம். இப்பொழுது ஸ்ரீமான் செட்டியார் எழுதிய எல்லா நாவல்களின் பதிப்புரிமையையும் யாம் வாங்கியிருக்கிறோம். அவைகளை மறுமுறையும் பதிப்பிப்பதற்கு வேண்டிய ஏற்பாடு செய்திருக்கிறோம். செந்தமிழ் வளர்ச்சி கருதும் அன்பர்கள் தங்களிடமுள்ள பழம் பிரதிகளை எமக்கு அனுப்பிவைப்பின் தமிழ்நாட்டுக்கும் தமிழ்மொழிக்கும் சிறந்த தொண்டு புரிந்தவர்களாவார்கள். யாம் மறுபடியும் அப்புத்தகங்களை உரியவர்கட்குத் திருப்பி அனுப்பிவிடுவோம். மறுபதிப்புப் புத்தகங்கள் தேவையானாலும் அனுப்புவோம் என்பதையும் தெரிவித்துக்கொள்ளுகின்றோம். நேயர்கள் தங்கள் கவனத்தை இவ் விஷயத்தில் சற்றே செலுத்தி உதவிபுரிவார்களாக.

பத்திராதிபர்.

---

தீங்குகள் அடிக்கடி மன்னிக்கப்படுகின்றன; ஆனால் இகழ்ச்சி ஒருபொழுதும் மன்னிக்கப்படுவதில்லை.

லைப் அஷ்யூரென்ஸ் என்கிற

# ஜீவிய ஊர்ஜிதம்.

(இன்ஷியூரென்ஸ்.)

தமிழில் ஒரு சிறிய கதையுண்டு. ஒரு பிச்சைக்காரன் வெகு கேவலமான ஆடை யொன்றையும் உடைந்த பாத்திரம் ஒன்றையும் வைத்திருந்தான். ஒருநாள் லக்ஷ்மிதேவி அவனை யணுகி, "அப்பா உன்னை நான் பணக்காரனுக்கிவிடுகிறேன். ஆனால் எனக்குத் தோன்றியபோது உன்னைவிட்டு நீங்கிவிடுவேன்" என்றாள். அதற்கு அவன், "சரி, ஆனால் நீர் என்னைவிட்டு நீங்கும்போது எனக்குத் தெரிவித்துவிட்டுப் போதல் வேண்டும்" என்றான். அவளும் ஒத்துக்கொண்டாள். அந்த ஊர் மந்திரி அன்று இறந்துவிட்டபடியால் சம்பிரதாயப்படி பட்டத்து யானையின் தலையில் ஒரு குடம் நீரை வைத்து ஊர்வலம் வரச்செய்து அந்த யானை யார்மேல் நீரைக் கொட்டுகிறதோ அவரே மந்திரி யென்று தீர்மானித்தார்கள். குளக்கரையில் நின்று வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்த நம் பிச்சைக்காரன் மீதே அந்த கஜம் நீரைக் கொட்டிற்று. உடனே அவனை மந்திரியாக்கிவிட்டார்கள். அவனை நல்ல உடைகளால் அலங்கரித்து அரசனிடம் அழைத்துச் சென்றார்கள். அப்போது அவன் அரசனிடம் ஒரு விண்ணப்பம் செய்து கொண்டான். "என்னுடைய ஓட்டைச் சொம்பையும் கிழிந்த துணியையும் பத்திரமாய்க் காப்பாற்றி வைக்கவேண்டும். அவை ஒருசமயம் வேண்டியிருக்கும்" என்றான். அப்படியே ஏற்பாடாயிற்று. இரண்டு மூன்று வருஷங்கள் மந்திரி பதவியை வகித்த பிறகு ஒரு நாள் அரசனும் மந்திரியும் வேட்டைக்குப் போனார்கள். அப்போது அரசன் நீர் வேட்கையினால் களைத்து மந்திரியின் மடிமேல் தலையை வைத்து அயர்ந்து நித்திரை செய்தான். அரசனுடைய தாகத்தைத் தீர்க்க எண்ணிய மந்திரி தலையை உயர்த்தி யோசிக்க ஒரு பெரிய மாங்கனி யொன்றைக் கண்டான். ஆஹா! அது நம்கையில் இருந்தால் அரசனுக்கு அதன் ரஸத்தையாவது கொடுக்கலாமல்லவா? என்று சிந்தித்தவன் திடீரென்று அது தன் கையில் விழுந்ததைக் கண்டு சந்தோஷமடைந்தான். சிறிய கத்தி யொன்று மில்லாததால் பட்டாக்கத்தியை எடுத்து அரசனது திறந்த வாய்க்கு நேரே பழத்தைப் பிடித்து கத்தியால் அறுக்கும் சமயம் "நான் போகிறேன்" என்று சத்தம் உண்டாகி, பழம் திடீரென்று மறைந்தது. கத்திமாத்திரம் அரசன் கழுத்திற்கு நேரே நின்றது. அரசனும் திடுக்கிட்டு விழித்தான். மந்திரி தன்னைக் கொல்ல யத்தனித்தான் என்று அரசன் சந்தேகங் கொண்டு அவனை வேலையினின்றும் நீக்கிவிட்டான். ஆனால் அவன் மீது இரக்கங்கொண்டு "உனக்கு வேண்டிய பொருளுதவி நான் செய்கிறேன்" என்றான். அம்மனிதன், "அரசே, எனக்கு வேண்டியது அந்தக் கிழிந்த துணியும் ஓட்டைச் சொம்புமே" என்றான்.

---

கதிர் நிறைந்தால் பயிர் தரையில் தொங்கும்.

லைப் அஷ்யூரென்ஸ் என்பது அந்தக் கிழிந்த துணியும் ஓட்டைச் சொம்பும்போல் ஆபத்தில் உதவுவது. வேறு என்ன அர்த்தஸ்தும் செல்வமும் இருப்பினும் இன்ஷியூரென்ஸ் பாலஸி இல்லையேல் வெகு கஷ்டமாக விருக்கும். நமது தேசத்தில் அனேக தனவந்தர்கள் "பணம் நிறைய இருக்கிறது. எங்களுக்கு எதற்கு இன்ஷியூரென்ஸ். ஏழைகளுக்குத்தான் அது அவசியம்" என்கிறார்கள். ஏழைகள், "நாங்கள் பரம ஏழைகள். அன்றையப் பொழுது கழிவது கடினம். எங்களுக்கு இன்ஷியூரென்ஸ் சந்தா செலுத்துவது எப்படி முடியும்? பணக்காரரைக் கேளுங்கள்" என்கிறார்கள். இவ்விருவர்களையும் விட்டு மத்திய நிலையில் இருப்பவர், "சரிதான், இன்ஷியூரென்ஸ் ஒன்றுதான் குறைச்சல். எங்கள் பிள்ளைகளைப் படிக்கவைத்து, பெண்களுக்குமணம் முடித்து நான்கு மனிதர் முன் கௌரவமாய்ப் பிழைப்பதற்குத்தான் எங்களுக்குப் பணமிருக்கிறது. இன்ஷியூர் செய்ய முடியாதெ"ன்கிறார்கள். இப்படி பார்த்துக்கொண்டிருந்தால் யாருக்குத் தான் இன்ஷியூரென்ஸ் தேவை? நமது தேசத்தில் இன்ஷியூரென்ஸுக்குச் செலுத்தும் சந்தாவைச் செலவாகக் கருதுகிறார்கள். ஆம், செலவுதான். பாங்கிற்கு மாதம் இவ்வளவென்று அனுப்பிவிடுவது செலவானால் இதுவும் செலவுதான். பாங்கிக்கு இப்போது அனுப்பும் பணம் ஒரு காலத்தில் எடுத்துச் செலவு செய்யக்கூடும். சில்லரையாகச் சேர்த்து மொத்தமாகச் செலவழித்துவிடுகிறோம். ஆனால் இன்ஷியூரென்ஸ் தொகையை எடுத்துச் செலவு செய்யமுடியாது. பிரம்மச்சாரி குறும்பு சேஷ்டை என்று சொல்கிறோம். பிரம்மச்சாரியல்ல கிரகஸ்தனாயினும் இயல்பாகவே மனிதன் கைகள் சும்மாவிரா. பாங்கியில் பண மிருந்தால் எப்படிச் செலவழிக்கலாம் என்று தான் தோன்றும். குதிரைப் பந்தயத்திற்குச் சென்று பணத்தைப் பெருக்கலாமா? நிறைய வட்டிக்குக் கடன் கொடுக்கலாமா? வேறு எந்த விதத்திலாவது பணத்தைச் சில நாட்களிலேயே ஒன்றிற்கு மூன்றாகப் பெறலாம் என்று விளம்பரங்கள் இருந்தால் அவ்வழிகளில் செலவழிக்கலாமா? என்று தோன்றும். பணத்தைச் செலவழிக்காமல் பெட்டியில் பூட்டிவைக்கும் லோபியாக இருப்பதா? என்று கேட்டால், லோபியல்ல மாதம் இவ்வள வென்று பணத்தை நமக்கு எட்டாத தூரத்தில் வைத்துவிடுவது வெகு உசிதம். எறும்புகள் மழை காலத்திற்கென்று கீழே சிந்திக்கிடக்கும் பதார்த்தங்களை எடுத்துப் புற்றில் சேர்க்கின்றன. அவைகளை லோபிகள் என்றா'பழிக்கிறோம்? ஈக்கள் தேனைச் சேர்த்து வைக்கின்றன. அவைகள் லோபிகளா? பிற்காலத்திற்கு உதவுவதற்காகப் பொருள் சேர்த்து வையாது போனால் அது பாவமேயாகும். சிலர் பாடுபட்டுத் தேடிப் பணத்தைப் புதைத்துவைத்தல் பிசகு என்கிறார்கள். ஆமாம். வயிற்றிற்கு இப்போது இல்லாமல் சேர்த்து வைப்பது இப்பழிக்குள்ளாகும். ஆனால் லைப் அஷியூரென்ஸின் மகிமை ஆற்றுப் பெருக்கற்று அடிசுடுமந்நாள் உலகூட்டும் ஊற்றுப் பெருக்கின் மகிமையைப் போன்றது. ஆகவே நம் நாட்டு மக்கள் இம்முறையை மேன்மேலும் அனுசரிப்பதால் அளவு கடந்த நன்மை யுண்டாகும்.

[குறிப்பு:—லைப் அஷ்யூரென்ஸைப் பற்றி விவரமாக அறிய விரும்புவோர் 'ஆனந்தபோதினி' வாரப் பதிப்பில் வெளியாகும் கட்டுரைகளைப் படிக்கலாம்.]

---

அரும் பிரயாசைகளிலேயே அற்புதங்கள் பிறக்கின்றன.

# கனவின் பலன்

(வி. சங்கா ஐயர்.)

(842-ம் பக்கத் தொடர்ச்சி)

1. ஆகாயம் மப்பில்லாமல் நிர்மலமாக இருப்பதாகக் காணும் கனவால் வியாதி, காரியானுகூலம்; நஷ்டமான பொருள் கிடைக்கும்; விரோதிகளும் கூட சிநேகிதர் ஆவார்கள்; தோற்ற வழக்கு ஜெயிக்கும்.

2. ஆகாயம் அங்கங்கே சிவப்பாயும், அக்கினியைப்போலவும் விவாஹ மாகாதவர்கள் கனவு கண்டால் விவாஹப் பிராப்தி.

3. இருட்டில் இருக்கையில் மின்னல் ஒளியினால் மார்க்கம் தெரியாமல் வழியில் முள் முதலான தடைகள் இருந்து அவைகளை யெல்லாம் தப்பித்துக்கொண்டதாகவாவது, இடி தன்பேரில் விழுவதாகத் தெரிந்து ஏதோ ஒரு காரணத்தால் தப்பிப்போனதாகவாவது கனவு கண்டால் தன் ஆபத்துக்கள் பூராவும் தீரும்.

4. மப்பு மூடி மழையில்லாமல் இடிமுழக்கத்தைக் கேட்டாலும், மின்னலைக் கண்டாலும், வியாபாரிகளுக்கு லாபம், பயிர் செய்பவர்களுக்கு நல்ல விளைச்சலும், கலியாண மாகாதவர்களுக்குக் கலியாணமும், உத்தியோகமில்லாதவர்களுக்கு உத்தியோகப் பிராப்தியும், வழக்குள்ளவர்களுக்கு வழக்கில் ஜயமும், மற்றவர்களுக்குத் தங்களை அடுத்தவர்களால் மேன்மையும் உண்டாகும்.

5. சூரியன் கடலிலிருந்து மேலே வருவதாகவாவது, குதிப்பதாகவாவது கனவு கண்டால் காரியானுகூலம்.

தன்னைச் சேர்ந்த பந்துக்கள், சிநேகிதர் முதலானவர்களுக்கு நன்மை யுண்டாகும்.

6. ஆகாசத்தின் நடுவில் அதிகப் பிரகாசத்தோடு இருப்பதாகக் கண்டால் ஐசுவரிய லாபம், உத்தியோக அபிவிருத்தி, வியாதியிருந்தால் குணமடையும், சிறையிலிருந்து மீளுவதும், தரித்திரர்களுக்கு ஐசுவரிய லாபமும் பலன்.

7. பெண்களுக்குச் சூரிய உதயம் காணப்பட்டால் புத்திரப் பிராப்தி, அஸ்தமன சமயமாகக் காணப்பட்டால் பெண் பிறக்கும்.

---

பாவத்திற்குப் பல கருவிகள் உண்டு. ஆனால் அவற்றிற்கெல்லாம் பொருத்தமான கைப்பிடி பொய்.

8. தன் அறை முழுவதும் அல்லது வீடு முழுவதும் சூரிய ஒளியினால் பிரகாசிப்பதாகக் காணப்பட்டால் தனலாபம், கியாதி, சந்தானம் இவைகள் உண்டாகும்.

9. சூரிய பிம்பம் முழுவதுமோ அல்லது கொஞ்சபாகமோ கிரஹணத்தால் மறைக்கப்பட்டதாகக் காணப்பட்டால்-கர்ப்பிணிகளுக்கு உத்தம ஸந்தன் பிறக்கும்—மற்றவர்களுக்கு நன்மையுண்டாகும்.

10. தன் தலை முழுவதும் சூரிய கிரணங்கள் சுற்றிக்கொண்டிருப்பதாகக் கனவு கண்டால், குற்றவாளியானவன் குற்றத்திலிருந்து விடுதலை அடைவான். மற்றவர்கள் இதைக் கண்டால் ராஜ சன்மானம் பெறுவார்கள்.

11. சூரியனைச் சுற்றிச் சிவப்பு நிறம் மூடிக்கொண்டிருப்பதாகக் கனவு கண்டால் குற்றம் செய்துவிட்டுத் தப்பித்துக்கொள்ள வழி தேடுகிறவனால் அவனுக்கு அனுகூலம். மற்றவர்களுக்கு நல்லது.

12. சந்திரன் பூரணமாய்ப்பிரகாசிப்பதாகக் கண்டால் தம்பதிகளுக்கு அனுகூலம்-அதிக தனலாபம்.

13. சந்திரனை மானிட முகமுடையவனாகக் கண்டால் புத்திர லாபம்—ஐசுவரிய லாபம்.

14. பூரண சந்திரனைக் கண்டால் புத்திர லாபம்.

15. தன்னுடைய தலை முழுவதிலும் சந்திர கிரணம் விழுவதாகக் கண்டால் அதிக நன்மை. சிறையிலிருப்பவர்களுக்கு விடுதலை பலன்.

16. நக்ஷத்திரங்களைப் பிரகாசமாக ஆகாசத்தில் பார்த்தால் சர்வ காரியசித்தி.

17. (a) தரித்திரர்கள் இந்திர தனுசை ஆகாசத்தில் கிழக்கிலிருப்பதாகப் பார்த்தால் மேன்மை.

(b) மேற்கி லிருப்பதாகக் கனவு கண்டால் தனவந்தர்களுக்கு மேன்மை.

(c) தலைக்கு நேராக விருந்தாலும் நன்மையே பலன்.

18. நல்ல காற்று உடம்பிற் படும்படி அடிப்பதாகக் கனவு கண்டால் எண்ணிய காரியம் சித்தியாகும். யாத்திரிகர்களுக்கு எண்ணிய காரியம் முடியும்; வியாபாரிகளுக்கு லாபம், பயிர்த் தொழிலாளிகளுக்கு வேளாண்மை லாபம்.

19. காற்றில்லாமல் நிதானமாய் மழை பெய்வதாகக் காண்பது பயிர் விசேஷமாய் விளையும். சுகஜீவனம்.

20. காற்றூடி விழுவதாகக் காணும் கனவு அதிக நலம்.

---

இயற்கைக்குக் கீழ்ப்படிவதே அதனை அடக்கி யாள்வதற்குரிய வழி.

# நாம் என்றும் மாணவர்களே

டர்பன் சரஸ்வதி சபைத் தலைவர். திரு. ச. முனிஸ்வாமி பிள்ளை.

ஒவ்வொரு பாஷையிலும் நாளுக்கு நாள் விலை மதிக்கவொண்ணாத கிரந்தங்கள் பல வெளிவந்துகொண் டிருக்கின்றன. இவைகளை விரும்பி வாங்கி வாசிப்போரின் தொகையை வெகு எளிதில் கணக்கிட்டுவிட

திரு. ச. முனிஸ்வாமி பிள்ளை.



டர்பன் சரஸ்வதி சபைத்தலைவர்.

லாம். என் இப்படிப் பொதுவாய் மனிதர்களுக்கு ஞானபிவிருத்தியில் ஊக்கங் குறைந்து வருகிறது என்று கேட்டால், இதற்குக் காரணங்கள் அநேகஞ்

சொல்லுகிறார்கள். ஏதோ ஒரு அளவுக்கு மட்டும் கற்றுவிட்டுப் பின்னர் காலக்ஷேபத்தின் பொருட்டும் தம்மை யடுத்துள்ளாரது பாதுகாப்பின் பொருட்டும் பாடுபடவேண்டி யிருக்கிறது; அதனால் மேன்மேலும் பயிலவில்லை யென்கிறார்கள். வேறு சிலர் 'கல்வி கரையில கற்பவர் நாள் சில' எனும் வாக்கியத்தி லீடுபட்டவர்களாய்த் தாங்கள் கற்றதன் அளவுவரையிற் சந்தோஷமும் திருப்தியும் அடையவேண்டுமெ யொழிய வீணே வாழ்நாள் முழுதும் புத்தகமும் கையுமாய்ப் பொழுது போக்குதல் மூடத்தன்மையாகுமென்கின்றனர். மூன்றாவது திறத்தார், 'கற்றது கைம்மண்ணளவு, கல்லாதது உலகளவு' என்ற முதுமொழிக் கேற்பத் தங்களுக்கு அவகாச மேற்படும்போதெல்லாம் ஏதாவது ஒரு நூலைப் படிக்கின்றார்கள். இம்மூன்று வகுப்பினருள் மூன்றாவது திறத்தார் மட்டுமே உண்மையான கல்விக்குரிய அடிப்படையை இளமையிலேயே பயிற்சிபெற்றவர் எனலாம். பிள்ளைகள் பாடசாலை யென்றால் ஏதோ விளக்கெண்ணெய் சாப்பிடுவதைப்போல் எண்ணிவிடாமல் அவர்களது மனோபாவத்திற்குத் தகுந்த இடமென நினைக்கச் செய்வதே கல்வியின் லட்சியமாகும். இந்த நோக்கத்துடனே கல்வி கற்பிக்கப்படுவதான தோற்றம் மட்டும் வெகு விடங்களில் காணப்படினும், ஒரு மாணவனுக்குப் பள்ளியை விட்டுச் செல்லுங்காலையில் அதன் பிரிவாற்றாமையால் அதிக துக்கம் ஏற்படும்படி போதனா முறைகள் இருக்கின்றனவா வென்பது தான் சந்தேகம். பூத பௌதிக பூகோள கணித சாஸ்திரங்கள் அவசியங் கற்பிக்கப்படவேண்டியவையே. ஆயினும், பாஷா கிரந்தங்களில் ஒருவித ஊக்கத்தையும் சிரத்தையையும் இளமையிலேயே யுண்டுபண்ணுவதுதான் ஒரு உபாத்தியாயர் மனப்பூர்வமாய்ச் செய்யும் சேவையாகும்.

'இளமையிற் கல்' என்றபடி, பற்பல சித்தத்தோடுள்ள மாணவர்களின் சித்தத்தைத் துளைத்து, அவர்களுக்கு நுட்பமான விஷயங்களை உணரும் சக்தியை யுண்டாக்கி, எதைப் படித்தாலும் காரண காரியத்தை ஆராய்ந்து படிக்கவேண்டுமென்ற தீயைக் கொளுத்திவிடுவதே உபாத்தியாயர்களது கடமையாகும். அலுப்புப் பொறுக்காமல் துரைத்தனத்தாரது சட்டத்திற்குப் பயந்து ஏதாவது சில செய்யுட் பாடங்களையும், வசன நூல்களில் ஒரு பாகத்தையும் எடுத்து, தாங்கள் சொல்லுவது இன்னதென்று தங்களுக்கே தெரியாமல் பிள்ளைகளுக்கு ஆங்காங்கே உரைகளைப் பதிவு செய்துகொள்ளும்படி கட்டாயஞ் செய்து, பரீட்சைக்காலத்தும் அதை யொட்டியே வினாக்கள் போட்டு, அந்த மனப்பாடத் திறமையிற் றேர்ச்சிபெறச் செய்வதே தற்கால வழக்கமாய் அநேக விடங்களிலிருந்து வருகின்றது. இது எந்த விதத்தில் பயனைக் கொடுக்குமோ? பாஷைகள் யாவும் உலகந் தோன்றிய காலமுதல் அவ்வப்போதுள்ள மனிதகோடிகளின் சுயேச்சையான உள்ளெண்ணத்தை யுணர்த்தும் கருவிகளே. இப்படிப் பல கருவிகள் கால தேச வர்த்தமானத்தின் பயனாய் மாறி மாறிப் பல பாஷைகளாய் வழங்கி வருகின்றன. ஒவ்வொரு பாஷையிலும் ஒவ்வொரு அபூர்வ கிரந்தமாவது இருக்குமென்பது திண்ணம். இக்கிரந்தங்கள் அநேகம் அந்தந்தக் காலத்து ராஜீய நிலைமை, ஜன சமூக வாழ்க்கை, ஜனங்களின் சித்தத்தின் பிரவிருத்தி, அவர்களின் பழக்க வழக்கங்கள், அப்போதுள்ள மதாசாரம் நீதிநெறி முறை முதலியவைகளையே விசேஷமாய்க் குறிக்கின்றன. இன்னும் செய்யுட் பாகமாயுள்ளவைகள் உலக இயற்கையமைப்புக்

அரு இரும்பைச் சாப்பிடுவதுபோல் பொறுமை மனிதனை விழுங்கிவிடும்.



கும் மனிதனது வாழ்வுக்குமுள்ள ஒற்றுமையும், மனிதன் இயற்கையாயுள்ளதை மாற்ற வியலாதென்பதும், கடவுள் மனிதனுள்ளத்திலிருந்தாலும் தனது வியாபகத்தை ஒவ்வொரு அலங்கார வஸ்துவிலுங் காட்டுகிறாரென்பதும், அவரைப் பூசிக்கவேண்டுமாயின் நாம் ஒரு நிலைப்பட்ட சித்தத்தோடு அவரது இயற்கையமைப்புகளை வர்ணித்து ஆனந்தமடைந்தாலே போதுமென்பதும் ஆகிய அரிய பெரிய விஷயங்களைத் தாங்கி நிற்கின்றன.

இவ்வளவு வைடூரிய வைர மரகத மாணிக்கங்கள் பொதிந்துள்ள பாஷா கிரந்தங்களைக் கற்கவேண்டுமென்ற அவா இளமையிலேயே உண்டாகவேண்டுமன்றோ? கேவலம் ஒரு சாண் வயிற்றுக்குத்தானே பயிலுவதென்பதை மறந்துவிடவேண்டாமா? கோடான கோடி அபூர்வ கிரந்தங்களை நம் வாழ்நாட்களுள் வாசித்துணர்வது நாமெடுத்த ஜென்மத்தின் சாபல்யமல்லவா? இப்படி நம் தேச பாஷா கிரந்தங்களைக் கற்பதற்கு முக்கியமாய் வேண்டியது எந்நாளும் நாம் விஷயவறிவு சம்பந்தப்பட்டவரையில் மாணவர்களே யெனும் உணர்ச்சி. இந்த உணர்ச்சியை இனிமேலாவது பிள்ளைகளுக்கு உபாத்தியாயர்கள் கிளர்ச்சி செய்து பாஷாக் கிரந்தங்களை அநுபவித்து வாசிக்கச் செய்வார்களாக.

## மோட்டார் எமனைப் பார்த்ததுண்டா?




இவனைத்தான் "மோட்டார் எமன்" என்று பத்திரிகை உலகங் கூறுகிறது. மாறுதல் தத்துவப்படி எமனும் நாகரிக வடிவங்கொண்டிருக்கிறான்.

கோபத்தினும் வசையே நட்பின் பெரும் பகைவன்.

# புலவர்களைப் பற்றிய பொய்ம்மைகள்.

(T. S. குழந்தைவேலன், திருவானைக்கா.)

நாறூண்டுகளுக்கு முன்னிருந்த மக்களின் அறிவு, ஒழுக்கங்களெல்லாம் வேறு. இக்கால மக்களின் புத்தி நடவடிக்கைகளெல்லாம் வேறு. அக்காலத்தில் பெரியோர் கூறும் எந்த மொழியையும் உண்மையென அப்படியே நம்பி அதன்படி ஒழுகினார்கள். இக்காலத்தில் எத்தகைய சான்றோர் எதைக் கூறினும் ஆராய்ந்த பின்னரே அதைக் கொள்ள இசைகின்றனர். அக்காலத்தவர் களங்கமின்றி பெரியோர் மொழிகளிற் பிழையிராதென நம்பினார்கள். அதற்கேற்பவே அக்காலப் பெரியோர்களும் உயிர்க்கு உறுதி பயக்கும் உயரிய கருத்துக்களை மக்களுக்குப் போதித்தனர். அதனாலேயே அக்கால மக்கள் தம் புத்தியைக்கொண்டு ஆராயும் முயற்சியிற் செல்லவில்லை.

இங்ஙனம் பெரியோர்கள் எது சொன்னாலும் நன்மையே விளையுமென்று நம்பும் வழக்கங் குடிகொண்டமையாலேயே இக்காலத்து ஆராய்ச்சியாளர்க்குப் பொருந்தாத பல செய்திகளை அக்காலத்துள்ளாரில் ஒரு சிலர் அக்கால மக்கள் போலவே பிற்கால மக்களும் நம்புவார்களென்னும் எண்ணத்தாலோ என்னவோ கூறி வைத்தனர்.

மனித இயற்கையே நாளுக்குநாள் முன்னேறிச் செல்லும் இயல்புடையதென்பது தேசசரித்திரத்தால் இனிது விளங்கும். இக்காலச் சிறுவர்கள் கேட்கும் விந்தையான கேள்விகளுக்கு நம்மால் விடைதர இயலாது போகிறது. ஒரு சமயம் ஐந்தே வயதுடைய சிறுவனொருவன் தன் தாயிடஞ்சென்று "அம்மா, வயிறு பசிக்கிறதே, எப்படிப் பசிக்கிறது, ஏன் பசிக்கிறது?" என்று கேட்ட கேள்விகள் இப்பொழுது நமது நினைவிற்கு வருகின்றன.

மக்கள் எதையும் குருட்டுத்தனமாய் நம்பிய காலத்திலேயே புராணங்களெல்லாம் எழுந்தன வென்றும், அவை யெல்லாம் சுத்தப்புரட்டென்றும் இக்காலத்தில் ஒரு சாரார் கூறுவாராயினர். இவர்கள் கூற்றுக்கும் ஒரு சில ஆதரவுகளுள வென்பதை நாம் கூறாதிருக்க வியலாது. நாம் எடுத்துக்கொண்ட பொருள் புராணம் பொய் யென்பதல்ல. அது யாதாயினுமாகுக. எதுவும் உண்மை உண்மையாகவும் பொய் பொய்யாகவுமே வெளியாகு மென்பதை எவரும் ஒப்புவர். கீழ்வருவனவாய கதைகள் மக்கள் ஆராயாமல் நம்பிய காலத்தில் போலிப்புலவர்களால் கட்டிவிட்டனவோ என ஐயுறவேண்டி வருகிறது. ஆன்றோர் உண்மைகண்டு தெளிக.

**கம்பரும்—ஔவையும்:**—ஆங்கிலமொழியில் ஷேஸ்பியரும், வடமொழியில் காளிதாசரும் எங்ஙனம் கவி வல்லுநரோ அவ்வாறே தென்மொழியாய தமிழ்மொழியில் கம்பர் கவி செய்யும் வல்லமை வாய்ந்தவரென்பது தமிழகம்

புகழில் பேராசை தகுதி வறுமையைக் காட்டும்.



நன்கறியும். இக்கால அறிஞர்கள் "கம்பர் கவிநயம்", "கம்பர் கவியின்பம்" என்பன போன்ற தலைப் பெயர்களுடன் அரிய பெரிய ஆராய்ச்சி யுரைகளைத் தந்து செல்லுவதே இதற்குப் போதியசான்று. "கம்பன் வீட்டுக் கட்டுத் தறியும் கவிபாடும்" என்ற சாதாரணப் பழமொழி கம்பர் மிக எளிதாகக் கவி இயற்றவல்லாரென்பதைக் காட்ட எழுந்த தென்பதை அறியாதார் யார்? இன்னும் கம்பர் நாமகளின் நல்லருள் வாய்க்கப்பெற்றவ ரென்பர்.

இங்ஙனம் சிறப்பு வாய்ந்த கம்பரிடம் சோழநாட்டிலே யிருந்த சிலம்பி யென்னும் பெயருடைய ஒரு தாசியானவள் வந்து தன்மீது ஒரு பாட்டுப் பாடவேண்டுமென்று வேண்டினாள். கம்பர் அக்காலத்தில் திருவருள் மொழி கொண்டு திகழ்ந்தாராகலின், அவர் வாக்கால் சிறப்பிக்கப்பட்டால், தான் மிக்க செல்வவதியாய் விடலாமென்று தாசி எண்ணினாள் போலும்! கம்பர் யாவராயினும் ஆயிரம்பொன் கொடுத்தால் ஒரு பாட்டுப்பாடுவதென அச்சமயம் தீர்மானித்திருந்தார்! அதனால் தாசியை நோக்கி "நீ ஆயிரம் பொன் கொடுத்தால் உன்பேரில் பாடுகிறேன்" என்றார். ஏழைத்தாசி என் செய்வாள்? எல்லோரையும் மயக்குவதுபோலக் கம்பரையும் மயக்கிப் பொன் கொடாமலே பாட்டுப்பெற்றுவிடலாமென்ற அவள் ஆசை மண்ணாயிற்று. ஆயினும் அவள் கொண்ட பேராசை நீங்கவில்லை. தன்வீடு பொருள்களையெல்லாம் விற்றுத் திரட்டிப் பொன்னாக்கிப் பார்க்கும் பொழுது ஐந்நூறு பொன்னே தேரியது. அதைக்கொண்டு கம்பரை ஏமாற்றி விடலாமென்று ஓடோடியுஞ்சென்று ஐந்நூறு பொன்னையும் அழகாகக் கொட்டி அவர் முன்னிலையில் வைத்து, கம்பரின் அடிபணிந்து நின்றாள். கம்பர் ஐந்நூறு பொன்னையும் அள்ளிக்கொண்டு "ஐந்நூறு பொன்னுக்கு அரைப்பாட்டுத்தான் பாடுவேன்" என்று "தண்ணீருங் காவிரியே தார்வேந்தன் சோழனே, மண்ணாவதுஞ் சோழமண்டலமே" என்ற அரைப்பாட்டைப் பாடிக்கொடுத்து விட்டாராம்! சிலம்பி ஏமாந்தவளாய் வருத்தத்துடன் வீடுசென்று அப்பாட்டைத் தன் வீட்டு வெளிச்சுவரில் எழுதி வைத்தாள். அப்பால் மிக்கப் பசியோடு வந்த ஔவையாருக்குத் தாசி சிலம்பி கூழ்கொடுத்து உபசரிக்க, களைதீர்ந்த ஔவை சுவரிலிருந்த பாட்டை வாசித்துப் பார்த்துக் குறையைப் பூர்த்தி செய்யக்கருதி "பெண்ணாவாள், அம்பர்ச்சிலம்பி அரவிந்தத் தாளணியும், செம்பொற் சிலம்பே சிலம்பு" எனப்பாடி முடித்தனள். நாமகளின் அவதாரமாகிய ஔவையாரின் வாக்குப்பெற்ற சிலம்பி, உடனே செல்வவதியாய்த் திகழ்ந்தாள்.

ஐந்நூறு பொன்பெற்றுக் கம்பர் பாடியதால் வறுமையுற்றிருந்த சிலம்பி, கூழுண்டு பாடிய ஔவையின் வாக்கால் செல்வமடைந்தாளென்னுஞ் செய்தி கம்பர் செவிக்கெட்ட, அவர் ஔவையின்மீது அழுக்காறுகொண்டு அவரைத் தலைகுனியச் செய்யத் தருணம் பார்த்துக்கொண்டிருந்தார். தக்க சமயம் ஒருகால் கிடைக்க அப்பொழுது கம்பர் ஔவையாருக்கும் ஆரைக்கீரைக்குஞ் சிலேடையாக "ஒரு காலடீ நாலிலைப்பந்தலடீ" என்றனராம். இதில் ஔவையை 'அடி' யெனக்கூறி அவமானஞ் செய்தார் கம்பர். அதுகேட்ட ஔவையார் விடையாக,

"எட்டேகால் லட்சணமே எமனே றும்பரியே
மட்டில் பெரியம்மை வாகனமே—முட்டமேற்

ஒழுக்கம் இன்றி நட்பு இருக்கலாகாது.

கூரையில்லா வீடே குலாமன் தூதுவனே
ஆரையடா சொன்னா யடா"

என்று கம்பர் அடியென்று விளித்தற்கு வசையாக அடாவென்று அதட்டி மொழிந்து பாடினார்.

பின்னர் வேறொரு தருணம் சோழன், கம்பர், ஔவையார் இம்மூவரும் ஒரு காட்டின் வழிச் சென்றுகொண்டிருந்தபொழுது இலைகளுதிர்ந்து நிற்கும் நெல்லிமரமொன்றைக்கண்ட ஔவையார் பொதுவாக, "கல்வி யுடையீர் கருங்கானகத்திடையே, நெல்லியிலை யுதிர்ந்து நிற்பதெவன்" என்ன உடனே கம்பர் "வல்லோய்கேள், வெல்லா வழக்கை விலைகொண்டு வெல்விக்கும் வல்லாளன் சுற்றம்போல் மாண்டு" என்று விடை யிறுத்தனர். அதுகேட்ட ஔவை "நான் பொதுவாகத்தானே கேட்டேன்; நீர் ஏன் என் பாட்டைப் பூர்த்தி செய்தீர்?" என்று கம்பரிடம் சண்டைக்குப் புறப்பட, அருகிருந்த சோழன் இருவரையுஞ் சமாதானஞ் செய்து விட்டான். அன்று முதல் ஔவையாருங் கம்பரும் சிநேகமாயினர். இது சுருக்க வரலாறு. இதில் பல மாறுபாடுகளுமுள. இனி இவற்றிலுள்ள உண்மை எதுவரையிலெனப் பார்ப்போம்.

கம்பர் நாமகளின் நல்லருள் கொண்டவரெனக் கண்டோம். நற்கவிஞரெனவுந் தெரிந்தோம். இத்தகையாரிடம் குணவொழுக்கங்கள் சிறந்து விளங்குதல் ஒருதலை. இந்நிலையிலுள்ள கம்பர் ஆயிரம் பொன்னுக்கு ஒரு பாட்டுப் பாடுவதென்னும் நிபந்தனையை ஏற்படுத்துவாரா? ஏன் "நெற்கொண்டு போமளவும் நில்லாய் நெடுஞ்சுவரே" என்று இவரே வறுமையிற் பாடியுள்ளாரே, வறுமையின் கொடுமையால் இவ்வாறு கம்பர் நிபந்தனையை ஏன் ஏற்படுத்திக்கொண் டிருக்கலாகா தெனலாம். அங்ஙனமே சரியெனக் கொண்டாலும், ஏழைத்தாசி தன் சொத்துக்களை யெல்லாம் அழித்து ஐந்நூறு பொன் கொண்டு வந்தாளே, போகிறாள் பாவமென்று கம்பர் ஏன் முழுப்பாட்டும் பாடவில்லை? அவ்வளவு கண்ணியபுத்தி கம்பரிடம் இல்லாமலா போய் விட்டது? முதலில் தாசி தன் வீட்டுப் பொருட்களை யெல்லாமா விற்றுக் கம்பரிடம் பாட்டுப் பெறத் துணிந்தாள்? அது கிடக்க, கம்பர் சிலம்பியின் பொன்னை மூட்டை கட்டிக்கொண்டு அரைப்பாட்டென்று "தண்ணீருங் காவிரியே தார்வேந்தன் சோழனே, மண்ணாவதுஞ் சோழமண்டலமே" என்று பாடி விட்டாரே அதில் சிலம்பிக்குத் தம்பிடிக்குப் பயனுண்டா? தண்ணீரிற் சிறந்தது காவிரிநீரே, மன்னரிற் சிறந்தோன் சோழனே, மண்ணிற்சிறந்தது சோழ நாடே என்பதனால் சிலம்பிக்கு என்ன பயனோ? தன்பேரில் ஒரு எழுத்துக்கூட இல்லாத இவ்வரைப்பாட்டைக் கேட்ட சிலம்பி தன் பணத்தை விட்டு விட்டுச் சென்று விடுவாளா? பொதுமகளாகிய அவள் நாணத்தைவிட்டுக் கம்பர் தன் பொன்களைக் கையில் வைத்திருந்தாலும் கை போட்டுப் பிடுங்கிக் கொள்வாளென்பதில் என்ன தடை?

அப்புறம் ஔவையார் கதை வருகிறது. சிலம்பி தன் வீட்டை விற்றுப் பொன்திரட்டினாளென்று முன்பு அறிந்தோம். பின்பு கம்பர்பாடிய அரைப்பாட்டைத் தன்வீட்டில் எழுதி வைத்தாளென வரலாறு காண்கிறோம். இது எத்துணை முரண்? சிலம்பி வீட்டை விற்றாளென்ற குறிப்பில்லாமல் வேறொரு வரலாறிருக்கின்றமையால் இதைவிட்டு விடுவோம்.



ஔவையார் கம்பர் அரைப்பாட்டைப் பூர்த்தி செய்தாள். "அம்பொற் சிலம்பி அரவிந்தத்தாளணியும்" என்று ஔவை சிறப்பித்ததனால் சிலம்பி காலில் பொன்னணி அணியும் அத்துணைச் செல்வவதியாயினளாம்! ஔவையாரிடம் அத்தகைய சக்தியிருந்தும் என்னவோ தலைவிதி கூழுக்குப் பாடும்படி நேரிட்டது. பிறரைச் செல்வராக்குஞ் சக்தி தனக்குப் பயன்படாமற் போனது என்ன சாபக்கேடோ?

ஔவையார் தன் அரைப்பாட்டைக் கூழுக்குப் பாடிப் பூர்த்தி செய்து சிலம்பியைச் செல்வவதியாக்கினளே யென்று அழுக்காறு கொண்ட கம்பர் அவரை அவமானஞ் செய்ய வெண்ணி "ஒரு காலடீ நாலிலைப் பந்தலடீ" என்றார்! இது கம்பரை எத்துணைதூரம் இகழ்வதற்குரியதா யிருக்கிறது? அருங்கலை நிறைந்த நெஞ்சில் அழுக்காறு தோன்றுமா? கம்பர் இங்ஙனங் கூறியது உண்மையானால், நாம் கம்பரைப் பெருங்குணம் நிறைந்தவர் அன்றென்றே கூறவேண்டி வரும். அங்ஙனம் கம்பரை அவமதிக்க எவர் மனமேனும் ஒப்புமா? தேனினும் பாகினும் நனிமிகு சுவையொழுகப்பாடிய நாவால், கம்பர் எள்ளி நகையாடுதற்குரிய இப்புல்லிய சொற்களைச் சொன்னாரென்றால் எவ்வாற்றானும் பொருந்தா தென்றே எவருங் கூறுவர். கம்பரின் கவிதா விலாசத்தில் சிறிது நுழைந்தோரும் இதை ஏற்கமாட்டா ரென்பது உறுதி.

இதுதான் போகிறதென்றால் நாமகளின் பிறப்பாய ஔவையார் கம்பரின் இழிசொற்களைக் கேட்டவுடனே மனம் பொறாது "எட்டேகால் லட்சணமே" என்ற அவலட்சணப்பாட்டைக் கூறினாராம்! இவ்வளவு அழகிய பாட்டை எந்த அவலட்சணப்புலவர் இயற்றினாரோ நாமறியோம். கவியரசியெனத் திகழ்ந்த ஔவையார் இத்துணைக் கேவலமாகப் பாடினாரென்று மாட்டேற்றி விட்டிருப்பது பெரிதும் வருந்தத் தக்கது என்றாலும் கம்பரும் ஔவையாரும் பின்னர்ச் சோழனால் சமாதான மடைந்தனரென்பது கதை கட்டிவிட்டவரின் புத்தி சாமர்த்தியத்தைத் தெள்ளென எடுத்துக்காட்டுகிறது. அந்த மட்டில் நாம் அவரைப் பாராட்டாதிருக்க வியலாது.

இதுகாறுங் கூறியதினின்றும் கம்பருக்கும் ஔவையாருக்கு மிடையில் நிகழ்ந்த செய்திகள் பிற்காலத்தில் எவராலேனும் கற்பிக்கப்பட்டனவோ வென்ற ஐயம் ஒரு சிலருக்கேனும் எழுமென்று நம்புகிறோம். நாம் இச் சரித்திரத்தை விநோதரசமஞ்சரி முதலிய நூல்களில் கண்டபொழுது எழுந்த ஐயத்தினாலேயே இதை எழுத நேர்ந்தது. யுக்திக்கும் அநுபவத்துக்கும் பொருந்தாத அநேக செய்திகள் அவற்றில் மலிந்துள்ளன. இன்னும் வரலாறுகள் ஒன்றுக்கொன்று பெரிதும் மாறுபடுகின்றன. இவற்றை யெல்லாம் தமிழறிஞர்கள் கவனியாததேனோ? உண்மைச் செய்தி இன்னதென்று கண்டறிய இயலவில்லையே. பெரும் புலவர்கள் பதர் நீக்கி மணி கொண்டு காட்டுவார்களாயின் எம்போலியர்க்கு எத்துணை இன்பந்தரும்! தமிழ்ப் புலவர்கள் சரித்திரத்தைத் தாறுமாறாய் வைத்திருப்பது தமிழ்ப் புலவர்களுக்கே அதுவொரு தலைக்குனிவு என்று கூறுதல் மிகையாகுமா? எத்துணையோ காலம் இவ்வரலாறுகள் உலாவிக்கொண்டிருந்தும் இதுவரையிலும் எவரேனும் இதைக் கவனித்ததுண்டா? கம்பரின் கவிகளைக் கொண்டாடுவோர் அவர் புகழுக்கிழுக்காய் நின்று நிலவும் ஆதாரமற்ற அற்பச் செய்திகளைக் களைய முன்வராத

நன்றி செய்தவன் மௌனமா யிருக்கவேண்டும்—அதைப் பெற்றவன் பேசவேண்டும்.

தென்னவோ? இன்னும் இவ்வரலாறுகளைத் திருத்தியும் புதுக்கியும் எழுதிப் பள்ளிகளில் பாடங்களாக்கும் தமிழ் நூலாசிரியர்களின் போக்கும் விந்தையே! இவற்றைக் கற்கும் மாணவர்கள் கம்பர், ஔவை முதலியோரிடம் எத்தகைய மதிப்புக் கொண்டிருப்பாரென்பதை எடுத்துக் காட்டத் தேவையேயில்லை. பிற்காலத்தில் அருங்காவியமாம் கம்பராமாயணத்தில் அவர்களுக்கு மதிப்பு எங்ஙனம் பிறக்கும்? தமிழ்ப் புலவர்களிடந்தான் எங்கிருந்து அன்பு காட்டப் போகிறார்கள்? இப்பொழுது பள்ளிகளில் தமிழ்ப் புலவர்களிடம் மாணவர்கள் காட்டும் அன்பு, மதிப்பு எல்லாம் விளக்கமாய்த் தெரிந்தவையே. நிற்க, இனியேனும் தமிழ்ப் புலவர்கள் உண்மை வரலாற்றினை ஆராயத் தலைப்படுவார்களாக. மற்றோர் சமயம் ஔவையாருக்கும் ஒட்டக்கூத்தருக்கும் இடையில் நிகழ்ந்துள்ள செய்திகளைப் பற்றி எழுத உத்தேசம்.

## பாரதியின் சீர்திருத்த வேட்கை.



சிந்து நதியின் மிசை நிலவினிலே
சேர நன் னாட்டிளம் பெண்க ளுடனே
சுந்தரத் தெலுங்கினிற் பாட்டி சைத்துத்
தோணிக ளோட்டிவிளை யாடி வருவோம்.

குறிப்பு:—இது கவிச் சக்கிரவர்த்தி-சி. சுப்பிரமணிய பாரதியாரின் அமுத வாக்கு. இதில் நமது சமூக விடுதலைக்கும், நாட்டு விடுதலைக்கும் உரிய பல ஆழ்ந்த பொருள்கள் மிளிர்கின்றன. "வடக்கே-நூற்றுக் கணக்கணக்கான மைல்களுக்கப்பாலுள்ள சிந்து நதியிலே-நல்ல நில வொளியிலே-மலையாள நாட்டு இள மங்கையருடன்-அழகிய தெலுங்குப் பாட்டுக்கள் பாடி தோணிகள் ஓட்டி விளையாடி வருவோம்" என்று தமிழ்மக்கள் சார்பில் வீர முழக்கஞ் செய்கின்றார் பாரதியார். இதிலிருந்து ஆகாய விமானம் முதலிய வேகமுள்ள போக்கு வரவு சாதனங்கள் ஏற்படுவதில் பாரதியார் காட்டிய ஆர்வமும், "கலப்பு மண விஷயத்தில் அவருக்கிருந்த வேட்கையும், பிற மொழிகளைப் போற்றுவதில் அவர் வைத்திருந்த பரந்த நோக்கும் நன்கு புலனாகும்.

# ஜமீன்தார் வாழ்வு

இவர் கூத்தாடிப்பட்டி ஜமீன்தார். மஹா டாம்பீகப் பிரியர். மிகுந்த செல்வாக்குள்ளவர். தாராளமாகச் செலவு செய்யும் எலும்பில்லாக் கையர். சுக போகத்தில் பூலோக இந்திரர். இவர் பேர் சொன்ன மாத்திரத்தில் அழுத பிள்ளையும் வாய் மூடும். இவர் குடலைக் கிழித்துப் பார்த்தால் நெடுங் கணக்கில் உள்ள ஒன்று குறைய நானூறு எழுத்துக்களில் ஒரு எழுத்தும் இராது. இவர் தாசிகள் தாசர்—ஜம்ப வாழ்வில் சலிக்காதவர். இவரது வயிற்றில் ஆடு கோழிகளெல்லாம் அப்படியப்படியே நுழையும். வயிறெல்லாம் முட்டையாயிருக்கும். பறக்கிற ஜந்துக்களில் பட்டமும், நடக்கிற நாற்கால் பிராணிகளில் சட்டிலுந்தான் இவருக்குத் தள்ளுபடி. இவர் குடலுக்குள் மீனாட்சியே (மீனின் சஞ்சரிப்பு) மலிந்து கிடக்கும்.




பீர், ஒயின், ஜின், பிராந்தி, விஸ்கி முதலிய பானங்களை பாட்டிலோடே உள்ளே விட்டுவிடுவார். சமுத்திரம் சாராயமயமாயிருக்கவேண்டும், தாம் அதில் ஒரு மீனாகப் பிறந்து சஞ்சரிக்கவேண்டும்—இப்படி பிரமா சிருஷ்டிக்கவில்லையே என்று கவலைகொண்டு ஏங்குகின்றார். அடுத்த பிறவியிலேனும் அவ்வாறு சித்திக்கட்டும் என்று தவங்கிடக்கிறார்.

சர்க்கார் உத்தியோகஸ்தர் என்றால் நமது ஜமீன்தாருக்கு அதிக உற்சாகம்—குல தெய்வங்களாகப் போற்றுவார்—வாரி வாரிப் பை பையாகக்

---

பிறன் ஒருவனை அவன் விரும்பும் வண்ணம் மதித்தல் கடினமான காரியம்.

கொடுத்துவிடுவார். வெள்ளைக்காரர்களாகிய கலெக்டர், போலீஸ் சூப்பரின்டென்டெண்டு வந்துவிட்டால் வண்டி வண்டியாகப் பணத்தை அள்ளிக் கொட்டுவார். சோடசோபசாரங்கள் செய்வார். தங்கத்தைப் பரப்பி அதன் மேல் நடத்துவார்—கிடத்துவார்.

தினந்தோறும் நகரங்களிலிருந்து யாரேனும் இவரைக் காண வந்துகொண்டே இருப்பார்கள். இவர் மிகவும் ஸ்தோத்திரப் பிரியர். ஏதேனும் பணம் பறிக்க வேண்டுமானால் கோட்டு, சூட்டு, பூட்டுகளை அணிந்து மோட்டாரிற் போய் "அலோ ஜமீன்தார்! உங்கள் கீர்த்தி உலகமெல்லாம் பறக்கிறது. உங்களைப் போல் உண்டா? நான் கவர்னர் நண்பன். கலெக்டர்கள், ஜட்ஜுகள், சூப்பரின்டென்டெண்டுகள் எல்லாரும் என்னைக் கண்டால் சலாம் போட்டுக் குலாம்போல் நடப்பார்கள். உமது ஸ்நேகத்தை நாடி வந்தேன்" என்று சொல்லிவிட்டால் போதும்—அவனைக் குபேரசம்பத்துடையவனாகச் செய்துவிடுவார்.



நமது ஜமீந்தார் சூது, வாது, கொலை, கொள்ளை—எல்லாங் கற்றுத் தேர்ந்தவர். இவருடைய அரண்மனையில் விருந்தும், களியாட்டும் இல்லாத நாளே கிடையாது. நாட்டியமும் பாட்டும் எப்பொழுதும் நடந்து வரும். பெரிய ஜமீன்தாராயிற்றே என்று யாரேனும் புலவர்களோ, பொதுநல ஊழியர்களோ—இவரை நாடிச் சென்றால் வாசற்படியிற் கட்டியுள்ள வேட்டை நாயை அவிழ்த்து விட்டுவிடுவார். அவைகளைப் போன்றே இருப்பார்கள் அவருடைய வேலையாட்களும்.

ஜமீன்தார் மாமிச பருவதம்போல் வீற்றிருக்கிறார். இவர் திருமுன்னிலையில் நாட்டியப் பெண் ஆடுகின்றாள். நட்டுவர் பாடி மத்தளம் அடிக்கின்றனர். ஜமீன்தாரின், சகாக்கள் எல்லாரும் ஆனந்தமாய் உட்கார்ந்திருக்கின்றனர். ஜமீன்தார் பொன்னைத் தட்டு நிரம்ப வைத்துக் கூத்திக்குக் கொடுக்கின்றார். தட்டில் வைத்து கொடுத்தது காணாது என்று கை நிரம்பவுங் கொடுக்கின்றார்.

இந்த ஜமீன்தாரிடத்தில் இரண்டு மூன்று நாள் பட்டினி கிடந்து சோர்ந்துவந்து ஒரு நொண்டி காலணா கேட்கிறான். இவன் எப்படியோ வாசற்படியிலுள்ள வேட்டை நாயினின்றும் தப்பித்துக்கொண்டு வந்துவிட்டான். இங்கே தமது வேலைக்காரனை உசுப்பிவிட்டுவிட்டார். அவன் தடியுங் கையுமாக ஓடுகிறான். இது காணாதென்று ஜமீன்தாரே கையைக் குவித்துக்கொண்டு குத்தி விரட்ட எழுந்திருக்கிறார். நமது தமிழ் நாட்டு ஜமீன்தார்கள் இத்தகைய வாழ்க்கையை மேற்கொள்ளாமல் இருக்கக் கடவுள் அருள்புரிவாராக. நல்ல ஜமீன்தார்களும் இருக்கிறார்கள். அவர்களைக் குறைகூற யாரும் முற்படமாட்டார்கள்.

விகடன்.

எவனிடம் வெட்க உணர்ச்சி இல்லையோ அவனை இறந்தவனாகவே மதிக்கவேண்டும்.





மனைவி:—"ஐயோ! வீட்டுக்குள் தேள் வந்துவிட்டதே!—கொஞ்சம் வந்து அடியுங்கள்"

புருஷன்:—"ஐயையோ அப்படியா! வெளியில் போகிறானே அந்த ஆண் பிள்ளையைக் கூப்பிடு"

மனைவி:—"நீங்கள் ஆண்பிள்ளை அல்லவா?"

"ஓ! நல்ல வேளையில் ஞாபகப்படுத்தினாய்!"

ஸ்நேகம் முறியும்போல் இருந்தால் சிந்தையிலுள்ளதைத் திறந்து கூறிவிட்டால் போதும்—ஸ்நேகம் முறியாது நின்றுவிடும்.




# "எல்லேப்புற காந்தி" வரலாறு.

'எல்லேப்புற காந்தி' என்று சிறப்பிக்கப்படும் கான்சாகிப் அப்துல் கபார்கான் என்பாரது வாழ்க்கை ராஜீயத் துன்பங்கள் நிறைந்தது. இராணுவ உணர்ச்சியால் வீறுகொண்ட எல்லேப்புற மக்களுக்கு அஹிம்சா தர்மத்தின் மகிமையைப் போதித்து அவர்களேக் காந்தி சிடாக்கிய



பெருமையை இவரே பெற்ருர். இவர் சென்ற காாச்சி காங்கிரஸுக்கு வந்திருந்த பொழுத அங்கிருந்தவர்கள் எல்லாரும் வசீகரத் தோற்றமும், உயரமான உருவமும் உடைய அப்பட்டாணியர் மீதே தம் கவனத்தைச் செலுத்தி



னர். தமது அந்தரங்கசுத்தம் வெளிப்படுமாறு இனிய பார்வையில் அவர் பேசுவதும் மற்றவர்களுடன் வெகு எளிய முறையில் அன்பு காட்டி நடந்துகொள்வதும், பொது மக்களுக் குழைப்பதையே அவர் தம் வாழ்க்கையின் முக்கிய லக்ஷியமாகக் கொண்டிருப்பதுமே "எல்லேப்புற காந்தி" என்ற சிறப்புப் பெயருக்கு இவரை உரியதாக்கின.

அப்துல் கபார்கான் பெஷாவரைச் சேர்ந்த உத்மான்ஸை என்ற கிராமத்தில் 1891-ம் ஆண்டு பிறந்தார். அவரது தந்தையான பெஹ்ராம்கான் அவ்வகுப்புக் கூட்டத்தின் முக்கியத் தலைவர்களில் ஒருவர். கபார்கான் வைதிக முறையில் மசூதியில் படித்து முடிந்தபின், நகாசபையின் ஆங்கிலப் பள்ளிக்கூடத்திற்கும், எட்வேர்ட் சர்ச் மிஷன் உயர்தரப் பள்ளிக்கூடத்திற்கும் அனுப்பப்பட்டார். அவரது கிராமத்தில் முதன் முதலாக ஆங்கிலக் கல்வி கற்கச்சென்றது அவரும் அவரது சகோதரருமே. 1910-ம் ஆண்டில் கபார்கானே இங்கிலாந்திற்கு அனுப்பி அங்கு எஞ்சினீரிங் கல்வி கற்கச் செய்வதென அவரது தாய் தந்தையர் யோசனை செய்திருந்தனர். ஆனால் எதிர்பாராத சம்பவங்கள் அந்த யோசனைக்குத் தடையாக நின்றன. கபார்கான் மாணவராக இருக்கையில் தமது தோழர்கள் உபாத்தியாயர்களின் அன்பையும் மதிப்பையும் பெற்று விளங்கினர். 1909-ம் ஆண்டில் அவருக்கு இராணுவத்தில் ஒரு இந்திய அதிகார பதவி கிடைக்கவிருந்தது. இப்பதவியைக் கண்டு அவர் மோகங் கொண்டபோதிலும், இந்நாட்டு இராணுவத்தி லிருந்துவரும் ஜாதி வித்தியாசங்களே நினைத்து அதை ஏற்க மறுத்துவிட்டார்.

## அரசாங்க அடக்கு முறை

1912-ல் அதாவது அவர் இருபத்தொரு வயது வாலிபராயிருக்கையில் பொது ஊழியத்தில் இறங்கினர். அந்நாளில் துருக்கியர் இத்தாலியருடன் நடத்தி வந்த திருபோலி யுத்தத்தில், துருக்கியருக்கு உதவிபுரியப் பாடுபட்டார். அடுத்த ஆண்டில் அவரது முயற்சியால் சொந்தக் கிராமத்தில் ஒரு தேசியப் பள்ளிக்கூடம் ஏற்படுத்தப்பட்டது. ஆனல் 1915-ம் ஆண்டில், மகா யுத்தம் துவங்கியதும் அப்பள்ளிக்கூடத்தை அரசாங்கத்தார் கலைத்து அதைச் சேர்ந்த அதிகாரிகளேக் கைது செய்தனர். அப்துல்கபார் வெகு சிரமத்தின்பேரில் இக்கதிக்கு ஆளாவதினின்றும் தப்பினர். இத்தகைய அடக்கு முறைகளிலிருந்து அவர் அந்நிய ஆதிக்கத்தின் தீமைகளே அறிந்தார். அதிலிருந்து அவர் ஜனங்களுக்குத் தேசிய உணர்ச்சி ஏற்படுமாறுசெய்ய உழைப்பதையே தமது முக்கிய வேலையாகக் கொண்டார். இதற்காக அவர் தம் பிரதேசம் முழுவதும் சுற்றுப் பிரயாணம் செய்து தேசத்தின் அரசியல் நிலையை அவ்வப்பொழுது மக்களுக்கு விளக்கிவந்தார்.

## சிறை புகல்

1919-ம் வருஷத்தில் ரௌலட் சட்ட சம்பந்தமான கிளர்ச்சி தலை தூக்கியது. இச்சமயத்தில் தான் அப்துல் கபார்கான் காந்திஜியைப்பற்றியும் அவரது சாத்வீக இயக்கத்தைப்பற்றியும் அறியலானர். இது சம்பந்தமாகத் தமது சொந்தக் கிராமத்தில் இரண்டு பொதுக்கூட்டங்கள் நடத்தப்பட்டதற்காக அதிகாரிகள் அவர்மீது ஆத்திரங்கொண்டனர். உடனே அவர்கள் அங்கு இராணுவச் சட்டத்தை அமுலுக்குக் கொணர்ந்து அக்கிராமத்தினரிடமிருந்த ஆயுதங்கள் அனைத்தையும் பிடுங்கினர்கள். அப்துல்கபாரும், இன்னும் பிரபல

மாகவிருந்த 140-கான்களும் கைது செய்யப்பட்டதுடன் ரூபா 30,000த்துக்குக் குறையாமல் அக்கிராமத்தினருக்கு அபராதம் போடப்பட்டது. இவர்கள் மூன்று அல்லது நான்கு மாத காலம் சிறையில் வைக்கப்பட்டிருந்தபின் விடுதலை பெற்றனர். ஆனால் கிராமத்தினருக்கு விளைந்த நஷ்டம் சுமார் ஒரு லக்ஷ ரூபாவுக்கு மேலிருக்கும். போலீஸார் தங்களுக்குத் தோன்றிய அக்கிரமங்கள் அனைத்தையும் புரிந்து மக்களிடமிருந்து இவ்வளவு பணத்தைப் பறித்தனர். பிறகு துவக்கப்பட்ட ஒத்துழையாமை இயக்க சம்பந்தமாக கபார்கான் 1922-ல் கைது செய்யப்பட்டு எல்லைப்புறச் சட்டப்படி மூன்று வருஷ கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டார். இவர் சிறை புகுந்ததால், ஜனங்களிடை விழிப்பேற்பட்டு அனைவரும் அவரது நோக்கத்தை ஆதரிக்கத் தொடங்கிவிட்டனர். அவர் விடுதலையானபின், முதன் முதலாக கான்பூர் காங்கிரஸுக்கு வந்து சேர்ந்தார். அதிலிருந்து அவர் இந்தியாவில் நடந்துவரும் நிகழ்ச்சிகளை இடைவிடாது கவனித்து வரலானார். அவர் 1928-ம் ஆண்டில் தான் லக்ஷ்மணபுரியில் முதன்முதலாக காந்திஜியை நேரில் சந்தித்து ஆப்கானிஸ்தானத்தி லேற்பட்ட குழப்ப விஷயமாகப் பேசினார்.

## கல்வி அபிவிருத்தி

பாமர மக்கள் கல்வி பெற்று சமூக-ராஜீய முன்னேற்றம் பெறவேண்டுமென்பதே அப்துல் கபாரின் நோக்கம். இக் கல்வி யபிவிருத்திக்காக அவர் 1922-ம் ஆண்டில் 'அஞ்சுமான் இஷாயல் ஆப்கானு' என்ற ஸ்தாபனத்தை ஏற்படுத்தினார். இப்பொழுது இந்த ஸ்தாபனத்தின் மேற்பார்வையில் 2000 மாணவர்களைக் கொண்ட 26-தேசீயப் பள்ளிக்கூடங்கள் நடந்து வருகின்றன. இப்பள்ளிகள் வளரவொட்டாதபடி தடுக்க அதிகாரிகள் தங்களாலான இடையூறுகள் அனைத்தையும் விளைவித்தனர். தமது கூட்டத்தார் விவாகம் போன்ற சடங்குகளில் ஏராளமாகப் பணத்தை வீண் செலவு செய்வது போன்ற சமூகக் கேடுகளையும் ஒழிக்க அவர் தீவிரமான முறையில் உழைத்து வருகின்றார்.

## லக்ஷம் தொண்டர்கள்

மக்களிடை ராஜீய உணர்வு ஏற்படச் செய்யும்பொருட்டு அவர் 1929-ம் ஆண்டில் 'ஆப்கன் ஜிர்கா'வை ஸ்தாபித்தார். இதற்கு ஒவ்வொரு ஜில்லாவிலும் தாலூக்காவிலும் கிளைச்சபைகள் இருக்கின்றன. இந்தியத் தேசீயக் காங்கிரசைப் போல் இதன் இலட்சியமும் பூர்ண சுதந்தரம் பெற உழைப்பது தான். இந்தியத் தேசியப் பிரசாரம், வகுப்பு ஒற்றுமை, அஹிம்சா தர்ம போதனை இத்தகைய தொண்டுகளை அந்த ஜிர்கா சிகப்புடை தரித்த தொண்டர்களைக் கொண்டு நடத்தி வருகிறது. இப்பொழுது இத் தொண்டர்களின் தொகை சுமார் ஒரு லக்ஷம் இருக்கும்.

யுத்த வெறி கொண்ட ஆப்கானியர்களை அஹிம்சா தர்ம வழிக்குக் கொணர்ந்ததுதான் இவரது பெரிய வெற்றியாகும். ஒத்துழையாமைக் காலத்தில் அவர் காந்திஜீயின் உபதேசத்தை அறிந்தபின்தான் அவர் அத் தர்மத்தில் நம்பிக்கை கொண்டவரானார். மகாத்மாஜியைப்போல் இவ்வெல்லைப்புற காந்தியும் அஹிம்சா தர்மத்தைத் தமது அடிப்படையான கொள்கையாகக் கொண்டுள்ளார்.

---

# கைத்தறியைக் காப்பாற்றுக.

(ஸ்ரீ. சக்கரவர்த்தி-ராஜகோபாலாச்சாரி.)

தென்னிந்தியாவிலுள்ள கைத்தறி நெசவுக்காரர் நீண்ட காலமாக மிக்க தீரத்துடன் ஓர் அற்புதமான போர் நடத்தி வருகிறார்கள். இந்தப் போரில் அவர்களுடைய சத்துருக்கள் லங்காஷையரிலும், ஜப்பானிலும், பம்பாயிலும் ஆமதாபாத்திலும் உள்ள ஆலைப் பேய்கள்தான். தமிழ்நாட்டு நெசவுத் தொழிலாளர் நடத்தும் இந்த யுத்தத்தில் ரணபேரிகை முழக்கமும், சங்கநாதமும், ஜயகோஷமும் மற்ற ஆர்ப்பாட்டங்களும் இல்லாவிட்டாலும் இது ஓர் பாரத யுத்தம் என்பதில் சந்தேகமில்லை. நீராவியும், மின்சார சக்தியும், பெரிய மூலதனமும், வியாபாரக் கூட்டுறவும், அரசியல் அதிகாரமும்—எல்லாம் ஒன்று சேர்ந்து கைத்தறி நெசவை ஒழித்துவிடப் பிரயத்தனம் செய்து வருகின்றன. ஆயினும் கைத்தறியில் நெய்யும் நமது வீரர்கள் சோர்ந்துவிடாமல் இன்னமும் தலை நிமிர்ந்துதான் நிற்கின்றார்கள். ஆயிரக்கணக்கான வருஷங்களுக்கு முன்னிருந்து அற்புத கைத்திறமை வாய்ந்த பரம்பரையில் வந்த இவ்வீரத் தொழிலாளிகளைக் கண்டு நாம் அதிசயிப்பது மட்டும் போதாது. இச்சமயம் கைத்தறிக்கு நமது பூரண அனுதாபமும் ஆதரவும் தேவை. கைத்தறியின் பகையாளிகளுடைய பலம் குறையவில்லை. அவர்களுடைய பேராசையும் குன்றவில்லை. இன்னமும் தமிழ்நாட்டுக் கைத்தறிக்காரனை அரித்துப் போடுவதென்றே பகைவன் கங்கணங் கட்டிக்கொண்டிருக்கிறான். நாம் இச்சமயம் ஆதரவு தராவிடில், ஒருவேளை தென்னிந்திய நெசவுக்காரன் அழிந்தே போய்விடலாம். அப்படியானால் அதைவிடத் தென்னாட்டுக்கு நேரக்கூடிய பயங்கர விபத்து வேறு கிடையாது.

தமிழ்நாட்டுத் தறிகாரர் அதிசயமான கைத்திறமை யுடையவர்கள். இது ஆயிரக்கணக்கான வருஷங்களுக்கு முன்பிருந்து தலைமுறை தலைமுறையாக அவர்கள் அடைந்த திறமையாகும். அலுப்பு சலுப்பின்றி அளவிலாத பொறுமையுடன் அவர்கள் உழைத்து வேலை செய்கிறார்கள். நமது தேசத்திலுள்ள மற்றும் பல ஏழை வகுப்பாரைப் போலின்றி கல்விகற்கும் விருப்பமும் அவர்களிடம் குடிகொண் டிருக்கிறது. பெருவாரியாகத் துணி உற்பத்தி செய்து குவிக்கும் இயந்திர ஆலைகளை அவர்கள் இதுகாறும் எதிர்த்து நின்று சமாளித்திருக்கிறார்கள். பழைய நடை உடைகளில் நமது ஜனங்களுக்குள்ள பற்றுத்தான் இதுவரை அவர்களுக்குப் பாதுகாப்பாயிருந்து வந்திருக்கிறது. கோத்து வாங்கும் கரைகளுள்ள வேஷ்டிகளும் சேலைகளும் கைத்தறியில்தான் நெசவு செய்ய முடியும். ஜனங்கள் இத்தகைய வேஷ்டி சேலைகள்தான் அணிவது என்று வைத்துக்கொண்டிருந்த வரையில் கைத்தறிக்காரர்களுக்கு ஒருவகைப்

---

மனிதனுடைய கொடிய பகைவன் அவனது நெஞ்சிலேயே யுள்ளான்.

பாதுகாப்பு இருந்தது. ஆனால் இக்காலத்தில் இந்தப் பழமைப்பற்றும் குன்றி வருகிறது. மலிவான ஆலைத்துணி எப்படியிருந்தாலும் போதுமென்று எண்ணத் தொடங்கிவிட்டார்கள். கைத்தறித் துணிகளைப்போல் காணப் படும் தினுசுகளை ஆலைகளிலும் நெய்கிறார்கள். கைத்தறித் துணி வெளி நாட்டு ஆலைத் துணிகளுடனே போட்டியிட வேண்டியிருப்பதால், தறிகாரர் களின் கூலி நாளுக்குநாள் குறைந்துபோய் தற்போது தினம் ஆறணாவுக்கு மேல் கிடைப்பதில்லை. தொழில் திறமை வாய்ந்த நெசவுக்காரன் நாள்முழு தும் செய்யும் வேலைக்கும் அவனுடைய குடும்பத்தார் செய்யும் உதவிக்கும், எல்லாவற்றிற்கும் சேர்ந்து கூலி இவ்வளவுதான்.

நாளுக்கு நாள் கூலி குறைந்து வந்தபோதிலும் தறிகாரர்கள் இன்னும் துணி நெய்துதான் வருகிறார்கள். அவர் செய்யக்கூடிய வேறு தொழில் எதுவுமில்லை. நெசவுத் தொழிலை நிறுத்தினால் பட்டினி கிடந்து சாவதைத் தவிர வேறு கதி இல்லை. கூலி குறைந்தபோதிலும் முன்னைவிட அதிக நன் றாகவும் வேலைப்பாடாகவும் அவர்கள் நெய்கிறார்கள். இல்லாவிடில், வெளி நாட்டிலிருந்துவரும் பகட்டான துணிகளுடன் போட்டியிட்டு கைத்தறித் துணிகளை விற்பனை செய்ய முடிவதில்லை. ஆகையால் கைத்தறித் துணிக ளுக்கு விற்பனை இல்லாமல் நெசவுக்காரர்கள் வேலையின்றி வருந்தி வரு கிறார்கள்.

துணி மலிவாயிருந்தால் அதை வாங்கி உடுத்த சந்தோஷமாய்த்தான் இருக்கும். ஆனால் நாடெங்கும் பதினாயிரக் கணக்கான குடும்பங்கள் தொழி லிழந்து பட்டினி கிடத்தல் சந்தோஷமான விஷயமல்ல. மலிவான துணி தான் மேலானது என்று எல்லா ஜனங்களும் எண்ணத் தொடங்கி கைத் தறித் தொழில் அழிந்துபோனால், அதன் பலனாக லக்ஷக்கணக்கான ஜனங்கள் பட்டினி கிடக்கத்தான் நேரும். தேசத்தில் கொலை, களவு, குற்றங்கள் பெருகி, அராஜகம் உண்டாகும். இத்தகைய நிலைமை ஏற்படாமல் எப்படியாவது தடுத்தாக வேண்டும். கைத்தறி நெசவு ராட்டையைப்போல் ஒழிந்த நேரத் தில் செய்யும் துணைத் தொழிலன்று. லக்ஷக்கணக்கான குடும்பங்களுக்கு அது ஒன்றே ஜீவனோபாயமா யிருந்துவருகிறது. கைத்தறித் துணிகளை வாங்குவோரில்லாமல் போனால் தமிழ்நாட்டில் கோரமான பஞ்சம் வந்துவிடும்.

தமிழ் நாட்டில் வாழும் ஆண் பெண் அனைவரும் தமிழ்நாட்டுத் தறிகாரர் கள் நெய்யும் துணியைத் தவிர, வேறு துணியைக் கையினாலுந் தொடுவ தில்லை யென்று விரதங் கொள்ளவேண்டும். இத் தொழிலாளிகள் நம்முடன் பிறந்த சகோதரர்கள். நமது பாஷையே பேசுகிறவர்கள். நமது தெய்வங் களைத் தொழுகிறவர்கள். சுகமோ துக்கமோ நம்முடன் பங்கிட்டு அனுப விக்கிறவர்கள். மிகவும் ஏழைகள். லக்ஷக்கணக் கானவர்கள். இவர்களைப் பாதுகாப்பதற்காக நாம் இந்த நல்ல விரதத்தை மேற்கொள்வது கடமை. அந்த விரதத்தைக் காப்பது எளிதாகும்.

தற்போது நமது தறிகாரர்கள் விதேசி நூல் வலையில் சிக்கிக் கொண் டிருக்கிறார்கள். அவர்களை அவ் வலையி லிருந்து தப்புவிப்பதும் ஒரு முக் கியமான உதவியாகும். கைத்தறிகளில் நெய்வதற்குக் கைராட்டை நூல்





கொடுக்க முயலவேண்டும். இது முடியாத இடங்களில் சுதேசி ஆலை நூலா வது தருவித்துக் கொடுக்க வேண்டும். நமது நாட்டிலுள்ள நூல் வியாபாரி கள் அன்னிய நூலுக்குப் பதிலாக சுதேசி ஆலை நூலைத் தருவித்து விற்பது என்று தீர்மானித்தார்களாயின் நாட்டுக்குப் பெரிய நன்மை செய்தவர்க ளாவார்கள். இதனால் அவர்களுடைய லாபமும் குறைந்துவிடாது.

பம்பாய் ஆமதாபாத் முதலிய இடங்களிலுள்ள ஆலை முதலாளிகள் கைத் தறிகாரர்களைப் பாதுகாக்கும் விஷயத்தில் நம்முடன் ஒத்துழைக்க வேண் டும். நமது அண்டை அயலிலுள்ள சகோதரர்களைப் பட்டினி போட்டுவிட்டு மேற்படி ஆலைகளில் உற்பத்தியாகும் துணிகள் நாம் வாங்க வேண்டுமென்று அவர்கள் எதிர்பார்க்கக்கூடாது. நமது கைத்தறிகளுக்கு வேண்டிய சுதேசி நூல் அவர்கள் உற்பத்திசெய்து தரவேண்டும்.

பொதுஜனங்கள் கூடுமானவரை கை நூல் கைத்தறியில் நெய்த கதர்த் துணியையே வாங்கி அணியவேண்டும். இது முடியாவிட்டால் சுதேசி ஆலை நூலால் கைத்தறியில் நெய்த துணிகளை வாங்கவேண்டும்.

நூல் வியாபாரிகள் நம்முடன் சேர்ந்து ஒத்துழைத்தால் துணிக்கு அயல் நாடுகளை எதிர்பாராத நிலைமையை கைத்தறிகள்மூலம் அடைவோம். நமது நாட்டில் ஒரு பெரிய பிரச்சினையைத் தீர்த்து வைத்தவர்களாவோம்.


## ஏஜண்டுகள் தேவை.

எல்லா ஊர்களிலும் நமது 'ஆனந்தபோதினி' மாத, வாரப் பத்திரிகைகளை விற்பதற்கும், சந்தா சேர்த்துக் கொடுப்பதற்கும், விளம்பரம் சேர்த்துக் கொடுப்பதற்கும் தக்க சாமர்த்தியமுள்ள ஏஜண்டுகள் தேவை. விவரம் அறிய விரும்புவோர் எமக்கு எழுதித் தெரிந்து கொள்ளவும். நமது புஸ்தகங்களும் பத்திரிகைகளும் எல்லா ஸ்டேஷன்களிலுமுள்ள ஹிக்கின்பாத்தம் புஸ்தகசாலைகளில் கிடைக்கும்.

மானேஜர்.



# விசித்திர விநோதம்.

"குட்டு வெளிப்பட்டது"



ஒரு திருடன் ஒரு மாடி வீட்டுக்குள் நுழைந்து பணப் பெட்டியைத் திருடிக்கொண்டு கீழே இறங்கினான். அவனுக்குப் பின்புறம் ஒரு சப்தம் "பெட்டியைக் கீழே வைக்கிறாயா இல்லையா?" என்று கேட்டது.

திரும்பிப் பார்த்தான் திருடன்! வீட்டுக்குரிய எஜமான் "ரிவால்வர்" கையில் பிடித்து நீட்டிக் கொண்டிருப்பதைக் கண்டுவிட்டான். அவன் பணப் பெட்டியைக் கீழே போட்டுவிட்டுச் சரணடைந்து விடலாம் என்று தயாராயிருக்கும்போது ஒரு மெல்லிய குரல் "என்ன அப்பா! தீபாவளிக்கு வாங்கிய என் விளையாட்டுத் துப்பாக்கியை எடுத்துக் கொண்டு என்ன செய்கிறீர்கள்?"

***

"உண்மை"

பையன்கள் பாடம் ஒப்புவிக்கவில்லை என்று வாத்தியார் ஐயாவுக்குப் படு கோபம் பிறந்துவிட்டது. அப்போது பையன்களை நோக்கிக் கூறுகிறார்:—

"நீங்கள் எல்லாரும் சுத்த முட்டாள்கள்! நான் உங்கள் வயதாயிருக்கும்போது மிகுந்த புத்திசாலியாக இருந்தேன்."



ஒரு பையன்:—"நீங்கள் அவ்வளவு புத்திசாலியாயிருந்ததற்கு எனக்கு இப்பொழுது காரணம் விளங்கிவிட்டது. உங்கள் வாத்தியார் நல்ல புத்திமானாயிருந்ததே அதற்குக் காரணம் என்று நினைக்கிறேன்."

மனோ வேலையே மனிதனுக்கு ஆத்மசாந்தி அளிக்கும்.



"பொருத்தமான பதில்"



தகப்பனார்:—"ஏண்டா! நெற்றி வியர்வை நிலத்தில் விழப் பாடுபட்டுச் சம்பாதிக்கின்றவர்களின் மத்தியில் நீ எப்படி வாழப்போகிறாய்?"

மகன்:—"அவர்களுக்குக் கைக்குட்டையும் துவாலும் விற்கப்போகிறேன்."

***

நண்பன்:—"ஏன் மிகுந்த வருத்தமாய் இருக்கிறாய்?"

மைனர்:—"நான் தையல் கடைக்காரனுக்குப் பணந்தரவேணும்—ஐம்பது ரூபாய் அனுப்புங்கள் என்று என் மாமாவுக்கு எழுதி யிருந்தேன்..."

நண்பன்:—"ஏன்? இன்னும் பணம் வரவில்லையா?"

மைனர்:—"அவர் தையல் கடைக்காரனுக்குப் பணத்தை அனுப்பி— பணம் பெற்றுக்கொண்டதற்குத் தையல் கடைக்காரன் கொடுத்த ரசீதை எனக்கு அனுப்பிவிட்டார்"

***

"வாழ்த்து"

ஒரு கிராமக் கணக்குப் பிள்ளை வீட்டில் சிரார்த்தம் நடந்தது. அன்று தாசில்தார் தாலூகா சேவகன் மூலம் ஏதோ தாக்கீது அனுப்பியிருந்தார். சேவகன் ஒரு சாஹிப். கணக்குப் பிள்ளை அவனுக்குச் சம்பிரமமாய்ச் சாப்பாடு நடத்தினார். மிகுந்த திருப்தி ஏற்பட்டுவிட்டது சாஹிபுக்கு.



சாஹிப்:—"என்ன மகராஜ்! இன்று நமது வீட்டில் என்ன விசேஷம்?"

கணக்குப் பிள்ளை:—"தகப்பனாரின் சிரார்த்தம்."

சாஹிப்:—"ஓ! அப்படியா? உங்களுக்கு என்ன குறைவு? ஆண்டவன் உங்களுக்குக் கிருபை செய்வார். திவ்யமான சாப்பாடு. தினம் ஒரு சிரார்த்தம் நடத்தி நீங்கள் நன்றாய் வாழவேணும் என்று அந்த ஆண்டவனை வேண்டுகிறேன்."

சூதுக்கும் அறிவுக்குமுள்ள வேறுபாடு குரங்குக்கும் மனிதனுக்கும் உள்ள வேறுபாடுபோலாகும்.




# கிருஷ்ணஸிங் அல்லது துப்பறியும் சீடன்

(878-ம் பக்கத் தொடர்ச்சி)

**ஆரணி-குப்புசாமி முதலியார்.**

ஆனந் :—வேண்டாம். நீ மட்டுமே இவற்றை யறியவேண்டும். நீ இனிமேல் மங்கம்மாள் என்று கள்ளப் பெயர் வைத்துக்கொண்டிருக்கும் மரகதம்மாளுக்கு சற்றும் பயப்பட வேண்டியதில்லை. எனக்கு எல்லாச் சங்கதிகளும் ஆதியோடந்தமாய்த் தெரியும். இதோடு உன் முதல் குழந்தை கொல்லப்படவில்லை. வியாதியாலேயே மாண்டது. நீ யவளுக்கு யோசனை யின்றி யெழுதிய கடிதம் இதோ என் வசத்திலிருக்கிறது.

சுந்தரம்மாள் :—ஐயா நீர் என்னை ஏமாற்ற இப்படிக் கூறவில்லையே?

ஆனந் :—நான் கூறுவதெல்லாம் உண்மையே; நான் பூரணமாய் நம்புகிறேன்.

சுந்த :—“ உமக்கு மிக்க வந்தனம். அந்தோ கடவுளே! இக்கடிதத்தை யெழுதி விட்டதால் எத்தனையோ வருடங்களாய் நான் படும் மனோ வேதனை கடவுளுக்கே தெரியும் ” என்று கண்களில் நீர் பெருக்கி அக்கடிதத்தை வாங்கி நெருப்பில் எறியப் போனாள்.

ஆனந்தஸிங் அவளைத் தடுத்து “ அவசரப்படாதே. முன்னே அது நீயே யெழுதிய கடிதம் தானாவென்று பார்த்துக்கொள் ” என்றான்.

அம்மாது அதை நன்றாய்ப் பார்த்து ஆம், நான் எழுதியதே என்று கூறிக்கொண்டே நெகிடித் தீயில் எரித்துச் சாம்பலாக்கிவிட்டாள்.

ஆனந் :—நீ ஜெயராமனை மணம் புரிந்துகொண்டது சரியான கலியாணமே யென்று நம்பத்தக்கதா யிருக்கிறது.

சுந்தா :—ஐயோ! நெடு நாளாய் அவ்விஷயத்தில் எனக்குச் சந்தேகமே. நான் ஒரு போதுமே அவர் மேல் அவநம்பகம் வைத்திருக்கலாகாது.

ஆனந் :—மனோன்மணி க்ஷேமமாகவே யிருக்கிறாள். இப்போது அவள் எல்லா வுண்மைகளையு மறிந்து சந்தோஷப்பட்டுக்கொண் டிருப்பாள்.

---

**வாழ்வில் இருளான சமயம் ஏற்பட்டால் ஒளியான சமயங்களை ஞாபகப் படுத்திக்கொள்.**



சுந்தா :—ஆனால் அவள் என் புத்திரி யல்லவென்று உனக்குத் தெரிந்திருக்கும். அந்தோ என் சொந்தப் புத்திரியை நான் என் வீட்டில் வரவழைத்துக் கொள்வதற் கில்லையே!

ஆனந் :—நீ கூறுவது கற்பகத்தைத் தானே?

சுந்தா :—ஆம்.

ஆனந் :—அவள் உன் மகளல்லவென்று நான் கேள்விப்பட்டேன். ஆயினும் அதைப்பற்றி இரண்டொரு நாட்களில் உண்மை தெரிவிக்கிறேன். இதற்கிடையில் நீ ஒருவர்க்கும் அஞ்சவேண்டாம். அத் துஷ்டர்கள் உன் அருகில் வாராதபடி நான் பார்த்துக் கொள்கிறேன். நீ மட்டும் முதலிலேயே இந்த உண்மைகளை யெல்லாம் எனக்குக் கூறி யிருந்தால் எவ்வளவோ நலமா யிருந்திருக்கும்.

சுந்தரம்மாள் :—அந்தோ நான் இன்று தானே உம்மைக் கண்டேன்.

ஆனந்த :—என் மனோன்மணி வீட்டை விட்டுப் போய்விட்ட மறுநாள் இங்கு வந்து உங்களை யெல்லாம் விசாரித்தது நானன்றோ.

சுந்தரம்மாள் இதைக் கேட்டதும் மிக்க வியப்படைந்து “ அப்போது வந்தது வயது முதிர்ந்த கிழவர் என்றும் அவர் கொல்லப்பட்டா ரென்றும் என் கணவர் கூறினாரே.” என்றாள்.

ஆனந்த :—அவர் என் தந்தை. நான் அவரைப் போல் மாறுவேட மணிந்து வந்ததால், அத்துஷ்டர்கள் அவரைக் கொன்று விட்டார்கள்.

சுந்தா :—அந்தோ நான் கொலையாளி யென்றும், இன்னும் களவு செய்தவளென்றும் நம்பிக்கொண்டிரா விட்டால் நான் யாரா யிருந்தாலும் அப்போதே யாவும் கூறிவிட்டிருப்பேன்.

ஆனந்த :—அவை யாவும் செத்த சங்கதிகளாய்விட்டன. இனி நீ யொருவிதக் கலவரமு மின்றி பூரண சந்தோஷத்தோடு நிம்மதியாய் இருக்க வேண்டியதே. ஒருவர்க்கும் எதற்காகவும் அஞ்ச வேண்டாம். ஒன்று மட்டும் கூறுகிறேன். அதாவது, உன் கணவருக்கு ஒரு சங்கதியும் கூறாதே. ஏனெனில் அவருக்கு மனோன்மணி மேல் இருக்கும் வாஞ்சையால் இனி நடக்கவேண்டிய காரியங்களைக் கெடுத்து விடுவார்.

***

அன்று மாலை ஆனந்தஸிங் ஒரு மூட்டைக் கூலியாள் போல் வேடமணிந்துகொண்டு கள்ளர்கள் வசிப்பதாய்க் கூறிய வீட்டை நோக்கிச் சென்றான். அவன் மனதில் ஒரு முடிவான யோசனை ஒன்றுமில்லை. ஆனால் மங்கம்மாள் என்ற மரகதத்தை எப்படியாயினும் காணவேண்டு மென்பது அவன் கருத்து. ஏனெனில் ஜெயராமன் இறந்தது சரியான வழியிலல்ல வென்பது அவன் எண்ணம். ஆகையால் திடீரென்று அவள் மேல் குற்றம் சாட்டினால் அதன் மேல் என்ன வெளிவருகிறது பார்ப்போம் என்பது அவன் நோக்கம்.

---

**அளவுகடவாத் தன்மை ஆசையின் கடிவாளம்.**

ஆனந்தஸிங் அவ்வீட்டின் எதிரிலுள்ள ஒரு ஹோட்டலில் போய் உட்கார்ந்தான். சுற்று முற்றும் பார்த்தபோது, அங்கிருப்பவர்களெல்லாம் பேர்போன போக்கிரிப் பயல்களும் கொலையாளிகளும் என்று தெரிந்து கொண்டான். அவன் அங்கு வந்த ஐந்தாறு நிமிடங்களுக்குள், குள்ளன் அங்கு வந்ததும் சுற்று முற்றும் பார்த்து உடனே வெளியிற் சென்றான்.

அதைக்கண்ட ஆனந்தஸிங் சந்தேகங் கொண்டு உடனே எழுந்து அவனைப் பின்பற்றிச் சென்றான். குள்ளன் வெளியில் சென்றதும் அங்கிருந்த பிச்சனை யழைத்துச் சற்று நேரம் ரகசியமாய்ப் பேசிக்கொண்டிருந்து, பிறகு இருட்டில் மறைந்திருந்த யாரையோ கூப்பிட்டான். உடனே கிட்டு அவர்களோடு வந்து கூடினான். மூவரும் சற்று நேரம் என்னமோ குசு குசு வென்று பேசிவிட்டு ஹோட்டலுக்குள் சென்றார்கள். ஆனந்தஸிங் சற்று நேரங் கழித்தபின் உள்ளே சென்று பார்த்தபோது அவர்கள் அங்குக் காணப்படவில்லை.

ஆனந்தஸிங் "இவர்கள் மாடி மேல் சென்றிருப்பார்கள். வரும் வரையில் நாம் காத்துக் கொண்டிருக்க வேண்டும்" என்றும், நினைத்துக்கொண்டிருந்தான். கடைசியில் இரவு 9-மணிக்கு மேல் அவர்கள் மாடியிலிருந்து இறங்கியதும் வெளியிற் சென்றார்கள். ஆனந்தஸிங் பின்னாலேயே சென்றான்.

அவர்கள் மூவரும் நேராய் வீதியைக் குறுக்காய்த் தாண்டி எதிர் சந்தி லுள்ள ஒரு ஆபாசமான வீட்டிற்குள் நுழைந்தார்கள். ஆனந்தஸிங்குக்கு முனியன் கூறிய அடையாளங்களால் அதுதான் இவர்கள் வசிக்கும் வீடென்று தெரிந்து கொண்டான். ஆகையால் அவன் துணிந்து அவர்களைத் தொடர்ந்து சென்றான்.

கள்ளர் அலட்சியமாய்க் கதவுகளைத் திறந்து கொண்டு மேல் மாடிக்கு ஏறினார்கள். அங்கு மரப்படிகள் நாள்பட்டு தளர்ந்துபோய் ஆள் ஏறினால் சந்தடியை யுண்டாக்கியது. ஆகையால் ஆனந்தஸிங் மிக்க ஜாக்கிரதையோடு ஏற வேண்டியதாயிற்று. அதற்குள் கள்ளர்கள் மேலிருந்த ஒரு அறைக்குள் நுழைந்ததும் அங்கு உண்டான சந்தடியால் தான் ஏறும் சத்தம் கேட்காதென்று ஆனந்தஸிங் தைரியத்தோடு துரிதமாய்ச் சென்று அறையின் வாசற்படியை யடைந்தான்.

அறைக்குள் உண்டான சத்தத்தால் முனியன் தங்கள் இரகசியங்களை வெளியிட்டு விட்டான் என்று கள்ளர் அறிந்து கொண்டார்களென்று ஆனந்தஸிங் தெரிந்துகொண்டான். உடனே அடிக்கும் சத்தமும், ஒரு ஸ்திரீ வீறிட்டலறியதையும் கேட்டதே அவனுக்கு சங்கதி நிச்சயமாய் விட்டது.

ஆனந்தஸிங் கதவை யுடைத்துக்கொண்டு அறைக்குள் நுழையப் போகும் சமயம், கூச்சலிட்ட ஸ்திரீயின் சத்தம் அடியோடடங்கி விட்டதும் ஆட்கள் துரிதமாய் வெளியில் வரும் சத்தம் கேட்டது. ஆனந்தஸிங் உடனே

---

ஒரு காரியத்தை நன்றாய்ச் செய்தற்குரிய வெகுமதி-அதைச் செய்து முடித்ததே.



வாசற்படியை விட்டு விலகி அருகிலிருந்த இருளில் சட்டென்று மறைந்து கொண்டான்.

உடனே கள்ளர்கள் மூவரும் துரிதமாய் வெளியிற் சென்றார்கள். ஆனந்தஸிங் உடனே அறைக்குள் சென்றான். அவன் சந்தேகம் நிச்சயமாய் விட்டது. ஏனெனில் அறைக்குள் ஒரு ஆடவனும் ஒரு ஸ்திரீயும் ஒருவர் மேலொருவர் விழுந்து கிடக்கிறார்கள்.

## 22-வது அத்தியாயம்

சட்டென்று குனிந்து பார்த்தான். அடியில் விழுந்து கிடப்பது முனியனென்றும் மேலேவிழுந்து கிடப்பது மரகதம்மாள் என்ற மங்கம்மாளென்றும் தெரிந்தது.

அம்மாது இவனைக்கண்டதும் கண்களைத்திறந்து, "ஆ! நீ...யா...ர். ஹோ! என் பிராணன் போகிறது..." என்றாள்.

ஆனந்தஸிங்:—"உலகநாதம் பிள்ளையைப்பற்றிய இந்தக் கேஸைக்கண்டு பிடிப்பதற்காக அமர்த்தப்பட்ட துப்பறிபவன் நான்றான்" என்றான்.

அம்மாது தன் பிராணன்போகும் அத்தருவாயிலும், மறுபடி கண்களைத் திறந்து வெறுப்போடு அவனை நோக்கி, கரங்களை நீட்டி யவனைத் தூரத்தள்ள முயன்றாள். ஆனால் அதற்குள் தலைநிற்காமல் சாய்ந்துவிடக் கீழே விழுந்து ஆவியை விட்டாள்.

அவள் பிராணன் போகும் சமயத்தில் தன் மார்பின் ஒருபக்கத்தைக் கையால் ஆத்திரத்தோடு பற்றினாள். ஆனந்தஸிங் சந்தேகப் பட்டான். உடனே அந்த விடத்தைச் சோதித்தபோது, அவளுடைய உட்சட்டையில் அந்த விடத்தில் சட்டையின் ஜோபியில் ஒரு சிறு நோட்புத்தகம் வைத்துத் தைக்கப்பட் டிருந்தது. அதன்மேல் ஆனந்தஸிங் இருவரையும் சோதித்த போது, ஒவ்வொருவரிடத்திலும் இருபதினாயிரம் பெறும்படியான நோட்டுகளிருந்தன.

ஆனந்தஸிங் நாம் சீக்கிரம் இதைவிட்டுப் போய்விடவேண்டுமென்று கருதி வெளியில் புறப்பட்டான். உடனே கள்ளர் தங்கள் கொலைத்தொழிலை மறைத்து விடவேண்டுமென்று வீட்டிற்குத் தீ வைத்துவிட்டுப் போய்விட்டார்களென்று தெரிந்தது.

அவன் வரையில் அவனுக்குப் பயமில்லை. ஏனெனில் வீட்டின் ஓர்பாகத்தில் மேல் தளம் வரையில் எட்டும்படியான ஒரு ஏணி யிருந்தது. அதைக் கண்டதே அவன் இறந்தவளையும் முனியனையும் ஒவ்வொருவரையும் தூக்கிக் கொண்டுபோய் மேல் தளத்தில் சேர்த்து விட்டு அப்படி கூரைகளின் மேலேயே இருவரையும் நான்கைந்து வீடுகளுக்கு அப்பால் இருந்த ஒரு வீட்டின் தளத்தின்மேல் கொண்டுபோய் படுக்க வைத்துவிட்டு, அங்கிருந்து உடனே புறப்பட்டு தீ யணைக்கும் இயந்திரம் இருக்குமிடத்திற்குச் சென்று அதை யுடனே யனுப்பும்படி யேற்பாடு செய்துவிட்டுத் திரும்பி வந்தான்.

---

வேலை செய்வதில் அவசரமுங்கூடாது—இடையில் நிறுத்தி இளைப்பாறுவதுங் கூடாது.




## தலை வழுக்கையுடையோர் பெருமை:

தலைவழுக்கை ஏற்படுவது வெகு வேகமாக அதிகரித்துவருகிறது. இன்னும் சில நூற்றாண்டுகளில் நாற்பது வயதுக்கு மேற்பட்டவர்கள் அனைவருக்குமே தலை வழுக்கையாகப் போய் விடுமெனத் தெரிகிறது. பார்லிமெண்டின் காமன்ஸ் சபை, பிரபுக்கள் சபைகளில் இருப்போரில் பெரும்பான்மையோர் தலை வழுக்கையாகவே இருக்கிறது. சரித்திரத்தில் பெயர்பெற்ற எல்லா மன்னர்களின் தலைகளும் வழுக்கையாகவே இருந்திருக்கின்றன. இத்தாலியில் சர்வாதிகாரியாக விளங்கும் 'முஸோலினியின் தலை தலையும், போப் குருவின் தலையும் வழுக்கையே. பெரிய வியாபாரம் நடத்திவருவோரின் தலைகளும் வழுக்கையாகவே இருக்கின்றன.

## வைக்கோல் கடிகாரம்:—

ஒரு ஜர்மனியர் மிக்க உறுதியான பெரிய கடியாரமொன்று செய்திருக்கிறார். இதில் வைக்கோலைத் தவிர வேறு எப்பொருளும் சேர்க்கப்படவில்லை. சக்கரங்கள் முட்கள், ஸ்பிரிங்குகள் ஆகிய அனைத்தும் வைக்கோலாலேயே செய்யப்பட்டிருக்கின்றன. தம் ஓய்வு நேரங்களில் மட்டும் இதைச் செய்துவந்ததால் இதைச் செய்து முடிக்கப்பதினைந்து வருஷங்களாயினவாம்.

## கண்ணாடிப் பாம்பு என்றால் என்ன?:-

கண்ணாடிப் பாம்பு, கண்ணாடியால் செய்யப்பட்ட பாம்பு அல்ல; பாம்பும் அல்ல சிறிது ஸ்பரிசம் பட்டபோதிலும் இது உடைந்து போகும் தன்மை பெற்று இருக்கிறது. எனவே இப்பெயர் இதற்கு வந்தது போலும். இது பல்லியைப் போன்று இருந்தாலும பல்லிக்கும், இப்பாம்பிற்கும் சில வேறுபாடுகள் உண்டு. இதற்குக் கண்ணிமைப் பைகளும், மூகவாய்க் கட்டைகளும் உள்ளது. அச்சம் விளைந்தபோது மேற்கூறிய பிராணி தனது தசைகளைச் சுருக்கிக்கொள்கின்றது, ஒரு கொம்பினால் இப்பிராணியைத் தட்டினால், பிராணி துண்டு துண்டுகளாக உடைந்து போகின்றது. இன்னோன்ன பிராணிகள் வட அமெரிக்காவில் அதிகமாய்க் கிடைக்கின்றன.

## மனித வேட்டையாடும் தேசம்:—

நியூ கினியாவில் மனிதவேட்டை இப்போதும் நடைபெற்று வருகிறதாம். ஒரு கூட்டத்தார் ஆயுதபாணிகளாகச் சென்று 30—பேரை வேட்டையாடிச் சிரங்களைக் கொய்து கம்பங்களில் பகிரங்கமாகத் தூக்கிவிட்டனர். உடல்களின் இறைச்சியைச் சமையல் செய்து பெரிய விருந்தும் நடத்தினர். தக்க பிராயம் அடைந்தான் என்பதற்கு அறிகுறியாக ஒவ்வொரு வாலிபனும் ஒரு சிரசு கொய்து கம்பத்தில் கட்டித் தூக்கிப் பகிரங்கமாய்க் எல்லோருக்கும் காட்ட வேண்டுமாம்.

அறிஞனுக்கு எல்லா நாடும் தாய்நாடே-சாந்தமான மனதிற்கு எந்த இடமும் அரண்மனையே.



## உலகத்திலே மிகக் கெட்ட மனிதன்:

பர்க் என்பவன் ஸெயிண்டுஜோஸப், மிஸ் ஸேரி என்றவிடத்தில், தனது மாமன் வீட்டில் நித்திரைசெய்திருந்தான். பர்க் எப்போதும் தனது உடையிலேயே ஒரு கைத்துப் பாக்கியைவைத்திருப்பது வழக்கமாம். பர்க் இருபத்தொரு பெயரைக் கொலை செய்திருக்கிறான். மேலும் பர்க் பெரிய திருடரில் ஒருவனாகும். ஆறு மாகாணங்கள் நெடுநாளாக பர்க்கைக் கைதுசெய்ய பல முயற்சிகள் செய்து வந்துள்ளார். பர்க்கை போலீஸார் படுகையிலேயே வெகு தந்திரமாகக் கைதுசெய்தனர். ஸெயிண்டு ஜோஸப் ஜெயிலில் அடைத்தனர். போலீஸாரை பர்க் இன்னம் பல நாட்களாக ஏமாற்றியிருக்கலாம். ஆனால் தெருவில் நடந்த ஓர் சண்டையில் பர்க் கலந்து பெருங் கூச்சல் செய்தான். போலீஸ் உத்தியோகஸ்தர் பர்க்கைக் கைப்பற்றி மேற்படி சச்சரவு செயததற்கு, நஷ்டஈடு கேட்கின் பர்க் அதைக் கொடுக்க மறுத்துவிட்டான். மேலும் அப்போலீஸ்காரனைச் சுட்டுக் கொன்றான். போலீஸ்காரர்கள் பர்க்கைக் கைது செய்ய உடனே தக்க முயற்சிகள் எடுத்துக் கொண்டனர். பர்க் இச்சம்பவத்திற்குப் பின் தனது மாமனார் வீட்டிற் சென்று நித்திரை செய்து கொண்டிருந்தான். அச்சமயம் அவரைப் போலீஸ்காரர் எளிதில் கைது செய்தனர்.

## பணக்காரியின் திருட்டு:—

லண்டன் ஆக்ஸ்போர்ட் தெருவில் உள்ள ஒரு வர்த்தகசாலையில் சில தினங்களுக்கு முன் சாமான் வாங்கச் சென்றிருந்த ஒரு பணக்காரப் பெண் இன்னொரு பெண்ணின் பணப் பையையும் சட்டையையும் திருடி அகப்பட்டுக்கொண்டு நீதி ஸ்தலத்தில் 20 பவுன் அபராதம் விதிக்கப் பெற்றாள்.

## மிகச் சிறிய பிடில்:—

விக்டோரியா ராணி காலத்தில் அரண்மனையைக் காவல் செய்த குதிரைப் பட்டாளத்தைச் சேர்ந்த ஸ்ரீ. டி. என். அலெக்ஜாந்திரா என்பவர். மிகமிகச் சிறிய பிடில் ஒன்றைச் செய்திருக்கிறார். அது இரண்டு அங்குலம் தான் நீளமுள்ளதாக இருக்கிறது.

## பிரான்சு தேசத்தின் நூதன சட்டம்:

பிரான்சு தேசத்தில் வசிக்கும் குழந்தைகளுக்கு "கிராகோரியன்" பஞ்சாங்கத்திலுள்ள ரிஷிகளின் பெயர்களைத் தவிர வேறு பெயர்கள் சூட்டக்கூடாதாம், எட்வர்ட் மே என்னும் ஒரு ஆங்கிலேயர் பிரான்சு தேசத்திலேயே வெகு காலமாக வசித்துவந்தார். அப்படி வசித்து வந்ததால் அவரும் ஒரு பிரஞ்சுக்காரனுக்குள்ள உரிமைகளைப் பெற்றார். அவர் தனது குழந்தைக்கு "ஜ-ஒன் வில்ஸ்ட்" என்னும் பெயரிட விரும்பினார். ஆனால் அந்நகர சபைத் தலைவர் அவ்வாறு பெயரிட மறுத்ததுந் தவிர, மேற்படி ஆங்கிலேயரின் மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரும் படியாக போலீஸ்காரரையுந் தூண்டினராம். ஆங்கிலேயர் தனது குழந்தைக்குப் பெயர் இடாததே இதற்குக் காரணமாகும். கூடியசீக்கிரத்தில் இது ஒரு பெரிய வழக்காக முதிர்ந்து விடும் போலத் தோன்றுகிறது.

இன்சொற்களின் விலை அற்பம், ஆனால் அதன் மதிப்போ அதிகம்.

# "ஆனந்தபோதினி" பஞ்சாங்கம்.

பிரஜோற்பத்தி௵ ஆடி௴—கலியுகாதி 5033, சாலிவாகனம் 1854,
பசலி 1341, கொல்லமாண்டு 1106, ஹிஜரி 1350,
இங்கிலீஷ் 1931௵ ஜூலை௴—ஆகஸ்டு௴

| ஆடி௴ | ஜூலை௴ | வாரம். | திதி. | நக்ஷத்திரம் | யோகம். | விசேஷங்கள். |
|---|---|---|---|---|---|---|
| 1 | 16 | வியா | பிர23-33 | பூச42-23 | அ42-23சி | தக்ஷிணாயன புண்யகாலம் |
| 2 | 17 | வெ | துதி16-50 | ஆயி37-30 | மர60 | கரிநாள், ரதயாத்ர துதியா |
| 3 | 18 | சனி | திரி9-50 | மகம்32-33 | அ32-33சி | |
| 4 | 19 | ஞா | சது2-48 பஞ்56-8 | பூரம்27-45 | சி27-45அ | |
| 5 | 20 | திங் | சஷ்50-8 | உத்23-23 | சித்60 | |
| 6 | 21 | செவ் | சப்44-40 | அஸ்19-33 | சித்60 | |
| 7 | 22 | புதன் | அஷ்40-0 | சித்16-25 | சித்60 | |
| 8 | 23 | வியா | நவ35-55 | சுவா14-5 | அ14-5சி | |
| 9 | 24 | வெ | தச32-50 | விசா11-30 | சித்60 | |
| 10 | 25 | சனி | ஏகா30-35 | அனு11-43 | சித்60 | |
| 11 | 26 | ஞா | துவா29-8 | கே11-55 | ம11-55அ | |
| 12 | 27 | திங் | திர28-35 | மூல12-58 | சி12-58மா | |
| 13 | 28 | செவ் | சது29-13 | பூரா14-58 | சி14-58அ | கணிதாரம்பம் |
| 14 | 29 | புதன் | ○30-53 | உத்18-8 | அ22-33சி | பௌர்ணமி |
| 15 | 30 | வியா | பிர33-58 | திரு22-33 | சித்60 | 10-க்குள் மழை |
| 16 | 31 | வெ | துதி38-0 | அவி28-0 | சித்60 | அசூன்ய சயன விரதம் |
| 17 | 1931௵ ஆகஸ்டு௴ 1 | சனி | திரி43-15 | சத34-35 | அ34-35ம | யாத்திரை செய்ய |
| 18 | 2 | ஞா | சது49-15 | பூர41-55 | சி41-55அ | காவேரி பெருக்கு |
| 19 | 3 | திங் | பஞ்55-35 | உத்49-43 | சித்60 | சீமந்தம், சுப முகூர்த்தம் |
| 20 | 4 | செவ் | சஷ்60 | ரே57-30 | சித்60 | வியாதியஸ்தர் குளிக்க |
| 21 | 5 | புத | சஷ்2-3 | அஸ்60 | மர60 | சுபகாரியங்கள் விலக்க |
| 22 | 6 | வியா | சப்7-30 | அஸ்4-30 | அ4-30சி | மூலிகை உபயோகிக்க |
| 23 | 7 | வெ | அஷ்11-45 | ப✻10-15 | சித்60 | கிருத்திகை |
| 24 | 8 | சனி | நவ14-8 | கிரு14-18 | அமி60 | வியாதியஸ்தர் குளிக்க |
| 25 | 9 | ஞா | தச14-35 | ரோ14-23 | சித்60 | சீமந்தம், உழவு செய்ய |
| 26 | 10 | திங் | ஏகா13-0 | மிரு16-28 | அ16-28சி | சர்வ மத்வ ஏகாதசி |
| 27 | 11 | செவ் | து9-30 | திரு14-43 | மர14-43சி | வியாதியஸ்தர் குளிக்க |
| 28 | 12 | புத | திர4-13 சது57-35 | புன11-10 | சித்60 | மாசசிவராத்திரி, இருஷியாரம்பம் செய்ய |
| 29 | 13 | வியா | ●49-53 | பூச6-23 | அ6-23சித் | சர்வத்திர அமாவாசை |
| 30 | 14 | வெ | பிர41-35 | ஆயி0-38 மக54-20 | மர60 | சிராவண சுத்தம், அவமாகம் [ம் |
| 31 | 15 | சனி | துதி33-10 | பூர47-58 | சி47-58மா | சந்திரதரிசனம், ஆடிப்பூர |
| 32 | 16 | ஞா | திரி25-0 | உத்41-56 | அயி60 | சுபமுகூர்த்தம் செய்ய |

| | | | |
|---|---|---|---|
| ராகு | | | சுக் |
| | 5-கன்-செவ்<br>8-சிம்ம-புத<br>13-கடக-சுக் | | புத சூரி குரு<br>செவ் |
| சனி | | | கே |

PRINTED & PUBLISHED BY N. MUNISAWMI MUDALIAR,
AT THE "ANANDA BODHINI" PRESS,
No. 6, LAWYER CHINNATHAMBI MUDALI ST., MADRAS.


# இனாம்! இனாம்!!

கீழ்க்கண்ட ரிஸ்ட்வாட்ச்சுகளில் ஏதாவது ஒன்று வாங்குபவருக்கு பக்கங்களில் காண்பிக்கப்பட்டுள்ள பாக்கெட் கெடியாரம், டைம்பீஸ்

## ஆக 2 கெடியாரங்கள் இனாம் கொடுக்கப்படும்




ரிஸ்ட் வாட்ச் 1-க்கு விலை ரூபா 7 8 0

வேண்டுபவர்கள் எந்த நெம்பருள்ள ரிஸ்ட்வாட்ச் தேவையென்பதை குறித்து எழுதவும்.

## 22-காரட் ரோல்டு கோல்டு பிளேட்
## தங்கடயல் கை கெடியாரங்கள்.




இதிற்கண்ட எந்த ஷேப் வேண்டுமானாலும் அனுப்பப்படும். பிசில்கள் மிகவும் அழகாயும், டயல் பளபளப்பாயும் வெகு நூதன வேலைப்பாடுடன் தயார் செய்யப்பட்டது. வெகு நாளைக்கு உழைக்கக்கூடியதென்று கண்டிப்பாய் அறியவும். ஒவ்வொரு கெடியாரத்துடன் கையில் அணிய பிராஸ்லெட் கைச்சங்கிலி ஒன்றும் 14-காரட் கோல்டு பிளேட் பொன் நிப் பவுண்டன் பேனா ஒன்றும் ஆக இரண்டு இனாம் சேர்த்து அனுப்பப்படும். கெடியாரத்திற்கு 5 வருஷம் உத்திரவாதம் கொடுக்கப்படும்.

ஒரு கெடியாரத்தின் விலை ரூபா 4 14 0

சுபீரியர் வாட்சு கம்பெனி, தபால் பெட்டி நெ. 167, மதராஸ்.

## மானிடர்க்கு மகிழ்ச்சியைத்தரும்

# மகா சந்தனாதித் தைலம்.

அன்பர்களே! வெயிற் காலத்திற்கு இன்பந்தரும் இந்த மகா சந்தனாதித் தைலம், சிறந்த பல மூலிகைகளாலும், உயர்ந்த சந்தனக் கட்டைச் சத்தினாலும், பசும்பால் முதலிய சிரேஷ்டமான கற்க வகைகளினாலும் சித்த ஆயுர்வேத முறைப்படி பெரும் பிரயாசையின் மேல் செய்யப்பட்டு இப்போது வெளி வந்திருக்கிறது.



நூற்றுக்கணக்கான பணச் செலவின் மேல் தீர்க்கவேண்டிய வியாதிகளை யெல்லாம், இந்தச் சந்தனாதித் தைலத்தினால் தீர்த்துக்கொள்ளலாம்; இதற்குப் பல கனவான்கள் அநேகம் நற்சாக்ஷிப் பத்திரங்கள் அனுப்பி யிருக்கின்றனர்.

இத்தைலத்தை வாரத்திற்கு இரண்டு முறையாக, சிரசில் தேய்த்துச் சிகைக்காயிட்டு வெந்நீரில் ஸ்நானஞ் செய்து வருவதால் கண் எரிச்சல், கண்களில் நீர் வடிதல், காதுநோய், தலைப்பாரம், மூளைக் கொதிப்பு, ஒற்றைத் தலைவலி, மண்டையிடி, சாலேஸ்வரம் பித்தபாண்டு, காமாலை, அஸ்தி சுரம், நாவறட்சி, கைகால் எரிவு, தேக வெளுப்பு, மேக ரோகங்கள், அதிக வெட்டையினாலுண்டான துர்நாற்றங்கள், சொறி, சிரங்குகள், நமைச்சல், பீனிசம், கபாலசூலை முதலிய வியாதிகள் நீங்கித் தேகத்திற்குச் சுகமுண்டாகும்; ஞாபக சக்தி அதிகப்படும்; கண்ணிற்கு நல்ல ஒளியுண்டாகும்.

